காவ்யா

# பெண்ணியமும் கலை இலக்கியப்பிரதிகளும்



T
891.481 08
Sh 18 P

T
891.481 08
Sh 18 P

தொகுப்பாசிரியர் : சண்முகசுந்தரம்

INDIAN INSTITUTE OF
ADVANCED STUDY
LIBRARY SIMLA

# பெண்ணியமும் கலை இலக்கிய பிரதிகளும்

தொகுப்பாசிரியர் :
டாக்டர் சு. சண்முகசுந்தரம்

CATALOGUED

காவ்யா

Penniyamum Kalai Ilakkiya Pirathikalum
(A Collection of articls)
By Dr. S. SHANMUGA SUNDARAM
C→To the authors
First Edition December 1994

Published by
Smt. Lakshmi Sundaram

KAAVYA
16, 17th 'E' CROSS
INDIRANAGAR II STAGE
BANGALORE 560 038

Cover Design by TamilNadan

Price Rs 30 = 00

T
891.481 08
Sh18 P

Acc. No. 89996
Date 16-7-98

IIAS, Shimla
Library
T 891.481 08 Sh 18 P
00089996

அச்சமைப்பு:
வைகை அச்சகம்
30 பத்மநாபநகர்
சூளைமேடு சென்னை 94
தொ. பே. 42 89 63

# ○ உள்ளே


1. டாக்டர் வி. சரோஜா
பெண்ணியம் - வரையறை, வகைகள் 9

2. டாக்டர் தி. சி. சத்தியம்
பெண்ணியமும் உரிப்பொருளும் 53

3. டாக்டர் அ. அ. மணவாளன்
சிலப்பதிகாரம் ஒரு 'பெண்ணிய' நோக்கு 58

4. லிண்டா கிறிஸ்டி
வேதநாயகம் பிள்ளையின் நாவல்கள்
—ஒரு பெண்ணிய நோக்குத் திறனாய்வு 69

5. அ. மங்கை
'பெண்ணியம்' - வரையறைச் சிக்கல்கள் :
பாமாவின் கருக்கு 79

6. டாக்டர் சு. வேங்கடராமன்
பெண்ணிய நோக்கில் அம்பையின் சிறு கதைகள் 88

7. சூரியதீபன்
பெண்கள் - சமகால எழுத்தாளர் பார்வைகள் 96

8. டாக்டர் செண்பகம் ராமசாமி
தமிழ் நவீன நாடகங்களும் பெண்ணியமும் 109

9. க. நாகநந்தினி
பிம்பங்களின் ஊடே... 126

10. சி. எஸ். லட்சுமி
தமிழகத்தில் தாய், தாய்க்குலம் மற்றும்
தாய் - அரசியல் 135

# தொகுப்புரை

சொல்லப் போனால் இது 'பெண்ணியத்தின்' இரண்டாவது பாகம். முதல் தொகுதி நல்ல வரவேற்பைப் பெற்றது. அத்தோடு சிலர் சிறு சலசலப்பை ஏற்படுத்தியிருந்தனர். இது புதிய துறை. எண்ணிப் பார்க்கவும் எழுதிப் பார்க்கவும் இத்துறையில் நிறைய விஷயங்கள் உள்ளன. சிலர் எழுதியும் வருகின்றனர்.

பெண்ணியம் பற்றி வரையறை, வகைகள் ஆகிய வற்றோடு சிலப்பதிகாரம் எனும் காப்பியம் தொடங்கி நாவல், சிறுகதை, நாடகம், சினிமா, சமூகம், நாட்டுப்புற இலக்கியம் ஆகிய பிரதிகளில் பெண்ணிய கருத்துக்கள் எவ்வாறு அடங்கியுள்ளன என்று

பத்து பேர் கட்டுரைகள் எழுதியுள்ளனர். எனக்காக எழுதியவர்கள் நான்கு பேர். ஏற்கனவே மேலும், நாவாவின் ஆராய்ச்சி, ங், ஆய்வுக் கோவை, மனஓசை ஆகியவற்றில் வெளிவந்தவற்றை இணைத்துள்ளேன். என்னோடு ஒத்துழைத்தவர்களுக்கும் அனுமதி தந்து உதவியவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

காவ்யாவின் முயற்சிகளுக்கு வாசகர்கள் தொடர்ந்து உதவுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

டாக்டர் சண்முகசுந்தரம்

# பெண்ணியமும்
# கலை இலக்கிய பிரதிகளும்

# பெண்ணியம் - வரையறை, வகைகள்

டாக்டர் வி. சரோஜா

"Life came from food, food came from soil, man came from women, women give life. It is not astonishing that God was a woman"1

முன்னுரை : நம் நாட்டில் வளம் தந்து ஓடும் நதிகள் பெண்களாக உருவகிக்கப்படுகின்றன. விண்மீன் கூட்டங்கள் கார்த்திகை மகளிராகவும், கற்புடைப் பெண்களாகவும் வர்ணிக்கப்படுகின்றன. இயற்கை, நமக்கு அன்னை ஆகின்றாள். மானுடக் குழந்தைகளின் வாயிலிருந்து முதலில் உதிரும் சொல் 'அம்மா' என்பதுதான். அவ்வளவு ஏன்? உலகில் ஒவ்வொரு மாந்தனுக்கும் அவனது நாடு 'அன்னை பூமி'யாகின்றது. பெண் கல்விக்குத் தெய்வம்-செல்வத்திற்குத் தேவதை - வீரத்திற்குத் தாய் —இவ்வாறு தெய்வமாகவும், அன்னையாகவும் வணங்கப்பெறும் பெண், பல காலமாகப் பல்லாற்றானும் ஒடுக்கப்படுகிறாள். அரசு, பாட்டாளிகளை அடக்க இயந்திரத்தை நுழைத்தது போல; ஆணாதிக்க அரசு, மதம், குடும்பம், கலை, இலக்கியம் போன்ற கருத்தியல்களாலும் வன்முறைகளைச் செலுத்திப் பெண்ணை அடக்கி ஆண்டு வந்துள்ளது.

"அற்ற தலைபோக அறாத தலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ—வற்றல்
மரமனை யானுக்கிந்த மானை வகுத்த
பிரம்மனை யான் காணப் பெறின்"

எனும் பிற்கால அவ்வை மூதாட்டி கூற்று, புரட்சிக் குரலாக ஒலிக்கிறது.

இறைவன் முன் ஆணும் பெண்ணும் சமம். அவ்வாறிருக்கப் பெண் மட்டும் எப்படிச் சமுதாயக் குட்டையில் வீசி எறியப்பட்ட மட்டையானாள்? ஏன் சமத்துவம் இல்லை?

மூன்று கூறுகள் கொண்டு நோக்கலாம்—

1. உடலியல் கூறு.
2. உளவியல் கூறு.
3. சமூகவியல் (கூறு) பார்வை.

உடல் எவ்வாறு வேறுபடுகிறது? ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது தான் சமூகம்—இன்றேல், மனித மறு உற்பத்தி இராது, மனித இயக்கம் ஸ்தம்பித்துப் போகும். ஒரு ஜீவனைக் கருப்பையில் அடக்கி வைத்து உயிர்ப்பிக்கப் பெண்ணால்தான் இயலும்.

உடலியல் ரீதியாக மட்டுமின்றி உளவியல் வழியாகவும் தாய்மைக் கூறுகள்—கனிவு, இரக்கம், மென்மை. வயிற்றுக் குள்ளிருக்கும் சிசுவுக்குத் தீங்கு நேரக் கூடாதென எண்ணி மயக்க மருந்தை மறுக்கும் தாயன்புக்கு ஈடு இணை ஏது? உடல், உள்ள(ம்) வலிமையுள்ளவள் தான் பெண். இருந்தும், இந்தியாவில் பெண்ணுக்கு மட்டும் உரிமை வாழ்வு மறுக்கப் பட்டது. ஏன்?

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற பண்புகள் சிறுகச் சிறுக ஏற்றப்பட்டு, அவள் வீடென்னும் தங்கக் கூண்டுக்குள் அடைக்கப்பட்டாள். ஆண்?—வலிமை, கோபம், அதிகாரம், அடக்கி ஆளல், பூப்பு கர்ப்பம் பிரசவ காலத்தில் பெண்மைக் குள்ள பலவீனம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு மேலாதிக்கம் செய்தல்......

ஒரு தார மணமும் பெண்ணின் கைகளில் விலங்கிட்டது- சொத்துரிமை மறுக்கப்பட்டது - கல்வி புறக்கணிக்கப் பட்டது......

இன்னும் இவை போன்ற எத்தனையோ கொடுமைகள்.

இதற்கெல்லாம் சமுதாயப் பார்வையே காரணம் என மானுடவியல் வல்லுநர்கள் ஒரு முடிவுக்கு வருகின்றனர்.

''சமூகக் கட்டமைப்பின் மாற்றமும், சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கான மேல்நிலை ஆக்கமும்—குறிப்பாகப் பெண் இனத்தின் சமத்துவமும் உருவாகவில்லை என்றால் நாம் பெற்றிருக்கும் சுயராஜ்யம் பொருளற்றதாகி விடும்''2 எனும் காந்தியடிகளின் வரலாற்றுப் பார்வை, ஆடவரையும் பெண்டிரையும் நம் நாட்டிலுள்ள பாரம்பரியப் பண்பாடு ஆகிய வற்றைக் காக்க, பெண்ணுரிமை கேட்டுப் புறப்பட வைத்தது. பெண்நிலைவாதிகள் பலர் சீர்திருத்தக் களத்தில் குதித்தனர். பெண்ணியம் எழுச்சி பெற்றது.

## பெண்ணியம் என்றால் என்ன ?

பெண்ணியம் என்ற சொல் நமக்குப் புதியது. பெண் விடுதலை எனும் கருத்து மேல் நாட்டுச் சிந்தனைகளின் தாக்கமாகும். 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் மேலை நாடுகளின் வளர்ந்து வரும் பெண்ணியம் இந்த இரண்டு நூற்றாண்டுகளில் தான் இந்தியச் சிந்தனையிலும் ஒரு புதிய இடம் பெற்று வளர்ந்து வருகிறது. பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும். பெண்ணியம் என்பதும் அதன் கோட்பாடுகளும் ஒரு சமூக மாற்றத்திற்காக எடுக்கப்படும் நடவடிக்கை ஆகும். இதனைப் பெண்களின் சீர்திருத்த அலைகளை உருவாக்கும் பெரிய சமுத்திரம் எனலாம். மற்றொரு பெயரால் 'பெண்மை மீட்டெழுச்சி இயக்கம்' என்று வழங்கப்படுகிறது. பிரிட்டானியக் கலைக் களஞ்சியம் ''பெண்ணியம் என்ற சொல் மிகவும் அண்மைக் காலத்தில் தான் தோன்றி வளர்ந்து வருகிறது. அது பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும். அத்தோடு பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் சமுதாய அரசியல் பொருளாதாரச் சூழ்நிலையிலும் அவள் ஆண்களுக்குச் சமமானவள் எனும் உயர் நெறியை நிலை நாட்டும் நோக்கத்தைக் கருவாகக் கொண்டு இயங்குகிறது''3 என்று கூறுகிறது.

இந்த அறிவியல் யுகத்தில் ''தேடல்'' என்பது சிறந்த கருத்தியலாக இயங்குகிறது. அதாவது, புதியவற்றைக் காணல், புரிந்து கொள்ளல், தேடல்; ஆழமாக ஆராய்ச்சி செய்து அறம்திறம்பா உண்மைகளை உலகிற்குக் காட்டும் முனைப்பின் தாக்கத்தால் விளைந்ததே பெண்ணியம் எனலாம். பெண்ணிய மும் பகுத்தறிவுடையதே. இயல்பாகப் பகுத்தறிதல் பண்பில்லை எனில் அது மெய்ப்பிக்கப்பட வேண்டுமென எதிர்க்குரல் எழுப்பிய, முதன் முதலில் பெண்ணுரிமைக் குரல் எழுப்பிய மேரி

உல்ஸ்டன் கிராஃப்ட் அவர்களுடைய கூற்று இங்கு நினைவு கூர்தற்பாலது.

பெண்ணியம், பெண்ணியல், பெண்நிலைவாதம், பெண்ணுரிமை, பெண் விடுதலை ஆகிய சொற்கள் ஒரு பொருளுடையன. ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை வேண்டும். சமூகத்திலும் குடும்பத்திலும் அரசியலிலும் வேலை செய்யும் களங்களிலும் கல்வித் தளங்களிலும் பெண் சுரண்டப் படுகிறாள். அது நீக்கப்பட்டு அவருக்குச் சம உரிமைகளை வழங்க வேண்டும்.

பெண்மையின் ஆளுமைத் தன்மையும் தனித் தன்மையும் போற்றப்பட வேண்டும். ஒரு பெண்ணைத் தெய்வமாக, பேயாக, குழந்தையாக, கருவியாக, வேலைக்காரியாக போகப் பொருளாக ஆகிய அனைத்து நிலைகளிலும் பார்க்கும்-ஏற்கும் ஆண் வர்க்கம் அவளும் தனித்துவமுள்ள ஜீவன் என்பதை மறந்து விடுகிறது.4

ஆண் மேலாதிக்கம் ஒழிந்து ஆணாதிக்கச் சமுதாய அமைப்பு மாற்றியமைக்கப்பட்டு, பால்ரீதியான ஒடுக்க முறைகளும் நசுக்கப்பட வேண்டும். குடும்ப அமைப்பிலான பங்கு நிலையும் பாதிக்கப்படக் கூடாது. இது போன்ற கருத்தியல்களை எல்லாம் இனம் கண்டு தீர்வு காண முயலும் தன்மையைப் பெண்ணியம் எனலாம்.

பெண் மெல்லியள், வீடே அவளுக்குரிய பாதுகாப்பான இடம் என்ற காப்பை, கண்ணுக்குத் தெரியாத விலங்கைப் போல் பூட்டி விடுகிறார்கள். அந்த விலங்கை உடைத்தெறியத் துணிவின்றி வெளியே செல்லும் போதும் அதன் சுமையில் அஞ்சிச் சாகிறாள் எனலாம்.5 அந்த விலங்குகளை உடைத்தெறிய வழி வகுப்பதே பெண்ணிய வாதிகளின் இன்றியமை யாப் பணியாகிறது.

அபர்ணா மகந்தாவின் கூற்றுப்படி 'பெண்ணிலை வாதம்' என்பது பெண் விடுதலை இயக்கத்தை வழி நடத்திச் செல்லும் தத்துவமும் வாழ்க்கை முறையுமாகும்.6

பெண்ணியல் என்பது பெண்ணைப் பற்றிய ஒரு துறை. அது அவள் உடல்சார்ந்த மகப்பேறு, கருப்பை என்ற தனிப்பட்ட, குறுகின, உள்ளடக்கிய மருத்துவத்துறையாக ஏற்கனவே நிலை

பெற்றிருக்கிறது. ஆனால், இலக்கிய அரங்கிலே அடிபடும் இச்சொற்றொடர் அவள் மனம், மெய், இலக்கியம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்குகிறது. பெண்ணை ஓர் ஆய்வுப் பொருளாக்கிவிட்ட மேட்டிமை இன்று இத்துறையை அனுமதித் திருக்கிறது. மகளிர்பால் பெருந்துணையும் பெருந்துறையுமாக ஆய்வுகள் மேற்கொள்ள முனைந்திருக்கிறது. ஆழங்காண முடியாது புதிராக நிற்கும் பல தகவல்களை முதன்மைப் படுத்து கிறது.7

பெண்ணியம் என்ற சொல் முதன் முதலில் 17-ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டது. அன்றிருந்த பொருள் இன்று மாறுபடுகிறது. வர்க்கப் பின்னணி, கல்வித் தன்மை, உணர்வு நிலை போன்றவற்றைப் பொருத்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு வகையாகப் பேசப்படுகிறது.

பெண்கள் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றும் முனைவர் தேவதத்தா அவர்கள் ''சமூகத்திலும் வேலைத் தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்கு முறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்மையின் உணர்வு நிலை களும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுபூர்வமான நடவடிக்கையாகும்''8 எனப் பெண்ணியத்திற்கு விளக்கம் தருகிறார்.

பெண்ணியம், பெண்ணியல், பெண்நிலை வாதம் என்ற கருத்துக்கள் ஆண்களை எதிர்க்கும் அபாயமான கூறு என்றே பலரும் கருதுகின்றனர். உண்மையில் ஆணானவன் தன் ஆதிக்க வேட்கையில் சமுதாய உற்பத்திக்கும் ஆக்கத்திற்கும் உரிய ஆதார சக்தியாக விளங்கும் தாயை அடிமைப்படுத்தி விட்ட வரலாறே மனித சமுதாயத்தின் சாரம் எனலாம். அதை இனங் கண்டு அந்த அடிப்படையில் மாற்றம் காண்பதற்கான ஒரு விழிப்புணர்வைப் பெற வேண்டும். இதில் ஆண்-பெண் வேற்று மையே எதிர் நோக்காக இருத்தல் கூடாது. இவ்வாறு பெண் களுக்கு இழைக்கப்பட்ட இந்த ஆணாதிக்கச் சிறுமைகளைப் பெண்ணினத்திற்கேற்பட்ட உலகளாவிய வரலாற்று ரீதியான தோல்வி என்கிறார் ஏங்கல்ஸ்.

## போராட்டத்திற்கான சூழல்

மார்க்ஸ் என்ற அறிஞர் ''காட்டுமிராண்டி காலம் முடிந்து, அநாகரிக காலம் வரை குழந்தைகள் தாயின் பொறுப்பிலேயே

இருந்தனர்'' என்றுரைப்பதாக ஏங்கல்ஸ் எழுதுகிறார். அநாகரிக காலகட்ட முடிவில் மனித இனம் பயிர்த் தொழிலில் இறங்கி நிலை பெறத் தொடங்கியது. அத்தோடு வேலைப் பிரிவினை பாலினத்தை ஒட்டி அமைந்தது. வேலைப் பிரிவினை என்பதுதான் உற்பத்தி உறவில் ஏற்படும் மிகப்பெரிய முரண் பாடு. ஆண், பெண்களிடையே ஏற்படும் இந்த வேலைப் பிரிவினையே சமுதாய வரலாற்றில் முதன் முதலில் தோன்றிய வர்க்க முரண்பாடாகும். இதிலிருந்து உலகில் தோன்றிய முதல் அடிமை பெண்ணினமே.9

ஒரு காலத்தில் உலகெங்கும் தாய் வழிச் சமுதாயமே நிலவி இருந்தது. இங்கிலாந்தைச் சேர்ந்த ராபர்ட் ஸ்டீபன் பிரிகால்ட் என்பார் ''தாயர்'' என்றொரு நூலை எழுதினார். பெண் தலைவியாகச் சமுதாயம் சார்ந்து பெண்களே முதன்மை பெற்றிருந்தனர் என்பது அவருடைய கருத்து.

சுவிஸ் நாட்டுப் பச்சோஃபென் என்ற மானுடவியல் அறிஞர் ஆதியில் மனித இனம் எந்த நியதியும் இல்லாத பாலினக் கலப் பில் விலங்கு நிலையில்தான் பல்கிப் பெருகினர்; அந்த நிலையில் தாய் வழிதான் முதன்மை பெற்றிருந்தது.10

சீனத்துத் தொன்மையும் தாய் வழிச் சமுதாயமே. மனைவி யின் குடும்பப் பெயரையே தனக்கு ஏற்றது ஆண்வர்க்கம். ஜப்பானில் 14-ஆம் நூற்றாண்டு வரை தாய் வழிச் சமுதாயமே நிலவியது. மிகத் தொன்மையான ஹீப்ரு இனத்தாரை ஒரு பெண்ணே தலைமை தாங்கி நடத்தினார். அரேபியாவில் ஒரு காலத்தில் அரசோச்சினவரும், நீதி வழங்கினவரும் பெண்ணே.

பண்டைய எகிப்தில், சொத்து சகோதரனுக்கன்றிச் சகோதரிக்குச் செல்வதாலேயே, சகோதரன் சகோதரி திருமண முறை கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரை வழக்கிலிருந்ததாகத் தெரிகிறது.

நம் நாட்டிலும் வட நாட்டில் வாழ்கின்ற கோண்ட், ஸந்தால், குண்டா போன்ற தொல்குடியினரிடம் இன்றும் தாய் வழிச் சமுதாயமே நிலவுகிறது. அவர்கள் மனைவியை அதிகம் கட்டுப்படுத்துவதில்லை. இதனால் குடும்பச் சொத்துரிமை பெண்ணுக்கே இருந்தது. தென் இந்தியாவில் நாயர் சமுகத்தில் தாய்ச் சம்பிரதாயமிருப்பதாகத் தெரிகிறது.

இன்று தாய்வழிச் சமுதாயத்தின் வீழ்ச்சி ஆரம்பமாகித் தாயுரிமை தூக்கி எறியப்பட்டது. அருகி மறைந்து வருகிறது. இது ஆண் ஆதிக்கத்தின் உச்ச கட்டமாகும். அது எப்படி?

நிலப்பிரபுத்துவத்தில் பெண்கள் அடிமைகளாக விற்கப் பட்டனர். சமூகக் குழுவில் நிலவும் கூட்டுக் குடும்ப உறவு இங்கு உடைகிறது. 'ஒரு தார மணம்' உருவானது. பின்னர் உயர்வு சிதைவால் 'பல தார மணம்' நிலவியது. தந்தைவழிச் சமுதாயத்தில் 'ஒரு தார மணம்' பெண்ணுக்கே வற்புறுத்தப் பட்டது. பொருளாதார ஆணாதிக்கச் செல்வாக்கு, பெண்ணுக்கு ஆணைச் சார்ந்திருக்கும் நிலையை உருவாக்கிவிட்டது. பெண்ணின் சொத்து கணவனின் உடைமையானது. ஜான்ஸ் டுவர்டு மில் (1806—1873) என்பாரும் திருமணம் என்ற நிறுவனமே பெண்ணை அடிமைப்படுத்துகின்றது என வாதிட்டார்.

ஆண் மேலாதிக்கம்! அதனால் பெண்ணுக்குக் கணவனே கண்கண்ட தெய்வமாகிறான். அவளுக்கெனச் சில நியாயங்கள் கற்பிக்கப்படுகின்றன.

**கன்னிமை மறுக்கப்பட்டது :** ''பருவமடைந்த பின் ஒரு பெண் தந்தை வீட்டில் இருக்கக் கூடாது'' எனப் போதாயன தரும சூத்திரம் வற்புறுத்துகிறது.11 இந்திய சமுதாயத்தில் கன்னியாக இருக்கும் உரிமை பெண்ணுக்கில்லை. தரும சாஸ் திரத்தின்படி கல்யாணமாகாத பெண் ஒரு வாழை மரத்தைக் கணவனாக வரித்து, மணமானவளாகத் தாலி தரிக்க வேண்டும். பின் அந்த வாழை மரத்தை வெட்டி விட்டுக் கைம்மைக் கோலம் ஏற்றுப் பெண் வாழ வேண்டும். இதனால் பெண் சார்ந்து வாழும் நிலை ஏற்பட்டது.

## மணம்

**குழந்தை மணம் :** ''பெண்ணுக்குப் பூப்புக்கு முன்னரே திருமணம் முடித்து விட வேண்டும்'' என்கிறது ஸ்மிருதி. பெண் 10 வயதில் பெரும்பாலும் பூப்பெய்கிறாள். அது உபநயனத் திற்குச் சமம். எட்டுவயதுப் பெண் 'கௌரி' என்றழைக்கப்படு கிறாள். அதுவே அவளுக்கேற்ற கல்யாண வயது, (Bombay Courier, 4, Feb 1840) என்று கூறுகிறது. பிரம்மபுராணம், ஒரு பெண் நான்கு வயதிலேயே மணமுடிக்கப்பட வேண்டுமென வற்புறுத்துகிறது.12 தென்னிந்தியாவில் நம்பூதிரிகளும் சில

(இந்து) அந்தணரல்லாத சாதியினரும் தவிரப் பிறர் கட்டாயமாகப் பூப்புக்கு முன் மண முடித்தலை மேற்கொண்டிருந்தனர்.13 இதனால் பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தை (பெண்)களுக்கு மணமுடித்துவைக்கப்பட்டது. சொத்துக்கள் தம்மிடமே தங்க வேண்டுமென்பதும் குழந்தை மணத்துக்கு ஒரு காரணம் ரஷ்யாவிலும் இதே போல் (பெண்) குழந்தை மணம் நடைபெற்றது; ஒரு காலத்தில், ரஷ்யாவில் மணமானவர்தாம் வாய்க்காலிலிருந்து நீர் பெறலாம். அதனால் விவசாயிகள் தத்தம் பிள்ளைகளுக்கு 9 அல்லது 10 வயதில் மணமுடித்தனர்; பெண் 5 அல்லது 6 வயதில் திருமணம் முடித்துக் கொடுக்கப்பட்டாள். 'நிசாசு' என்ற இந்தக் கொடிய வழக்கம் தற்போது ரஷ்யாவில் மறைந்து விட்டது.14

குழந்தைப் பருவத்தில் மணமானதால் பெண்கள் சிறு வயதிலேயே விதவைகளானார்கள். பிரசவத்தில் 1000க்கு 100 பேர் இறந்தனர்.15 "5 வயதில் திருமணம் முடித்தோர் 1000க்கு 1901 - 1910 → 162 பேர்; 1911 - 1920 → 156; 1921 - 1930 → 144; 1931 - 1940 → 118 என Indian census Report, 1931 (P.P. 215 - 222) கூறுகிறது."16

**பால்ய விதவைகள் :** (According to the 1921 India census, the Details of child widows—reported living in the country at that time,

| | Age | No. of widows |
|---|---|---|
| Below | 1 | 497 |
| Between | 1 - 2 | 494 |
| ,, | 2 - 3 | 1257 |
| ,, | 3 - 4 | 2837 |
| ,, | 4 - 5 | 6707 |
| ,, | 5 - 6 | 11892 |
| ,, | 6 - 10 | 85037 |
| ,, | 10 - 15 | 232147 |
| ,, | 15 - 20 | 17420820 |

எனப் (ஆங்கிலத்தில் எழுதப்பட்ட) "பெரியார்" எனும் நூல் தெரிவிக்கிறது.17

**காதல் திருமணம்:** காதல் திருமணம் செய்து கொண்ட பெண் மட்டும் சமுதாயப் பார்வையில் கேலிக்குரியவளானாள். அவளுடைய சகோதரியர்க்கும் மணமாகாது போய்விடுமென அச்சுறுத்தப்பட்டாள். சங்ககாலம் மட்டும் விதிவிலக்கல்ல. பெண்ணே இற்செறிக்கப்பட்டாள், கோல் கொண்டு அடிக்கப் பட்டாள்.

**இந்துப் பெண் மணம்:** இந்த முறையில் தாலி, குங்குமம் இன்றியமையாத இடத்தைப் பெற்றன. தென்னிந்தி யரிடையேயுள்ள தாலி அணிவிக்கும் மரபு வட இந்தியரிடையே இல்லை.18 வட இந்தியரிடையே குங்குமம் வைக்கும் வழக்கம் அவ்விடத்தைப் பிடித்தது; தென்னிந்தியரில் மணமாகாத சிறுமி யரும் குங்குமம் வைத்துக்கொள்வர்.

**குங்குமம் பெறும் இடம்:** தியாகத்தின் சின்னம். இந்தியப் பெண்கள் கணவனுக்காகத் தியாகம் செய்கிறவர்கள். அதனால் பொட்டிட்டுக் கொள்கிறார்கள். ''மனிதர் கூட்டம் கூட்டமாக வீடு வாசலின்றித்திரிந்த நாட்களில், ஓர்ஆண் ஒரு பெண்ணைக் கூடுமுன், உலோக வளையத்தை அவள் கையிலிட்டு அழைத்துச் சென்று வாழ்க்கை நடத்துவான். கூட்டத்திற்குப் பின்னர், அதற்கு அடையாளமாகக் கூரிய கல்லால் குத்தி அவள் நெற்றியில் குருதி வரச்செய்து, முன்னுச்சியில் அடை யாளக் கோடிட்டான். அதுவே இன்றளவும் திருமணத்தின் சிந்தூரச் சடங்காக முதன்மை பெற்றிருக்கிறது என்கிறார் ஒரு வங்க எழுத்தாளர்.19

''வட இந்தியாவிலுள்ள பழங்குடி இனத்தாரில் 'ஓரான்' எனும் இனத்தாரிடையே ஒரு கதை வழங்கி வருகிறது. நெருங்கிய நண்பர் நால்வரில் ஒருவன் நெய்வோன்; ஒருவன் மரச்சிற்பி; ஒருவன் பொன் நகை செய்வோன்; ஒருவன் குங்குமம் விற்பவன். ஒருநாள் சிற்பி பெண் மரப்பொம்மை ஒன்றைச் செய்கிறான். நெய்வோன் அதற்கு ஆடை அணிவிக் கிறான். பொன் நகைக்காரன் நகையால் அதை அழகுபடுத்து கிறான். குங்குமக்காரனோ வெற்று நெற்றி நன்றாக இல்லை எனக் கூறிக் குங்குமம் தீட்டுகிறான். உடனே அப்பெண் உயிர் பெறுகிறாள். அழகுதேவதையான அவளை மணக்க நால்வரும் போட்டியிடுகின்றனர். அந்தப் பக்கம் சென்ற பெரியவர் இவர்கள் வழக்கைத் தீர்க்கிறார்.

''அவளை உருவாக்கிய சிற்பி அவளுக்குத் தந்தை; ஆடை தந்தவன் தமையன்; நகை அணிவித்தோன் தாய்மாமன்;

அவனைத் தொட்டுக் குங்குமம் தீற்றியவனே கணவனாகிறான்''— அதிலிருந்து குங்குமத்திற்கும் கணவனுக்கும் ஓர் உறவை ஏற்படுத்தி விட்டனர். ஓர் ஆண், பெண்ணை உடைமைப் பொருளாக ஆக்கிக் கொள்வதற்குரிய அடையாளமே குங்குமம் தீற்றல் சடங்கென வழக்கேறியது இன்றும் வட இந்தியாவில் குங்குமம் தீற்றல் ஒன்றே மணம் நிறைவேறி விட்ட சின்னமாக விளங்குகிறது. பெண் விதவையானால், குங்குமம் அழிக்கப்படுகிறது.''

**தாலி:** மங்கல நாண். பெண்ணை அடிமைப்படுத்தி விட்ட (இரும்புச், சங்கிலி அது. கணவன் இறந்தால் அது பெண்ணின் கழுத்திலிருந்து இறங்கும்.

**சார்பு நிலை:** மணமானபின் கணவனைச் சார்ந்து நிற்கிறாள் தந்தையைச் சார்ந்திருந்த நிலை இடம் பெயர்கிறது; கணவன் இறந்தால் அவளுக்கு நீர்க்கடன் செய்யும் மகனைச் சார்ந்து இருக்க வேண்டுமென்பது இந்தியப் பெண்களின் தலைவிதி.

**பாலுறவு வன்மை:** பெண்ணின் அழகு அவளை போகப் பொருளாக்குகிறது— கணவனுமே அவளை அனுபவிப்பதில் வன்மையைக் கையாள்கிறான். 1926-ல் சென்னையில் 13 வயதுச் சிறுமி, 26 வயதுக் கணவனின் பாலுறவு தாங்காமல் தற்கொலை செய்து கொள்கிறாள். இதனை மார்கரெட் கசின்ஸ் அண்ணல் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்.20

**வரதட்சணை:** முற்காலத்தில் கல்யாணத்தின் போது பெற்றோர் மகளுக்கு அன்பு காரணமாக பணமோ நகையோ கொடுத்தனர். அதுவே நாளா வட்டத்தில் மரபாக மாறியதோடு மதிப்பாகவும் கருதப்பட்டது. அதுவே பின்னால் நடுத்தர, பாட்டாளி வர்க்கத்தினர்க்குப் பாதகமாக அமைந்தது.21 சீதனம் என்றால் பெண் சொத்து; இப்போது தமிழில் வரதட்சணை எனப் பெயர் மாறிவிட்டது. தர்ம சாத்திரம் கூட பெண்களுக்கு மணத்தின்போது பெற்றோர் தரும் பரிசுகள் பற்றிப் பேசுகிறது என்கிறார் ஹீஜா. வரதட்சணைக் கொடுமைக்கு வித்திட்டவர்களே அந்தணர் என்பது பல்லோர் கருத்து என்கிறார் வெங்கட்ராவ் (வரதட்சணை, ப.45) ஆதாரம்→

திருவிரிஞ்சிபுரம்

ஸ்ரீ மார்க்கபந்து ஈஸ்வரர் தேவஸ்தானம் கல்வெட்டால் அறியப்படும் சமூக சீர்திருத்த சாசனத்தின் விளக்கம்.

படைவீட்டு ராஜ்யத்து சுசேஷ வித்ய மகாஜனங்கள், பிராமணப் பெருமக்கள் அனைவரும்கூடி, விவாகத்தைக் கன்யா தானமாகவே செய்வதென்று தீர்மானிக்கப் பட்டது. அவ்விதமில்லாமல் பொன் கொடுத்தும், பொன் வாங்கியும் வரதட்சணை விவாகம் செய்பவர்கள் ராஜ துரோகத்திற்குட்பட்டு பிராமண்யத்திற்குப் புறம் பானவர் என்று தீர்மானிக்கப்பட்ட விபரத்தைத் தெரி விக்கிறது.

இதன்காலம்— விஜயநகரம் மன்னர் தேவராய மகா ராயர் ஆட்சி செய்த கி.பி. 1426-ஆம் ஆண்டாகும்.

—நிர்வாக அதிகாரி

னும் கல்வெட்டாகும். இது வேலூர் - பெங்களூர் நெடுஞ் சாலையில் வேலூரிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தி லுள்ள திருவிரிஞ்சிபுரத்தில் உள்ளது.

50, 60, 70களில் ''மாப்பிள்ளையை விற்றுப் பெண்ணைக் கடத்து'' எனும் கருத்து நிலைத்து நிற்குமளவு வரதட்சணைப் பேய் கொடுங்கோலோச்சியது. ''காசுபணம் மட்டும், கழுதை களும் தரமுடிந்தால் அவற்றுக்கும் கண் நிறைந்த கணவன்மார் கிடைக்கக்கூடும்'' எனப் புதுக்கவிதை பாடுகிறார் கா. வேலுச் சாமி.

''வரதட்சணைத் தற்கொலைகள் அதிகரித்தன. முக்கிய மாகப் பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், சௌராஷ்டிரம் ஆகிய இடங்களில் அதிகம் திட்டுவது - அடிப்பது - வீட்டை விட்டு விரட்டுவது - சூடு போடுவது - பட்டினி போடுவது - வாழாவெட்டியாக்குவது குழந்தையைப் பறித்துக்கொண்டு பெண்ணைப் பைத்திய மாக்குவது.

1975-ல் டெல்லியில் மட்டும் 350 பெண்கள் கொல்லப் பட்டனர்.

1978-ல் டெல்லியில் 250 பெண்கள் கொல்லப்பட்டனர். ''1985 கணக்குப்படி இந்தியாவில் 837 பேர் கொல்லப் பட்டனர்; 1986-ல் 1319 பெண்கள் கொல்லப்பட்டனர். 22

22.10.81-ல் 16 வயது சுமித்ராவை (ஹரியானா) கணவன் சுரீந்தர்சிங்கும் அவன் சகோதரியரும் சேர்ந்து தீ வைத்துக் கொளுத்தினர். மூவருக்கும் ஆயுள் தண்டனை விதித்தது டெல்லி செஷன்ஸ் (நீதிபதி) நீதிமன்றம். இதனால் பல கண்டனக் குரல்கள் எழுந்தன.

திருமணத்திற்கு வரதட்சணையை ஒரு நிபந்தனையாக்கும் இளைஞன் தன் கல்வியையும் நாட்டையும் அவமதிக்கிறான். இவனைச் சமூக விலக்குச் செய்தல் வேண்டும் என்று அண்ணல் காந்தியடிகள் (Young India, 6.6.68) கண்டனக் குரல் எழுப்பினார்.

**கற்பு:** கற்பு என்பது ஒரு வாழ்க்கை நெறி— மரபு சார்ந்த வாழ்க்கை ஒழுக்கமாக வரையறுக்கப்பட்டிருந்தாலும் அது பெண்களுக்கே வற்புறுத்தப்பட்டது. ''கற்பெனப்படுவது கணவனினும் தெய்வம் வேறில்லை என எண்ணிக் கலங்காது அவனை வழிபடுவது, இவ்வகை வழிபட்டார் அருந்ததி, உலோபா முத்திரை, மேனை, சுநீதி, சாவித்திரி, அநசூயை முதலியோர்'' 23 என்கிறது அபிதான சிந்தாமணி. தமிழ் லெக்சிகன், ''மண உறவில் மனைவி கணவனுக்கு விசுவாச மாக இருத்தல்'' 24 எனப் பெண்ணுக்கே கற்பு என வலியுறுத்து கிறது. இதிகாசம், புராணம் ஆகியன பெண்களின் கற்பு நிலையை வலியுறுத்துகின்றன.

ஏங்கல்ஸ் கருத்தின்படி தாய்வழிச் சமுதாயம் பெண் களுக்கே வற்புறுத்துகின்ற கற்பு நெறியை ஏற்கவில்லை. இந்தியப் பழங்குடியினரும் இந்நெறியே வாழ்ந்தனர். ராஜம் கிருஷ்ணன், மத்தியப் பிரதேசத்தில் சத்தீங்கட் மாவட்டம் எனுமிடத்தில் வாழ்கிற ரவுத்தாயர் எனும் பழங்குடியினர் வாழ்க்கை நெறிக் கதையை இங்கு நோக்கலாம் - இவர் களிடத்தில் ஒரு புது வழக்கம் கால் கொண்டிருக்கிறது. தீபாவளியன்றி உழவர் பூஜை நடைபெறும் - அறுவடை

லெட்சுமி பூஜையன்று நடக்கும். பொங்கலிடும் போது பசுஞ் சாணத்தால் கோட்டை போன்ற ஓர் உருவம் சமைப்பர். நடுவே 'கோபர்த்தன்' என்ற ஆயன் வடிவாகச் சாணத்தை உருட்டி வைக்கின்றனர். அவன் 'சந்திராவளி' என்ற கோபி கையின் கணவன்; கண்ணன் சந்திராவளியினை இரவில் காண வருவான்; இதை ஆயன் விரும்பவில்லை. கண்ணனைக் கொல்ல காத்திருக்கிறான். கண்ணன் அவனோடு பொருதிக் கொல்கிறான். பின்னர் சந்திராவளியை அடைகிறான். ஆயனுடைய சாணப் பிரதிமையைப் பழங்குடியினர் நசுக்கி அழிப்பர் என்கிறார்.25 இங்கு கற்புநெறி தூக்கி எறியப் படுகிறது - அது கற்பு நெறியே வலியுறுத்தப்படாத காலமாக இருக்கலாம்.

இடைக்காலத்தில் எல்லாமே முழுவதும் மாறியது - தந்தை வழிச் சமுதாயம் ஒருதார மணத்தையும் கற்பு நெறியையும் பெண்களுக்கு மட்டும் வற்புறுத்தியது. தென்னாட்டைப் பொருத்தவரை சங்ககாலப் பெண்களுக்குக் கற்பு நெறி வலியுறுத்தப்பட்டு வாழ்ந்தமை, இலக்கியம் கொண்டு தெளிவா கிறது. தெருவில், பெண் கட்டை விரலைப் பார்த்துக் கொண்டே போக வேண்டும்; கணவனையன்றிப் பிற தெய்வம் அவர் களுக்குக் கிடையாது. ஆகிய வன் கொடுமைகள் பெண்ணின் மீது திணிக்கப்பட்டது.

**சதி :** கணவன் இறந்தால் அவளுக்கு வாழ்க்கையே இல்லை. அவனுடன் உடன்கட்டை ஏறவேண்டும். வட இந்தியாவில் இவ்வழக்கம் மிகுதியாக இருந்தது. கணவனுடன் உடன்கட்டை ஏறுவதால் 14 இந்திரர் ஆளும் காலத்திற்குச் சொர்க்கத்திலிருப்பாள் - அவனுடைய பிரம்மஹத்தி பாவமும் தீருமென (ஹரிதர் போன்ற) ரிஷிகள் எழுதி வைத்துச் சென் றனர். இக் கருத்துகளை வலியுறுத்தும் வண்ணம் பிரும்ம புராணம் - ''கணவன் வேற்று நாட்டில் இறந்தால், உத்தம பத்தினி அவனுடைய காலணிகளை மார்பில் வைத்துக் கொண்டு அக்கினியில் புகுவாள்'' என்கிறது.26

போரில் கணவன் இறந்ததும், பகை மன்னனால் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு அடிமையாக வேண்டிய கொடுமை யிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளத் தீப்புகுந்தனர் அரச குலப்பெண்டிர், சித்தூர் ராணி, பத்மினி, இராஜபுதனத்து நங்கையர்...

இவ்வாறு 10-ஆம் நூற்றாண்டில் தம் மானம் காக்க வழக் காக்கித் தீர்ந்த தீக்குளிப்புக்கள் சத்திரிய வருணத்தாரிட

89996

மிருந்து அந்தண வருணத்தாரிடம் பரவியது. ஆதியில் கௌதமர் எழுதிய ''பிராம்மணி தற்கொலை செய்து கொண்டால் தனக்கோ கணவனுக்கோ சுவர்க்கம் தேட முடியாது'' என்ற வாசகத்தையே மாற்றி பெண் உடன்கட்டை ஏறினால் அருந்ததிக்குச் சமமானவள் - மூன்றரைக் கோடி ஆண்டுகள் சுவர்க்கம் அனுபவிப்பாள் என்றெல்லாம் திருத்தினார்கள்.27

நெருப்புக்கு அஞ்சிக் கணவனுடன் இறக்க மனம் துணியாத பெண்கள் வலுக்கட்டாயமாகக் கணவன் எரிகின்ற சிதையில் தள்ளப்பட்டார்கள். சங்க காலத்தில் இக்கொடிய வழக்க மிருந்த உண்மை, புறநானூறு காட்டும் பெருங்கோப் பெண்டு வின் வாயிலாகத் தெரிகிறது. பாண்டியன் இறந்ததும், ஆளும் தகுதியை அவளுக்குத் தந்து, தீப்புக வேண்டாமென அமைச்சர் முதலான எல்லாரும் கேட்டுக் கொண்ட போதும், கைம்மைக் கொடுமையினும், இது எனக்கு குளிருமெனக் கூறிச் சிதையில் பாய்கிறாள். ஆனால் வற்புறுத்தப்பட்டுத் தீயில் கணவனுடன் எரியும் அவலம், இராஜாராம் மோஹன்ராயின் சிந்தனையைத் தூண்டி, அவ்வழக்கத்திற்குப் புறம்பாக எழச் செய்தது.

**விதவை :** சமுதாயம் ஏளனமாகப் பார்த்தது. தொட்டது துலங்காதென விதவைப் பெண்ணை ஒதுக்கியது. மங்கல காரியங்களில் விதவைகள் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது. விதவைக்குக் கணவன் சொத்தில்கூடப் பங்கில்லை. தற்காப்பு - துணை வேண்டி மறுமணம் செய்து கொள்ள முடியாது. கூந்தல் களையப்பட்டது. தாலி அகன்றது. திலகம் களைந்தது. வெள்ளை ஆடை ஏறியது. மிதமான சாப்பாடு உண்ணும் இழிநிலை ஏற்பட்டது. சமூகம் புறக்கணித்தது - பால்ய விதவைகள் வாடி வழியின்றிக் கற்பைக் காக்கவும் திறமின்றிச் சமுதாயத்தில் நடைப்பிணமாயினர்.

**கைம்மை :** கணவன் இறந்ததும் பழிக்கும் அவமதிப்புக்கும் அஞ்சி, ஒடுங்கி வாழ்ந்தனர். கற்புநிலை ஏற்பட்டது. சிலர் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குப் புறக்கணிக்கப் பட்டனர். கற்புக்கு ஆபத்து நேர்ந்தது - வெளியே போகக் கூடாதென இல்லத்துக்குள்ளேயே முடக்கப்பட்டதால் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்தனர். சுருங்கச் சொன்னால் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கின்ற நடைப்பிணம் பெண் விதவை.

கட்டாயக் கைம்மை—

(1) கட்டாந்தரையில் படுக்க வேண்டும் (புறம் - 246)

(2) உணர்ச்சியைத் தூண்டும் உணவை உண்ணக் கூடாது.

(3) முடியை மழித்துக் கொள்ள வேண்டும். கூந்தலை அறுக்காத பெண்ணிடமிருந்து தண்ணீர்வாங்கிக் குடிப்பதே பாவமென ஒதுங்கினர்.28

(4) சகுனத் தடை எனவே மங்கல காரியங்களில் பங்கெடுக்கக் கூடாது.

(5) வெள்ளையாடையை அணிந்து கொள்ளுமாறு சமுதாயம் வற்புறுத்தியது.

(6) பொருளாதாரப் பிரச்சினையால் அழிந்து மாண்டாள் பெண்.

**கற்பழிப்பு :** பெண்ணை போதைப் பொருளாக - உணர்ச்சி யற்ற பெண்ணாக நினைத்ததால் வந்த தீய கொடுமை இது. இதிகாசம் புராணம் வற்புறுத்துகின்றன.

பிருகதாரணியக உபநிடதம் - ''தன்னை விரும்பாத ஒரு பெண்ணை வலிந்துபற்ற அனைத்து உரிமைகளும் உடையவன்'' என்றுரைக்கிறது.29 இது, கற்பழிப்புக்கு வித்திட்டது. ஆரிய வழக்கிலுள்ள அசுர மரணம் நீர்வார்த்தது.

பெண்ணின் பலவீனம், ஆண்களுக்குள்ள அதீத காம உணர்ச்சி, பெண்தானே என்ற இழிவுமனப்பான்மை ஆகியன உரங்களாயின. சமூகமும் இதைக் கண்டு கொள்ளாத நிலை ஒரு காலத்தில். பெண்கள் உடலாலும் உள்ளத்தாலும் பாதிக்கப் படுகிறார்கள். பழியை மற்றவர் மீது போடுகிறது பெரும் பாலும் இத்தகு ஆண் வர்க்கம் - (காவலர் கொடுமை இந்த நூற்றாண்டில் அதிகம்) ''பெண்ணே எதிர்ப்புக் காட்டாதே - எதிர்ப்புக் காட்டினால் நீ சோரம் போனாய்'' என்று இருவேறு பட்ட வசைகள், தமிழகத்தில் எத்தனை ஆயிரம் ''பத்மினி'', (சிதம்பரம்)கள், எத்தனை வடஇந்திய ''மதுரா''க்கள்? _ நீதிபதிகள் தீர்ப்பைப் பாதகமாக்கிக் காட்டி 1980-ல் நாடு தழுவிய கற்பழிப்பு எதிர்ப்பு இயக்கம் ''மதுரா கற்பழிப்பு வழக்கினை'' அரசு மறுபரிசீலனை செய்யும்படி வற்புறுத்தியது. மூன்றாண்டுகளாக, கடுமையான இவ்வழக்கினைக் குறித்த விவாதங்கள் நடைபெற்ற பின், 1983-ல் குற்றவியல் திருத்தச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. (இந்தியப் பெண்கள் சாதனையும் சவால்களும். ப. 57).30

**விவாகரத்து :** விவாகரத்து செய்வதற்குப் பெண் அஞ்சுவாள். கொடுமையான கணவனுடன் வாழ்ந்து கொடூரமாகத் துன்புறுத்தப்பட்டாலும் கணவன் பல பெண்களுடன் வாழ்க்கை நடத்தினாலும் பரத்தையரை நாடிச் சென்றாலும் குடித்தாலும் குடித்துவிட்டு அடித்தாலும் அவள் சகித்துக் கொள்ள வேண்டுமெனச் சமுதாயம் எதிர்பார்க்கிறது. மங்கல காரியங்களில் அவள் புறக்கணிக்கப்பட்டாள். சமுதாயம் அவளை ஏளனமாகப் பார்த்தது.

**மலடி :** குழந்தைப் பேறு இல்லாவிட்டாலும் பாதிக்கப்படுபவள் பெண்தான். சமுதாயம் அவளை ஓரங்கட்டும். மலடி வரும் மங்கலம் புலிகண்ட ராஜ்யமாகிவிடும். குழந்தை பெறுவதற்கு கடும் விரதங்கள் எடுக்க வேண்டும். அவற்றையெல்லாம் விடக் கொடுமை, பிள்ளைப் பூச்சியைத் தின்றால் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை இருப்பதால், பிள்ளைப் பூச்சியை உயிரோடு பிடித்து வாழைப்பழத்துள் வைத்து அதை உண்ணச் சொல்லி வற்புறுத்துவர். இவ்வழக்கம் இந்தக் காலத்திலும் வழக்கில் உள்ளது. வேப்பிலைப் பூசாரியிடம் மந்திரித்தல். தான் தொட்டது துலங்கவில்லையே எனப் பெண்ணும் தன்னையே—

''மாடு போகும் வழிதனிலே,
நான் தனிக்குளம் வெட்டிவச்சேன் சிவனே
மலடியோட பேரைச் சொல்ல
அங்க வந்த மாடும் அருந்தலையே சிவனே''31

என நொந்துகொள்வதாக நாட்டுப்புறப் பாடலொன்று மலடியின் வேதனையை எடுத்துரைக்கிறது. குழந்தை இல்லையே எனப் பிறந்த வீட்டிற்கு வந்து விட்டால் வாழாவெட்டிப்பட்டம்.

**சிசுக்கொலை :** குழந்தையே பிறக்கவில்லை என்றாலும் பெண்ணைச் சமுதாயம் விரட்டியது. அந்தக் குழந்தை பெண்ணாகிவிட்டாலோ அப்போதும் சமுதாயத்தின் கொடூரப் பார்வையால் தாக்கப்பட்டாள். பெண் குழந்தை பின்னால் தன்னைப்போல் துன்பப்பட வேண்டாமென்று குழந்தையையே கொல்லத் துணிகிறாள் தாய். ''ஒரு சமூகம் தாயை எந்த அளவு புகழ்கிறதோ, அந்த அளவு அவளைச் சிதைக்கிறது'' எனும் பெண்ணியச் சிந்தனையாளரான சிமோன் தெபவ்வருடைய கூற்று இங்கு நினைவு கூர்தற்குரியதொன்று. தென்னாட்டில் எருக்கம்பால், நெல் ஆகியன சின்னஞ்சிறு பெண் குழந்தையைக்

கொல்லுகின்றன; வட நாட்டிலோ கங்கையின் பிரவாகம் விழுங்குகிறது. ஆங்கிலேயர் இந்தியாவைப் பற்றித் துணுக்குற்று எழுதிய செய்திகளில் இதுவும் ஒன்று எனலாம்.32

அறிவியல் வளர்ந்த இந்நாளில் கருவிலேயே குழந்தை ஆணா, பெண்ணா எனக் கண்டறிந்து, பெண் குழந்தைதான் கருவில் வளர்கிறதெனக் கண்டால் கருவையே கலைத்து விடுகின்றனர்; மறுத்தால் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். பெண் குழந்தைக்கென அரசாங்கம் புதிய சேமிப்புத் திட்டங்களை உருவாக்கியுள்ளது.

**அடிமைகள் :** பெண்கள் குடும்பத்தில் பெற்றோரையோ, கணவனையோ, மகனையோ சார்ந்து அடிமைகளாக வாழ்கின்றனர். அடிமைகளாகவே ஒரு காலத்தில் விற்கப்பட்டிருக்கின்றனர். கொத்தடிமைகளாகப் பண்ணையார்களிடத்தில்—(பள்ளு) ஆடுமாடுகளாகக் கேவலமாக நடத்தப்பட்டது மட்டுமின்றி அடிமைகளாக விற்கப்பட்டனர்.

''தோதரினத்துப் பெண்கள் அடிக்கடித் தன் தந்தையாலும் சகோதரனாலும் கணவனாலும் விற்கப்பட்டார்கள்.''33 ரஷ்யாவிலேயே ஒரு காலத்தில், விற்பனைக்கு 28 வயது மங்கை - விவசாயியின் மனைவி தயாரெனத் திடீர் என்று ஏல அறிவிப்பு வரும் என்கிறது ''சோவியத் மகளிர்.''34

**தேவதாசிகள் :** பெண்ணடிமையில் இது ஒரு வகை. ஒரு காலத்தில் ஆடுகளையும் மாடுகளையும் கோயில்களுக்கு விடுவது போலப் பெண்களையும் கோயிலுக்கெனக் கொடுத்து விடுகின்ற வழக்கம் இருந்திருக்கிறது. அதன் தாக்கம் தேவதாசிகள் உருவானதற்குக் காரணமானது. ராஜராஜ சோழன் காலத்தில் மிகுதி—ஸ்ரீரங்கம் கோயிலில் அண்மைக் காலம் வரை தேவதாசிகள் இருந்து - தற்போது முழுவதுமாக வெளியேற்றப்பட்டு விட்டார்கள்.

**பரத்தமை :** ஆண் பரத்தன் என யாரும் மொழிவதில்லை. பெண்ணே சமுதாய ஏசலுக்கு ஆட்படுகிறாள். சங்க காலத்தில் பரத்தையர் ஒழுக்கம் கண்டிக்கப்படவில்லை—ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது; ஆண்களுக்கு அளிக்கப்பட்ட மகத்தான உரிமையாகக் கருதப்பட்ட காலம் அது. இடைக் காலத்திலும் இருந்தது. தற்போது மறைமுகமான பரத்தமை ஒழுக்கம் காணப்படுகிறது.

**விளம்பரப் பொருள் :** பெண் ஒரு போதைப் பொருளாக-
போகப் பொருளாக-
ஆடவரால் அனுபவிக்கப்படுகின்றனர்.
ஆண்களின் மேய்ச்சல் பார்வை-
மெஸ்மரிச நோக்கு-
இவற்றோடு தற்போது...

விளம்பரப் பொருளாக—
சுவரொட்டிகளாக—
மாடல்களாக—
காபரே போன்ற நடனங்களை ஆடுபவராக—
இதழ்கள் பத்திரிகைகள் ஆகியவற்றில் அட்டைப்பட நாயகிகளாக......

**சொத்துரிமை :** தந்தை வழிச் சமுதாயம், பெண் சொத்துரிமை இழந்தாள். ஒருதார மணம் வந்து. பெண் வீட்டுக்குள் முடக்கப்பட்டபோது மேலும் பொருளாதாரச் சிதைவுற்றாள் பெண். பொருள் உற்பத்திக்கு ஆண், மனித இன மறு உற்பத்திக்கே பெண் எனச் சமுதாயம் கணக்குப் போட்டு, ஆணிடம் கையேந்தி நிற்க வைத்துவிட்டது.

**சம கூலி :** பெண் மென்மையானவள் எனக் காரணங் கற்பித்து அவளுக்கு ஆணுடன் இணைந்து ஒரே வேலையைச் செய்தாலும் சமகூலி மறுக்கப்பட்டது. ''பெண்கள் நாள் தோறும் சராசரி 15 மணி நேரத்துக்குக் குறையாது உழைத்து உலகின் 2/3 பங்கு வேலை செய்து, உலகின் பாதி உணவை உற்பத்தி செய்கின்றனர். ஆனால் உலகின் 1/10 பங்கு வருமானமே கிடைக்கிறது'' என்கிறது ஐ. நா. சபையின் 1985ஆம் ஆண்டறிக்கை. சமூகப் பொருளாதார அரசியல் சிக்கல்களின் பெண்கள் மீதான பாதிப்பு, விவசாயம் மற்றும் தொழில் துறைகளை நவீனமாக்கியதில் ஆயிரக்கணக்கான உழைக்கும் பெண்கள் தாம் வேலையிழந்தனர். இதனால் ஒரு காலகட்டத்தில் பெண் தொழிலாளிகள் நகரம் நோக்கிச் சென்றனர். குறைந்த கூலி - முதலாளித்துவ முதலைகளின் சுரண்டல் - சம கூலி மறுப்பு, அதனால் பொருளாதாரச் சரிவு அவர்களை விபச்சாரத்திற்குத் தூண்டியது.

**கல்வி :** இந்தியாவில் பெரும்பாலும் பெண் கல்வி இடைக் காலத்தில் மறுக்கப்பட்டது. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு

எதற்கு? எனச் சமுதாயம் அவள் அறிவுக் கண்களைக் குருடாக்கப் பார்த்தது. ''1887 - 1897 வரை பெண் கல்வியின் முன்னோட்டக் காலம் எனலாம்; 1891 - 1935 வரை விரைவான வளர்ச்சியை நோக்கிய சிறந்த காலம் எனலாம்; 1935 - 1963 வளர்ச்சியின் விளைவுகளோடு சமுதாயம் ஆதரிக்கத் தொடங்கிய காலம் எனலாம்.''35

இந்தியச் சமூகத்தில் கி. மு. 3-ஆம் நூற்றாண்டு வரையில் பெண் கல்விக்கு எதிர்ப்பில்லை. வேத காலத்தில் பெண்கள் கவிஞர்களாக இருந்தனர். ''சங்க காலமும் பெண் கல்விக்குத் தடை விதிக்கவில்லை. இளமை மணவழக்கம் அக்கால கட்டத்தில் இல்லை என்பதால் பெண்கள் இளமையில் கல்வி கற்றனர்.''36

சமண பௌத்தர் காலத்தில் பெண்கள் சமயத்துறைஅறிவிற்காகக் கல்வி கற்றனர். இளமைமண வழக்கம், கட்டாயக் கைம்மை, சதி எனும் பழக்கங்கள் மேலோங்கி நின்ற 19-ஆம், 20-ஆம் நூற்றாண்டுகளில்தாம் பெண் கல்வி அதிகமாகப் புறக்கணிக்கப்பட்டது. கல்வி கற்ற பெண் செருக்கால் வீட்டுக்கு அடங்கி நடக்கமாட்டாள் - மதிக்கமாட்டாள் - குடும்பக் கடமைகளை மறந்துவிடுவாள் என்ற எண்ணங்களும் அவள் கல்விக்கு விலங்கிட்டன.

சமூகத்தில் மரபு வழிப்பட்ட மூட நம்பிக்கைகளும் பெண் கல்வியைப் பாதித்தது. கற்ற பெண் கள்ளக் காதல் கொள்வாள்37 என்றும், கல்வி கற்ற பெண் விதவையாகிவிடுவாள்38 (Neera Desai, Woman in Modern Indian, P. 212) என்றும் கூறிப் பெண் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கத் துணிந்தது அற்றைச் சமுதாயம்.

## விழிப்புணர்வு தோன்றிய காலமும் வளர்ச்சி நிலையும்

பெண் பற்றிய போராட்டம் புதுமையானது. (எ. கா.) 'பெண் பௌத்தத் துறவியாகலாமா?' எனப் புத்தரும் சீடரும் (கி. மு. 6) விவாதித்ததாகக் கூறப்படுகிறது.39 பெண்களும் துறவியாகும் அந்தஸ்தைப் பெறலாமெனும் கருத்து வேறுபாடே அக்காலத்திய பெண் சிந்தனைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

''பெண்களை விற்பவர்கள் நரகத்தின் மிகக் கோரமான பிடிகளில் தள்ளப்படுவர்''40 என்கிறார் பௌத்தாயனார். அவருடைய காலம் கி. மு. 600 - 300 என்பதால், அக்கால கட்டத்திலேயே பெண்ணடிமை இருந்ததென்பதையும், விழிப் புணர்வு ஏற்பட்டு விட்டதென்பதையும் அறிய முடிகிறது.

அர்த்த சாஸ்திரம் கி. மு. 4-ம் நூற்றாண்டில் விவாகரத்து, விதவா விவாகம் குறித்துப் பேசுகிறது. சங்கராச்சாரியார், சக்தி வழிபாட்டினைச் சிறக்கச் செய்வதற்காகப் பக்தி இயக்கங் கைத் தொடங்கினார். இது தாய்வழிச் சமுதாயத்திற்கு அழுத்தம் கொடுப்பதாக அமைகிறது.

1691 -1780 வரை சொத்துள்ள மகளிர் மட்டும் மசாச்சு செஸ்ட்டில் வோட்டுப்போட அனுமதிக்கப்பட்டனர். அக்காலத் தில் பெண்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டது. இதற்கிடை யிலும் 'மேரிலேண்ட்' சட்டசபையில் பெண்களுக்கு இடம் வேண்டுமென்று மார்கரெட் பிரெண்ட் [Bront] 1647-ல் வற்புறுத்தினார். ஆனால் அவருடைய வேண்டுகோள் மறுக்கப்பட்டது. அக்காலத்தில் ஏற்பட்ட புரட்சி காரணமாக 1790-ல் பெண்கள் தற்காலிக வாக்குரிமை பெற்றனர்41 என்கிறது அமெரிக்கக் கலைக்களஞ்சியம்.

சென்-ஹாங்-மௌ [1696 - 1711] எனும் சீனமேதை பெண் கல்விக்காகப் போராடினார். பெண்ணியக்கப் பாதையில், சுவடுகளைப் பதித்த முன்னோடி என்று அழைக்கப்படுகின்ற மேரி உல்ஸ்டன் கிராஃப்ட் என்பார் பெண் கல்விக்காக முதன் முதலில் வாதாடிய பெண் ஆவார். இவர் இங்கிலாந்து நாட் டைச் சேர்ந்தவர். இவர் பெண்ணுரிமை பற்றி ''A Vindication of the Rights of women'' எனும் நூலை 1792-ல் எழுதினார்.

பெண்ணுரிமைப் போராட்டம் ஐரோப்பாவில் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கால் கொண்டது. 1789-ல் பிரெஞ்சுப் புரட்சியின் போது சுதந்திரம், சமத்துவம், சகோதரத் துவம் ஆகிய மனித உரிமைக் குரல்களோடு, பெண்மைச் சமத்துவத்திற்கான கோரிக்கைகளும் ஒருங்கிணைந்து எழுச்சி பெற்றன.42

18-ஆம் 19-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் பெண்ணுரிமை விழிப்புணர்ச்சி வளர்ச்சி பெற்றது. இக்கால கட்டம் அறிவியல் உலகமென அழைக்கப்பட்டது. தீவிரத் தேடல் கள், ஆராய்ச்சிகள் யாவும் மக்களைப் பகுத்தறிவுப் பாதையில்

இட்டுச் சென்றது. இதனால் பெண்களின் உரிமைக்காகப் பலர் கண்டனக்குரல் எழுப்பினர்.

இக்காலகட்டத்தில் ஆப்பிரிக்கர், வெள்ளையர்க்குக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டனர். 1840-ல் இலண்டனில் உலக அடிமைத் தனத்திற்கு எதிரான குரல் எழுந்தது. World Arts Slavery meet-க்கு வந்த அமெரிக்கப் பெண்கள் சிலருக்கு, அவர்கள் பெண்கள் என்ற காரணத்திற்காக அனுமதி மறுக்கப்பட்டது. இவர்கள் தங்களுக்கென ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தனர். 1844-ல் நியூயார்க்கில் செனிகா ஃபால்சில் நடைபெற்ற அக்கூட்டம் பெண்ணியக்கத்திற்கான இன்றிய மையாத நிகழ்வாக அமைந்துவிட்டது. 1848-ல் பெண்ணுரிமை பற்றிய முதலறிக்கை செனிகா ஃபால்சில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் வெளியிடப்பட்டது. ''Feminine Mystique'' எனும் நூலை எழுதிப் பெண்ணியத்தை முதன் வைத்தார்.43

ஆசியப் புரட்சி, சீனப் புரட்சியால் பொதுவுடைமை அரசு நிறுவனங்கள்பால் சார்ந்து மக்களைப் பாகுபடுத்துவதைக் கண்டிக்கவும், தந்தை வழிச் சமூக அமைப்பை அழிக்கவும் பெண்ணுரிமை இயக்கங்கள் தோன்றின.44 1848-ல் நடந்த 'பாரிஸ் கம்யூன் புரட்சியும்' ஐரோப்பா, அமெரிக்காவில் ஏற்பட்ட எழுச்சியும், பாட்டாளி வர்க்கப் பெண்கள் ஆண்களுடன் சரிநிகர் சமானமான பங்கு பெற வழிவகுத்தன.

அமெரிக்க சூசன் வீ அந்தோணி (1852 - 1906) மகளிரின் வாக்குரிமை, பதவி ஆகியன கோரும் இயக்கம் ஒன்றை நடத்தினார்.45 பெண்களுக்குப் பாதகமான ஆங்கில நாட்டுச் சட்டங்கள் எல்லாம் மாற்றப்பட வேண்டுமென ஆங்கில நாட்டில் முதன் முதலில் போராடியவர் கரோலின் நார்ட்டன் (1808 - 1877) எனும் பெண்மணியாவார். எலிசபெத் பிளான்வெல் (1821 - 1910) என்பவர் தாம், அரசின் அங்கீகாரம் பெற்ற முதல் மருத்துவர். இவர் மருத்துவத் துறையில் ஆணாதிக்கத்தை எதிர்த்தவர். (நியூயார்க் ஜெனிவா மருத்துவமனை) சம உரிமைக்காகப் பாடுபட்டவர். எமிலிடேவிஸ் (1830 - 1921) பெண் கல்விக்குக் கடுமையாக உழைத்தார். ஜோசபின் பட்லா (1823 - 1920) சட்டத்தின் முன் பாரபட்சமாக நடத்தப் படுவதை எதிர்த்துப் போராடினார். எலிசபெத் காதிஸ்டான்டன் (1815 - 1902) பெண்களின் ஓட்டுரிமைக்காகப் போராடியவர். திருமணம் பல வழிகளில் அடிமைப்படுத்துகிறது என்று தனது

''Women Rebell'' எனும் பத்திரிகையில் வெளியிட்டுப் பெண் களுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டினார்.

பிரிட்டனைச் சேர்ந்த ஜான் ஸ்டூவர்ட் மில் என்பவர் பெண் ணடிமைத்தனத்தின் அவலம் குறித்து ''The Subjection of Women'' (1869) எனும் நூலை எழுதிப் பெண்ணடிமையின் வக்ரத்தைப் பெண்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

சீன நாட்டில் ஹாங் யுவெய் (1859 - 1927) பெண்களின் பாதக்கட்டை எதிர்த்தார். பெண்கள் ஆண்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதையும் வெறுத்துக் கண்டனக் குரல் எழுந்தது.

எகிப்தில் அகமட் ஃபெயார் எல்கிட்யாக் என்பவர் (One leg crossed over the other) 'ஒரு கால் மற்ற காலுக்கு மேலாக உள்ளது' எனும் நூலை 1885-ல் எழுதினார். இதில் சமத்துவத் தைப் பற்றி சிறப்பாக எழுதினார்.

காசிம் அமின் (1885 - 1908) என்பவர் புதுமைப் பெண் எனும் நூலை வெளியிட்டார். இரான் 1880 - 90 களில் பெண் ஒதுக்கப்படல், பலதார மணம் ஆகியவற்றை எதிர்த்தனர். பண்டித ரமாபாய் (1885 - 1922), கார்த்தினி (1879 - 1904) ஆகியோர் இந்தோனேஷியாவின் பெண்ணுரிமைக்கு வாதிட் டனர். ஈரான் பாபி இனத்தைச் சேர்ந்த குவாரம் உல் அயின் (1815 - 51) எனும் பெண் துறவி முகத்திரையை எதிர்த்தார். ஜியுஜின் (1875 - .907) பெண்களுக்காகப் பல போராட்டங் களில் இறங்கி மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

தென் ஆப்பிரிக்காவில் ஃபியேட்டர் மாரிட்ஸ் உர்க் என்ற நகரில் 1910-ல் பெண்கள் விடுதலைச் சங்கம் என்றொரு சபை ஏற்பட்டது. அதில் பெண்கள் கூடிப் பார்லிமெண்டில் பிரதி நிதிகள் நியமிக்க வாக்குரிமை கேட்டுப் போராடினர்.

18, 19-ம் நூற்றாண்டுகளில் ரஷ்யாவில் மார்க்ஸும் ஏங்கல் ஸும் பாட்டாளிவர்க்கப் பெண்களுக்கான பல உரிமைகளை வலியுறுத்தினர். இக்கால கட்டங்களில் எழுந்த மேலை நாட்டுப் புதிய சிந்தனைகளும் கோட்பாடுகளும் இந்தியாவிலும் தாக் கத்தை ஏற்படுத்தின ஆனால் அன்று மேலை நாட்டில் பெண் ணியம் உருவானது போல் இந்தியாவில் அதிகம் இல்லை. எனினும் 1930-ல் பெண் விடுதலைப் புரட்சி வந்துவிட்டது எனலாம். இந்தியாவைப் பொருத்தவரை தேசிய விடுதலைப்

போராட்டம், அந்நிய ஆட்சிக்கு எதிரான போராட்டம் ஆகியவற்றால் பெண்ணியமும் பெண்ணியக்கப் போராட்டங்களும் எழுச்சியடைந்தன. இந்தியப் பெண்களின் அவல நிலையைப் பற்றி ஐரோப்பிய அறிஞர்களும் கிறிஸ்தவ நிறுவனங்களும் கண்டனக்குரல் எழுப்பின. இதற்குப் பின்னர் பல சீர்திருத்த வாதிகள் தோன்றினர். சதி ஒழிப்பு, பலதார மணத் தடை, விதவா விவாகம், முகத்திரை நீக்கம், பெண் கல்வி, சட்ட ரீதியான சமத்துவம் ஆகியன கேட்டுப் போராடினர்.

ராஜாராம் மோகன்ராய் (1772-1883) சதி ஒழிப்புக்காக அரும்பாடுபட்டார். பிரம்மசமாஜத்தைத் தோற்றுவித்துப் பிரச்சாரங்களைச் செய்வதோடு நிற்காமல் செயலிலும் ஈடுபட்டார்.

1850-ல் ஈஸ்வர சந்திர வித்யாசாகர் விதவை மறு மணத்திற்கு குரல் எழுப்பினார். கேசவ சந்திர சென் (1838-1884) குழந்தை மணத்தைத் தடுக்கக் கோரிக்கை எழுப்பினார். காந்தி உரிமைப் போராட்டங்களில் பெண்களையும் ஈடுபடுத்தினார்.

1928-ல் உப்புச் சத்தியாக்கிரகம், 1930-ல் ''ஒத்துழையாமை இயக்கம், 1931-ல் கள்ளுக்கடை மறியல், 1942-ல் ''வெள்ளையனே வெளியேறு'' போன்ற அரசியல் போராட்டங்களில் குதித்த பெண்களின் சிக்கல்களுக்கும் தீர்வுகள் ஏற்பட உழைத்தவர் அண்ணல்.

சாதி அடிப்படையிலும் பெண்ணடிமைத்தனம் தீவிரமடைந்து, திருவிதாங்கூர் போன்ற இடங்களில் தோள் சீலைப் போராட்டம் நடந்தது; ''தோள் சீலைக் கலகம்'' (upper cloth mutiny) என்று அதைக் குறிப்பர். திருவிதாங்கூரில், 1882-ஆம் ஆண்டு முதன் முதலில் கொத்தாவிளை எனும் இடத்தில் நடந்து, பின்னர் விளவங்கோடு, கல்குளம், அகதீஸ்வரம், தோவாளை போன்ற தாலூக்காக்களில் பரவியது. காரணம், நாயர் குலத்தாரும், பிராமண குலத்தவரும் அணிவது போல் நாடார், ஈழவர், பள்ளர், பறையர் போன்றோர் மேலாடை அணியக் கூடாதென்பதும் தோள் சீலை அணியக்கூடாது என்பதும் அவ்விடங்களில் சட்டம். இதனால் போராட்டம் நடந்து 1839-ல் அவர்கள் மேலாடையும் தோள் சீலையும் அணியலாம் எனச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. 1865-ல் இச்சட்டம் பகிரங்கமாக அரச அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது; பிறப்பித்தவர் ஸ்ரீ ஆயில்லியம் திருநாள் மகாராஜா.

நாயக்கர் வம்சத்தில் சேலம் மாவட்டம் எருமை நாயக்கன் பட்டி, ரவிக்கைக் கிழிப்புப் போராட்டம் குறிப்பிடத்தக்கது. கொண்டப்ப நாயக்கர் மகள் பருவமுற்றதும் மேலே ரவிக்கை அணிந்தாள். அதனால் போராட்டம் எழுந்தது. 1979 பொங்கலன்று மாட்டுக்குப் பூ, பழம் வைத்துப் பூசை செய்தாள்; போராட்டக் குழு அவளது ரவிக்கையைக் கிழித்தது. தந்தை வாதிட்டு வென்றார்.46 (மாலை முரசு, 2-5-79)

பிராமணரல்லாதார், பிராமணர்களை எதிர்த்துக் கிளர்ச்சி (Anti Brahminism) செய்தனர். 1920-ல் பிராமணச் சீர்திருத்தவாதிகளுடன் இணைந்து பிராமணரல்லாதாரும் பெண் கல்வி கோரினர். [பூனா]. அதனை எதிர்த்த லோக மான்ய பால கங்காதர திலகரை கூடப் பெண்ணியவாதிகள் புறக்கணிக்கவும் தயங்கவில்லை.

பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்களும் பெண்களின் முன்னேற்றத்தில் பங்கு கொண்டனர். பாரதி, பெண் கல்வியையும் புதுமைப் பெண்ணின் புரட்சி வேட்கையையும் வற்புறுத்தினார். பாரதிதாசன் விதவா விவாகத்திற்குக் குரல் எழுப்பினார். 'வேரில் பழுத்தபலா இங்குக் கோரிக்கையற்றுக் கிடக்கு தண்ணே' எனும் வரிகள் பெண்களின் அவலத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

1928-ல் ஈ.வே.ரா. பெண்ணுரிமைக்காகப் பாடுபட்டவர். பெண்களின் நல்வாழ்விற்காகச் செங்கல்பட்டில் ஒரு மாநாடு நடத்தினார். பெண்களுக்கு 50 விழுக்காடு பங்களிப்பும் பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற தீர்மானம் அதில் நிறைவேறியது. பல பெண்ணியக்கங்களும், சங்கங்களும், மன்றங்களும் சமத்துவத்தையும் தனிமனிதச் சுதந்திரத்தையும் அறிமுகப் படுத்தின.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் கல்வித் தரத்தில் மேம்படவும் ஓட்டுரிமை பெறவும் பெண்ணிலைவாதிகள் கிளர்ச்சிகள் செய்தனர். 1965 ல் ஐ. நா.சபை பெண்களுக்குச் சம உரிமை வழங்க வேண்டும் எனத் திட்டவட்டமான சாசனம் ஒன்றை வெளியிட்டது.

இவ்வாறாக, 19,20 ஆம் நூற்றாண்டுகளில் அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகவும், உள்நாட்டுச் சர்வாதிகார நிலப் பிரபுத்துவ ஆட்சியாளர்க்கு எதிராகவும் போராட்டங்கள் ஏற்பட்ட

போதே, பெண் நிலைவாத உணர்வும் ஏற்பட்டு வளரத் தொடங்கிவிட்டது. அறிவியல் ஞானம் பரந்த இக் காலத்தில் பெண்ணுரிமைக்கான விழிப்புணர்ச்சி மேலும் தலைதூக்கி நிற்கிறது எனலாம். 70,80-களில் சமய இபக்கங்களும், தன்னுரிமை மகளிர் இயக்கங்களும், பெண்ணுரிமை இயக்கங் களும் தோன்றி பெண்ணுரிமைக்காகப் போராடத் தொடங்கி விட்டன. 1960 களில் பெண் விடுதலை இயக்கம் குடியுரிமை இயக்கத்தினால் மேலும் உரம் பெற்றது. நம் நாட்டில் சிசுக் கொலை, பெண் கல்வி மறுப்பு, குடும்பச் சிக்கல்கள், கருக் கலைப்பு, காவலர்களுடைய வன்முறைகள் ஆகியன முன் வைக்கப்படுகின்றன. ஐ.நா.சபை 1975-1985 ஆகிய பத்து ஆண்டுகளைப் பெண்கள் ஆண்டாக நிர்ணயித்தது. இதனால் உலகெங்கும் பெண் நிலைவாதம் பரவி வளரத் தொடங்கியது.

## பெண்ணியம் - ஒரு வரையறை

டாக்டர் தேவதத்தா ''வேறு கோட்பாடுகளைப் போலப் பெண்ணியத்தின் கருத்தியல் ரீதியான தளத்தைத் தனிக் கோட்பாட்டின் தொகுப்பிலிருந்து பெற்றுக் கொள்ளவில்லை. எல்லாக் காலத்தும் எல்லாப் பெண்களுக்கும் பொருந்தும் ஒரு பொதுவான வரையறையை இதில் திணிக்க முடியாது. பார்வைகள், கலாச்சாரப் பிரிவுகள் நடைமுறைக் கேற்ப மாற்றங்கள் எனவே வரையறையானது மாற்றமடையக் கூடும். மாற்றமடையவும் செய்யும்''47 என்கிறார்.

பெண்ணியத்திற்குப் பொதுவான ஒரு வரையறையைக் கூறமுடியாது. குடும்பத்தில் நிலவுகின்ற ஒடுக்குமுறைகள், சமுதாயத்தில் பெண்களுக்குள்ள இழிவான நிலை, வேலை செய்யும் இடங்களில் காணப்படுகின்ற சுரண்டல், அரசியல் அடக்குமுறைகள் போன்ற இழிநிலைகளை மாற்றுவதற்கும் எடுக்கின்ற நடவடிக்கைகளைப் பெண்ணியத்தின் பரந்துபட்ட வரையறையாக இப்போதைய நிலையில் கூறலாம். பால் ரீதி யான அடக்குமுறை, ஆண் மேலாதிக்கம், தாய் வழிச் சமுதாயச் சிதைவு, தந்தை வழிச் சமூக அமைப்பு ஆகியவற்றை இனங் கண்டு அத்தோடு நின்றுவிடாமல் தீர்வுகள் காணவும் விழையும் ஆண்களையும் பெண்களையும் பெண் நிலைவாதிகள் எனலாம். இந்தியாவைப் பொருத்தவரை ஆண்களுக்கு மட்டுமின்றிப் பெண்களுக்கும் அவ்விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும்.

''அற்ப வீட்டு வேலைகள், சமையல், குழந்தை வளர்ப்பு ஆகியன சோர்வும் சலிப்பும் ஏற்படுத்துவன. இவ்வேலைகள் யாவும் சோசலிசப் பொருளாதார உற்பத்தியாக்கப்படவேண்டும். பெண்ணின் விடுதலையும்... அப்பொழுதே ஆரம்பமாகும்''48 எனும் லெனினின் எண்ணம் செயல்படும்போது பெண்ணிய வரையறை மிகவும் மாறும் நிலை எய்தும்.

## பெண்ணிய வகைகள்

ராமகிருஷ்ண பரமஹம்சர் பெண்ணை 'லோக மாதா' எனப் போற்றினார். மனைவியைத் தெய்வத்திற்குச் சமமாகப் பேணினார். ராஜாராம் மோகன்ராய் ''பெண்ணுக்குச் சம உரிமைகள் வழங்க வேண்டும், பெண் கல்வியைப் பரப்ப வேண்டும். அவர்களும் ஆண்களைப் போல ஆன்மா, மனம், உணர்வு, விருப்பு, வெறுப்புகள் உள்ளவர்கள்தான். உலகில் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு உரிமையுள்ளவர்கள்'' என்றார். இத்தகைய பெண்கள்;அடிமை வாழ்க்கை வாழ்வதைக் கண்டித்து பல பெண்ணியவாதிகள் தோன்றி பல பெண்ணியக் கருத்தியல்களை முன் வைத்து உழைத்தனர்.

### மிதவாதப் பெண்ணியம்

தொடக்க காலப் போராட்டம் மிதவாதமாகும். இதனை மேம்போக்கான பெண்நிலை வாதம் என்றும் அழைப்பர். இது 18-ஆம் நூற்றாண்டில் மேல்நாடுகளில் ''பகுத்தறிவுக் காலம்'' (Age of Reason) ஆரம்பித்தபோது பிறந்தது. பெண்ணியம் பகுத்தறிவுடையதல்ல என மறுப்போர், அதனை மெய்ப்பிக்க வேண்டுமென எதிர்க்குரல் எழுப்பினார் மேரி உல்ஸ்டன் கிராப்ட் என்பார்.

இது 'உடலாலும் மனத்தாலும் பெண்கள், ஆண்களை விட வேறுபட்டவர்கள். சில விஷயங்களில் பெண்கள் உயர்ந்தவர்கள். சிலவற்றில் ஆண்கள் மேலானவர்கள்' என்கிறது. அதாவது பெண்கள் அன்பு, தாய்மை, பாசம், அடக்கம், பொறுமை ஆகியவற்றில் மேம்பட்டவர்கள். ஆண்கள் உடல் வலிமை, கோபம் ஆகியவற்றில் சிறந்தவர்கள். பெண்கள் கர்ப்பம், மாதவிலக்கு ஆகியவற்றில் ஆண்களை விட உடற்கூறால் வேறுபட்டிருப்பது இத்தகு மாற்றங்களுக்குக் காரணமாகலாம்.

பெண்கள், வேளாண்மை செய்தல், ஆண்குணம் ஆகியவற்றிற்கு அஞ்சுதல், கீழ்ப்படிதல், அளவு கடந்த கற்பு ஆகிய

வற்றால் ஆணுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தனர்; ஆண்களும் தங்களது ஆணாதிக்க நிலை, பெண் கல்வியின்மை, பெண்களின் பெண்மைப் பண்பு, எதிர்ப்புணர்வின்மை, ஆகியவற்றையெல்லாம் தங்கள் சுயநலத்திற்காக, செயற்கையாகப் பெண்கள் மேல் திணித்தனர். இதை வன்மையாகக் கண்டித்து பலர், மானுட வளர்ச்சிக்கு முழுமையான சமத்துவம், பல்துறையிலும் சமஉரிமை ஆகியன மகளிர்க்கு வேண்டுமெனப் போராடினர். பெண்களும் மனிதர்கள். சிந்திக்க முடிந்த மனிதர்கள் என்பதை உணர வேண்டுமென வாதாடினர்.

கணவனையே முழுதும் சாராமலும், திருமணம் மட்டுமே பெண்களுக்கு என்பதை மறுத்தும், சம உரிமை வேண்டியும் 1792-ல் மேரி உல்ஸ்டன் கிராப்ட் (Mary Wollstone Graft) எனும் பெண், பெண் உரிமைக்கான கோரிக்கைகளை 'A vindication of the Rights of women' என்ற தம் நூல் வழி முன் வைத்தார்.

சட்டங்களில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்ன உரிமைகள் அளிக்கப்பட்டன என்றில்லாமல் யாவர்க்கும் வழங்கப்படும் உரிமைகள் ''அவனுக்கு அளிக்கப்படுகிறது'' என்ற சொற்றொடர்களே பயன்படுத்தப்பட்டன. She என்பதற்குள் He அடங்கியுள்ளான் (woman என்பதற்குள் man) என்பதை அறவே மறந்துவிட்டார்கள். இந்த மாதிரி ஒருதலைப்பட்சமான தொடர் பயன்பாடுகளை எதிர்த்து அமெரிக்காவில் 1786-ல் போராட்டம் நிகழ்ந்தது.

சமயம் மதிக்கப்பட விபச்சாரம், மது ஆகியன ஒழிக்கப்பட வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். பெண்கள் இதற்கு ஆதாரமாகக் 'குடிக்கு எதிரான இயக்கம்' (Temberance Movement) அமைந்தது.

நல்லதாய், நல்ல மனைவியாக இருக்கப் பெண் கல்வி வேண்டும். பெண்கள் பல்துறையிலும் நுழையும் உரிமை பெறுதல் வேண்டும் என்பவை போன்ற பல பெண்ணுரிமைகளுக்காகவும் போராடினர்.

ஜான் ஸ்டூவர்ட் மில் (1860 - 1873) என்பவர் நீதி, அரசியல், சமத்துவம் வேண்டுமென்று அனைத்திலும் பெண்களுக்காக வாதாடினார். இவருடைய 'பெண்ணடிமைத்தனம்' (Subjection of women) எனும் நூல் பெண்ணியக்கத்திற்கு மேலும் வலுவூட்டியது. பெண் கௌரவத்தைக் காத்துக்கொள்ள

வேண்டும். ஓட்டுரிமை பெற வேண்டும். மானுட வளர்ச்சிக்குப் பூரண சமத்துவம் வேண்டுமென வாதாடினார்.

அடுத்து Betty Friedon எழுதிய ''Feminine Mystique'' (பெண்மையின் மாயை) எனும் நூல் விழிப்புணர்ச்சி ஊட்டியது.

இருபாலாருக்குமிடையே அடக்குமுறை கூடாது. மானுட வளர்ச்சிக்குப் பூரண சமத்துவம் சட்டரீதியாகச் செயலாக்கப்பட வேண்டுமென்பது மிதவாதப் பெண்ணியத்தின் கோட்பாடுகளாகும். இன்னும், முன்னாள் சட்டங்களையெல்லாம் திருத்த வேண்டும். வேலைப் பாகுபாடுகளுக்கிடையே ஏற்றத் தாழ்வுகளைப் பார்க்கக் கூடாது. ஆணுக்குள்ள சமூக மதிப்பீட்டினைத் தரவேண்டும். பெண்ணுக்குக் கல்வியறிவு மட்டும் முக்கியமல்ல. விழிப்புணர்ச்சியையும் உணர்த்த வேண்டும். மக்கள் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி பெண்ணியக் கொள்கைகளைப் பரப்பவேண்டும். அரசியல்வாதிகள் மனத்தை மாற்றவேண்டும். சிசுக் கொலையை நிறுத்த வேண்டும். அதற்கு சமூகத்தையே மாற்றியமைக்க வேண்டும். குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்களுக்கோ, ஆண்களுக்கோ சுமைகள் அதிகம் இருக்கக் கூடாது. பெண்களுக்கு வெளியுலக வாழ்வு (வேலை வாய்ப்பு) வேண்டும். அது எவ்வளவு முக்கியமோ அதைப்போல அவருக்குக் குடும்பமும் மிகவும் இன்றியமையாதது என்பன போன்ற வாதங்களை முன் வைத்துப் போராடினார். சட்டங்கள் மூலம் தீர்வு காண முயன்றனர். மேலும் இவ்வகைப் பெண்ணியம் அபலைகள், பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டோர், கணவனால் கைவிடப்பட்டோர், விதவைகள் ஆகியோர்க்கு அபலைக் காப்பகங்கள் வைத்துக் காப்பாற்ற வேண்டும். ஆண்களோடு இணைந்து போராட வேண்டும் எனும் கருத்துடையது.

''இது போன்ற வாதங்களை வைத்து 1960-வரை போராடினர். இதனை 'முதன் அலை' என்பர்.

1960-க்குப் பின் பெண்விடுதலை மிதவாத இயக்கம் வேறுபல பரிணாமங்களோடு போராடியது. குடியுரிமை இயக்கம் (Civil Rights Movement) இதற்கு மேலும் வலுவூட்டியது. பெண் சமமாக நடத்தப்படவில்லை என்பதை உலகுக்கு வெளிச்சமாக்க வேண்டும் என்பதற்கு உள்ளாடை எரிப்புப் போராட்டமாக (Bra Buring) உருவாகி வளர்ந்தது. அது 'இரண்டாவது அலை' எனப்பட்டது. இதிலிருந்து தீவிரவாதப் பெண்ணியக்கம் உருவானது''49

குறைகள் : 1. இது சீர்திருத்தவாதம் - அதாவது தாழ்வு நிலைகளை அகற்றினால் போதும் என்ற கொள்கை. இது தவறானது.

2. ஆணாதிக்கம் செலுத்துவது பற்றிய சிந்தனையே இங்கு இடம் பெறவில்லை. சாவித்திரி கதை, சீதை கதை, அர்த்த நாரீசுவரர் (இடது பக்கம் இழிவானது. அதில் தானே சிவன் உமையை வைத்திருக்கிறார் என்பதை அறியாது, உடலில் பாதி இடம் கொடுத்துச் சமத்துவம் பாராட்டியுள் ளனர் என்கிறது புராணம்) கதை ஆகியவற்றைச் சொல்லிப் பெண்ணை ஆணுக்குள்ளேயே அடங்க வைக்கிறது.

3. தன் காலில் நிற்கும் பயிற்சிக்காகவே வேலை வாய்ப்பு. பெண் விரும்பினால் சமூகம் அவளைப் பொருளீட்ட அனுப்ப லாம். அவளுக்கு வீடும் முக்கியம். வெளியிலும் வேலை பார்க் கலாமென்பது, பெண்ணின் உரிமைக்காகக் குரலெழுப்பிய ஜான் ஸ்டூவர்ட் மில்லே தனது நூலில் உரைக்கிறார்.

4. ஒவ்வொரு சிக்கலையும் மிகவும் மெதுவாகத் தீர்க்க முனைந்தது. இதனால் நீண்ட காலம் போராட வேண்டி வந்தது.

5. ‘பலாத்காரத்தைக் கைக்கொள்பவர்கள் மீது அறநெறி ரீதியான கோபத்தைக் காட்ட வேண்டும்’ என்ற காந்தீயக் கோட்பாடும் நடைமுறையில் உதவுவதில்லை.

## மார்க்சியப் பெண்ணியம்

மார்க்சியம் என்பது பாட்டாளிவர்க்கப் புரட்சியை வழி நடத்திச் செல்ல உதவும் தத்துவமும், வாழ்க்கை முறையுமாகும். 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் முதலாளித்துவம் வளர்வதற்குத் தொழில்முறைப் பாட்டாளி வர்க்கமொன்று தோன்றியது. நசுக்கப்பட்ட பாட்டாளி களுக்காகப் போராட்டம் நடந்தது.

மார்க்சியக் கொள்கைகளில் முக்கியமானவை முதலாளித் துவம், பொதுவுடைமை என்பன. அதாவது முதலாளித்துவ மேலாதிக்கத்தை முறியடித்துப் பாட்டாளி வர்க்கத்தை மேம் படச் செய்து பொருளாதார நிலையைப் பொதுவுடைமையாக்க வேண்டுமென்பது போன்ற அவர்களுடைய தலையாய கொள் கைகளில் ஒரு பகுதியே பெண்ணடிமை பற்றிய சிந்தனை.

பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெற்றதும், பெண் விடுதலை அடைவாள். முதலாளியத்தின் தாக்கத்தில் குடும்ப அமைப்பு உடைந்து போய்க் கொண்டிருக்கிறது. கம்யூனிச சமூகத்தில் அவ்வமைப்பு முழுமையாகக் காணாது போய்விடும். சமூக உற்பத்தியில் பெண் மீண்டும் பங்கு பெறுவது பெண் விடுதலை உத்திரவாதம் செய்யும் என்பன முக்கியக் கொள் கைகள்.

மார்க்சும், ஏங்கல்சும் உலகத் தொழிலாளர்கள் ஒன்றுகூடி அறைகூவல் எழுப்பிய போது, தொடக்க காலப் பெண் நிலை வாதிகள் (மிதவாதிகள்) பெண் விடுதலைப் போராட்டத்தின் முதல் கட்டத்தைக் கடந்து கொண்டிருந்தனர். இக்கட்டமே அடிமை ஒழிப்புப் பற்றிய உலகளவிலான மாநாட்டில் அமெரிக் காவைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் கலந்து கொள்ள அனுமதி கப்படாதபின் ஏற்பட்டது.

பெண்கள் ஒடுக்கப்படுவது சமூகத்தின் உற்பத்தி முறை மற்றும் உற்பத்தி உறவுகளுடன் (மனித இன உற்பத்தி) தொடர்பு கொண்ட வரலாற்று ரீதியான ஒரு பிரச்சினையே என மார்க்சியம் கூறுகிறது.

மார்க்சியப் பெண்நிலை வாதிகளின் கடமை, பல்வேறு பரிணாமங்கள், அதற்கான தீர்வுகள், அதை அடைவதற்கான வழிகள், வடிவமைப்புகள் பற்றிய ஆய்வை மேற்கொண்டு அதனூடாக மார்க்சியத் தத்துவத்தை இத்துறையில் வளப் படுத்துவதும், அடிமைப்பட்டுக் கிடக்கும் மானுடத்தின் சரிபாதி யினரான பெண்களை விடுவிப்பதற்கான, ஒட்டுமொத்த, சமூக மாற்றச் செயல்பாடுகளில் பங்கெடுப்பதுமாகும்.

19-ஆம் நூற்றாண்டுக்கு முன் பெண்கள் தொழிற்சாலைக்கு முதலாளி முதலைகளால் நன்கு வேலை வாங்கப்பட்டனர். சமகூலி கொடுக்கப்படவில்லை. 19-ஆம் நூற்றாண்டில் அறிவியல் வளர்ச்சி காரணமாக மனித வேலையை இயந் திரங்கள் மேற்கொண்டபோது பல பாட்டாளிகள் வேலை யிலிருந்து நீக்கப்பட்டனர். அவர்களுள் பேரெண்ணிக்கை பெண்களுடையது. ஆணுக்குள்ள வேலைப்பளு - ஆனால் சமகூலி இல்லை. பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்கவில்லை. நிலச் சமுதாய வாழ்வில் வரவேற்கப்பட்ட பெண்களின் கர்ப்பம், முதலாளித்துவத்தில் ஏளனமாகப் பார்க்கப்பட்டது. பலவீனமான பெண்களுக்கு வேலை வாய்ப்பும் குறைந்தது.

பல கட்டுப்பாடுகள். இவையெல்லாம் புரட்சிக்கான சூழலை உருவாக்கியது.

ஏங்கல்ஸ், குடும்பம் - தனிச்சொத்து - அரசு ஆகியவற்றின் நிலையை ஆராய்ந்து, மனித வரலாற்றில் பெண் எப்போதுமே ஒடுக்கப்பட்டிருக்கவில்லை என அறிந்தார். சமூக உற்பத்தியில் பெண்ணின் பங்களிப்பு அதிகமாக இருந்தது. தம் காலத்து மானிடவியல் கண்டுபிடிப்புகளை முன் வைத்துத் தாய் வழிச் சமூக அமைப்பு இருந்தமை, பின்னர் - உற்பத்திச் சக்திகள் பெருகிய காலத்தில்தான் பெண்கள் தங்கள் உடற்கூறு அமைப்புக் காரணங்களால் தாங்கள் இதுவரை ஆற்றி வந்த சமூக உற்பத்தியிலிருந்து மனித மறுஉற்பத்திக்குத் தள்ளப் பட்டனர். குடும்ப அமைப்புக்குள் முடக்கி வைக்கப்பட்டனர். பலதார மண அமைப்பு, ஒரு தார மண அமைப்பானதும், ஒரு தார மண அமைப்புப் பெண்ணுக்கு மட்டுமே என்றானதும், பொருளீட்டும் ஆணாதிக்கம் உருவானதற்குக் காரணமான இந்தக் காலக்கட்டத்தில்தான்.

உடல் கூறு மேலான பயம் (பூப்பு), இனவிருத்தி, கடமை யாவும் பெண்ணை, உளவியல் ரீதியாக வீட்டுக்குள்ளேயே முடக்கிப் போட்டன.

இவ்வாறு பெண்களுக்கெனக் குடும்ப அமைப்பில் முக்கிய இடம் ஒதுக்கப்பட்டவுடன், சமூக உற்பத்தியில் பெண்களின் பங்களிப்பு இல்லாமல் போனது. இவ்வேறுபாட்டை உடைத் தெறிவதுதான் பெண் விடுதலைக்கான முதற்படி என ஏங்கல்ஸ் கருதினார்.

ஆனால் அவர் கோட்பாடு அளவிலேயே நின்றுவிடுகிறார் என்கிறார் அபர்ணா மகந்தா.50 அதற்குப் புரட்சிகரமான ஒரு முடிவை மேற்கொள்கிறார். அது, ''மனித மறு உற்பத்தி, தனிக்குடும்பம், தனிக்குடும்ப வேலைகள் பொதுத் தொழிலாக் கப்பட வேண்டும்'' என்பது. ''எல்லாப் பெண்களும் சமூக உழைப்பில் ஈடுபடுவதன் மூலமே, தமது விடுதலையைத் தேட முடியும். இதற்குக் குடும்பமென்பது சமூகத்தின் தனிப் பொருளா தாரக் கூறாக இருக்க வேண்டிய அவசியமில்லை''51 என்பது மார்க்சியக் கொள்கையாம். இதனை, மார்க்சின் மரணத்துக்குப் பின் தாம் எழுதிய 'குடும்பம் - தனிச்சொத்து - அரசு ஆகிய வற்றின் தோற்றம்' (1884) எனும் நூலில் ஏங்கல்ஸ் குறிப்பிடு கிறார்.

மார்க்சின் ''குடும்பம் என்பது விலங்கு அடிமை நிலையை மட்டும் அல்ல நிலவுடைமையின் அடிமைத் தனத்தையும் உள்ளடக்கியது. அத்தோடு சமுகத்திலும், அரசியலிலும் பின்னர் ஏற்படப் போகும் பகைமை அனைத்தையும் உள்ள டக்கிய சிறு உருவம் குடும்பமே. வரலாற்றில் ஏற்பட்ட முதல் தரமான பகைமை, ஒரு தார மண முறையில் ஆண், பெண் களிடை ஏற்பட்ட பகைமையுடன் ஒன்றாகிறது. முதல் தரமான ஒடுக்கு முறையும் பெண்பாலர் மேல் ஆண் காட்டு வதே''52 என்பது போன்ற கருத்து நிலைகளும்;

ஏங்கல்சின் ''ஒரு தார மணமுறை என்பது ஆண் பெண் களிடையே ஏற்படும் சமரசமல்ல. ஆண் பாலார், பெண் பாலாரை அடக்கி ஒடுக்குவதற்கான பிரகடனம்''53 என்ற கருத்தும் மார்க்சியப் பெண்ணியத்திற்கு அடிப்படைக் கோட் பாடுகளாக அமைந்தன. அத்தோடு தனிமனிதச் சொத்துரி மையே பெண்ணடிமைக்குக் காரணம் என்கின்றனர்.

தாய்வழிச் சமுதாய அமைப்பில் (Matriarchal Society) பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தது. ஆண்கள் குறிப்பிட்ட பெண்ணுடன் வாழப்பிடிக்கவில்லை என்றால் பிரிந்துவிடுவர். எனவே பெண்ணே குடும்பத்தலைவி. இது சிறந்த சமுதாய அமைப்பு என்று கூற முடியாவிட்டாலும் பெண் சுதந்திரமாக வாழ்ந்தாள் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் ஓரிடத்தில் நிரந்தரமாகத் தங்கி வயலில் உழுது வாழ்வைத் தொடங்கிய கால கட்டத்தில் உடலால் அதிகப் பலமுடைய ஆணின் கைக்குச் சமுதாய அமைப்பு வந்தவுடன் பெண் அடிமைப்படுத்தப்பட்டாள். இதனால் தாய்வழிச் சமுதாயம் மறைந்தது. பெண்ணும் குடும்பத்தில் அடைக்கப் பட்டாள். மார்க்சியப் பெண்ணியம் தந்தை வழிச் சமுதாயத் தையே ஒழிக்க வேண்டுமென்பதைக் கொள்கையாகக் கொண்டது. மற்றபடி பிற ஆணாதிக்கத்தைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை. இக்கருத்தைப் பின்னால் வந்த லெனின் போன்றோர் முழுதும் ஆதரிக்கவில்லை. இக்கருத்து வேறு களால் சோசலிசப் பெண்ணியம் எனும் ஒரு பிரிவு உண் டானது.

மார்க்சியப் பெண்ணியம் தீவிரப் புரட்சியில் ஈடுபட்டால் தான் பெண் விடுதலை பெறமுடியும் எனும் கொள்கையுடைய வர்கள். புரட்சியின் மூலம் சமுதாயத்தைப் புதுவிதமாக

உருவாக்க வேண்டும் என்கின்றனர். பெண்களுடன் ஆண்களும் அதிலும் உழைப்பாளி வர்க்க ஆண்களும் இணைந்தே போரிட்டால்தான் உரிமையைச் சீக்கிரம் பெறலாமென்ற எண்ணமுடையவர்கள்.

'பெரிய சுமையான பொறுப்புகளைப் பெண்களே ஏற்று நடைமுறைப்படுத்துகின்றனர்' எனச் சமூகவியல் ஆராய்ச்சியாளர் முர்டாக் (Murdock) குறிப்பிடுகிறார்.54 அல்லாதிருக்கையில் பெண்ணை மனித இன உற்பத்தியில் மட்டும் ஈடுபடுத்துவது சிறப்பல்ல என்கிறார் லெனின். அதனால் ரஷ்யப் புரட்சியில் லெனின் பெண்களை அதிகம் ஈடுபடுத்தினார். ஜார் மன்னனை எதிர்த்து எழுந்த புரட்சியில் ஆண்களுடன் பெண்களும் அதிகமாகச் சேர்ந்து போரிட்டதால்தான் விரைவில் ரஷ்யப் புரட்சி வெற்றி பெற்று ஜார் மன்னன் ஆட்சி வீழ்ச்சியுற்றதென்பது லெனினுடைய வாதம்.

குறைகள் : 1. மார்க்சியத்தில் பாட்டாளி வர்க்க விடுதலைக்கு அளிக்கும் முக்கியத்துவம் பெண் விடுதலைக்குத் தரப்படவில்லை.

2. பெண் அடிமைத் தனத்தை மட்டும் விளக்க வந்ததல்ல. பாட்டாளி வர்க்கப் போராட்டத்தில் இதுவும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

3. தந்தை வழிச் சமுதாய அமைப்பு மாற வேண்டுமென்று கூறுகிறதே ஒழிய, பிற ஆணாதிக்க மேம்பாட்டைப் பற்றி அதிகம் பேசப்படவில்லை.

4. மார்க்சியமானது ஆண், பெண் என்ற வேறுபாடின்றி மேம்பாட்டைப் பற்றி அழுத்தம் வர்க்கச் சமுதாயத்தை ஆராய்கிறதென்ற வாதத்தை மார்க்சியப் பெண்நிலை வாதிகளே இன்று ஏற்பதில்லை. அதாவது மார்க்சியமானது புரட்சிக்காக வகுத்த கொள்கைகளில் பெண் விடுதலை ஒரு நியமவாதக் கருத்தாகவே உள்ளது. ஒடுக்கப்படும் பாலினமான பெண்ணுக்கும் ஒடுக்கப்படும் பாட்டாளி வர்க்கத்திற்கும் உள்ள உறவுகளை ஆராய்வதில் மார்க்சியம் இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டும். ஜூலியட் மிக்சல் என்ற பெண்நிலை வாதியின் 'நீண்ட நெடிய புரட்சி' (The longest Revolution) என்ற நூலில் இக்கருத்து விளக்கப்படுகிறது.

5. தொழில் முறைப் பாட்டாளி வர்க்கம், முதலாளித்துவ சமூக அமைப்பைத் தகர்த்துப் புதிய சோலிச சமூகத்தைக் கொண்டு வரும் புரட்சிகர சக்தி என மார்க்சியம் கருதுகிறது. ஒடுக்கப்படும் பிற குழுக்களான பெண்கள், விவசாயிகள் மற்றும் கறுப்பு இனமக்கள் போன்றோர் புரட்சிகர மார்க்சியத்தில் அடையாளம் காணப்படவில்லை.

## தூய அல்லது மரபு நிலைப் பெண்ணியம்
(Conservative Feminism)

மிதவாதமும் சோசலிச வாதமும் இணைந்தது இவ்வகைப் பெண்ணியம். பாட்டாளி வர்க்கப் பெண்ணை அடையாது மத்திய தர மேல்தட்டு வர்க்கத்துப் பெண்களின் சிறு, சிறு குழுக்களினுள் அடைபட்டுக் கிடந்தன. தூய பெண்ணிலை வாதிகளாக (Pure feminists) உருப்பெற்ற இவர்கள், பெண்ணடிமைத்தனத்திற்குக் காரணமானது தனிச் சொத்துடை மையின் தோற்றமே என்ற மார்க்சியக் கருத்தை ஏற்கவில்லை. மாறாகக் கருதரித்தல், குழந்தைகளைப் பெற்றெடுகின்ற உடலியல் தொடர்பான காரணிகளே பெண்ணடிமைக்கு அடிப் படைக் காரணம் என வாதிட்டனர். 56

இவர்கள், தமது கருத்துக்கள் ஆணாதிக்கத்தால் பாதிக்கப் படுவதை விரும்புவதில்லை. இவர்கள் மார்க்சியப் பெண்நிலை வாதக் கோட்பாடுகளையும் பயன்படுத்தினாலும் பெண்விடுதலை பற்றிய மார்க்சியம் இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளாத தால், அதை முழுவதும் ஏற்க மறுக்கிறார்கள். புரட்சியை விரும் பாதவர்கள் ஆண்களோடு இணைந்து செயல்படவே விரும்பு கின்றனர்.

## சோசலிசப் பெண்நிலைவாதம்

19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண் டின் தொடக்கத்திலும் இவ்வகைப் பெண்ணியம், சம உரிமை யைப் போராடி பெறுவதற்கு எழுந்தது. கிளாரா ஜெட்கின், அலெக்சாந்தரா, கொல்லொன்டாய், ஏஞ்சல் பேபோப் போன்ற சோசலிசப் பெண்நிலை வாதிகள் தோன்றினர். இதனைச் சமநிலை அல்லது சமதர்மம், சமத்துவப் பெண்ணியம் என்றும் கூறுவர். சமூகப் பொருளாதார அடிப்படையில் மட்டு மில்லாமல் பண்பாட்டு நிலைகளிலும் பெண்ணடிமைத்தனம் நிலவுவதாக நினைப்பவர்கள் இவர்கள்.

சமூக அமைப்பே குறைபாடுளது. தாய் வழிச் சமுதாயத்தில் ஒரு சமத்துவம் நிலவியது. ஆனால் சிறுகச் சிறுகப் பெண்கள் கணவனாலும் முதலாளிகளாலும் சுரண்டப்பட்டனர். பெண் தொழிலாளிகளின் ஏமாற்று வித்தைக்குத் தூபம் போடுகிறது. இதனால் சமகூலி வேண்டுமெனப் போராடியது சோசலிசப் பெண்நிலை வாதம். 1976-ல் சமகூலிச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

இவ்வாறு பொருள் - உற்பத்தியால் மட்டுமின்றி மனித இன மறு உற்பத்தியிலும் பெண்கள் சுரண்டப்பட்டனர். அதற்காக மட்டுமின்றிச் சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் என்னென்ன வேறுபாடுகள் உளவோ, அவற்றையெல்லாம் நீக்கப்பாடுபட்டன. பரந்த மனப்பான்மையோடு, பரந்துபட்ட கோட்பாடுகளும் உள்ளன.

தனிநபர் சொத்துரிமை கூடாது என வாதித்தனர். புரட்சி மூலம்தான் பெண் உரிமை பெறமுடியுமென்ற கொள்கையுடையவர்கள் பொதுவாக மார்க்சியக் கொள்கைகளை ஆதரித்தாலும், மார்க்சியப் பெண்ணியக் கோட்பாடுகளிலுள்ள குறைகளை எல்லாம் நீக்குவதற்கு, அதனின்று பிரிந்து இயங்குவதே இப்பெண்ணியம். பெண்ணுக்குக் குடும்பத்தில் மட்டுமின்றிச் சமூகத்திலும் சுதந்திரம் வேண்டுமெனப் பாடுபட்டது. பெண்ணினத்தின் சொத்துரிமைக்காக அதிகமாகப் போராடினர்.

இவர்கள், தொழிற்சங்கங்கள், மக்கள் உரிமைக் கழகங்கள், முக்கியப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட செயல்பாட்டு முன்னணிகள் போன்ற வெகுஜன அமைப்புகளுடன் இணைந்து செயலாற்ற விரும்புவர். பெண்களுடைய சிக்கல்கள் நாளுக்கு நாள் போராடித் தீர்க்கப்பட வேண்டியவை. புதிய பண்பாடு, புதிய கோட்பாடு (சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட) புதிய அறநெறி ஆகியன ஆண் - பெண் உறவுமுறைகளைப் படைக்க முடியுமென்ற கொள்கையுடையவர்கள்.

**இந்தியாவில்:** கடந்த 10 ஆண்டுகளில் இந்திய அரசின் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகமும் (N.C.E.R.T) தேசிய வயது வந்தோர் கல்வித்திட்டமும்; பெண் கல்வியை மேம்படுத்த எழுத்தறிவு வகுப்புகள், முறைசாராக் கல்விமுறை, கல்விப் பணிகளைத் தன்னார்வக் குழுக்களும் மேற்கொண்டன.

யூனிசேஃபால் (unicef) வேறுபாடற்ற குழந்தைகளுக்கான பாடப் புத்தகங்கள் வெளியிடப்பட்டன. இன்னும் இந்தியச்

சமூகவியல் ஆராய்ச்சிக் கழகம், பல்கலை மானியக்குழு, ஃபோர்ட் நிறுவனம், யுனெஸ்கோ நிறுவனம், உலகத் தொழிலாளர் அமைப்பு ஆகியன பெண்களின் பிரச்சினைகளைக் குறித்து, ஆராய்ச்சி செய்து முன்னேற்றத்திற்குப் பாடுபட்டன.

எல்லாவற்றிற்கும் மேலாக மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தி தாம் பதவி ஏற்ற நாளிலிருந்தே மகளிர் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை கொடுத்து அரசுப் பொறுப்பு களைக் கண்காணித்தார். மகளிர்க்குப் பொருளாதாரச் சுதந் திரம் கிடைத்தற்குரிய செயல்களை ஆதரித்தார். மே 6, 1985 - அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி அறிக்கை ஒன்றால் பத்தாம் வகுப்புவரை பெண் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி என அறிவித்தார். முதலாளித்துவம் ஓரளவு பெண்ணடிமைக்குக் காரணம் என்பர்.

**அயல் நாடுகளில் :** 1848-ல் பாரிசில் எழுந்த கம்யூனிஸ்ட் புரட்சியிலும், ஜெர்மனியிலும் ரஷ்யாவிலும் ஏற்பட்ட புரட்சி களின் மாற்றங்களினாலும், ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உழைக்கும் பெண்களின் தொழிற்சங்கங்கள் அமைக் கப்பட்டதும் சோசலிசப் பெண்நிலை வாதம் தோன்றி வளர உறுதுணை செய்தது. ரஷ்யாவின் அக்டோபர் புரட்சிக்குப் பின் லெனின் ஆதரவோடு பெண்ணியம் வளர்ந்தது. ஜாரின் கொடுங் கோன்மை எதிர்ப்போடு தந்தையாதிக்கத்தினால் முடக்கி வைக்கப்பட்டிருந்த பெண் விடுதலையைக் கருத்தில் கொண்டு அதனையும், 1917 பிப்ரவரிப் புரட்சியில் லெனின் தமது கட்சியின் வேலைத் திட்டத்துடன் இணைத்துக் கொண்டார். திருமணச் சட்டங்கள் திருத்தப்பட்டு விவாகரத்து சட்ட ரீதியாக்கப்பட்டது. மணமாகாத பெண்ணுக்குக் குழந்தை பிறந் தால் அதற்குச் சமூகப் பாதுகாப்பளிக்கப்பட்டது. குடும்ப அமைப்பு முதன் முறையாகத் திட்டமான பரிசோதனைக்குட் படுத்தப்பட்டது. பெண்ணின் முன்னேற்றத்திற்காக நாடு தழுவிய அளவில் பெண்களே முக்கியப் பங்கு வகித்த கண் காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

1960-ல் இளைஞர் எழுச்சி மூலம் மேம்பட்டது சோசலிசப் பெண்நிலை வாதம். இது, புரட்சிகர இயக்கம். வியட்நாமின் தேசிய விடுதலைப் போராட்டம், தென்னாப்பிரிக்க நிறவெறி எதிர்ப்புப் போராட்டம், இந்தியா, வங்காளம், பாகிஸ்தான் போன்ற புரட்சிகரப் போராட்டங்களுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தது.

ஐரோப்பாவில் வளர்ந்து வரும் அமைதி இயக்கம் அமெரிக்காவில் வளர்ச்சி பெற்றுவரும் முற்போக்கு ஜனநாயக இயக்கங்கள் ஆகியவற்றில் சோசலிசப் பெண்நிலைவாதிகள் முழுமையாகப் பங்கேற்றனர்.

இயக்கங்களுக்குள்ள கோட்பாடுகளை ஏங்கல்ஸ், பூரியர், பெபல் போன்ற ஆண்களே வகுத்த நிலைமாறிப் பெண்களும் குறிக்கோள்களை வகுத்தனர். குறிப்பிடத்தக்கவர்கள்-சிமோன், தியூலா, பெட்டி ஃபிரைய்டன், கேட்மில்லட், ஜீலியட், மிக்சல் போன்ற பெண்நிலைவாதிகள்.

இதுவரை இந்தப் பெண்ணியம் குறித்துக் குறைகள் கூறப்படாதது இதனுடைய சிறந்த பணியைப் பறைசாற்று கிறது.

## தீவிரப் பெண்ணியம்

இவ்வகைப் பெண்ணியம் 60-70 களில் தீவிரமாகச் செயல் பட்டது. பெண் விடுதலை பெறக் காலம் நீடிக்கும் என்ற வெறுப்புணர்ச்சி, மிதவாதப் பெண்ணியத்தை வெறுத்து தீவிர மாகத் தலைகாட்டத் தொடங்கியது. பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இப்பெண்ணியம் மிக வேகமாக வளர்ச்சி பெற்றது.

1969-ல் நியூயார்க்கில் தீவிரப் பெண்ணியம் சமூகப் படிநிலைகளை முற்றிலுமாக உதறித் தள்ள நினைத்துச் செயல்பட்டதோடு, பொது மக்களையும் உள்ளடக்கிய தீவிரப் பெண்ணியக்கம் உருவாகப் பாடுபட்டனர். ஆனால் வெற்றி பெறவில்லை.

இவர்கள் மகளிருடைய துன்பங்களுக்கெல்லாம் ஆண்களே மூல காரணமானவர் என நம்பினர். அதனால் ஆணாதிக்கத்தை எதிர்ப்பதிலேயே தீவிரம் காட்டினர். ஆணின் மேலாண்மை, பெண்மை மீதான பலாத்காரம், பெண்கள் ஆண்களைச் சார்ந் திருக்கும் நிலை, பெண்களின் மீதான ஆண்களின் மேய்ச்சல் பார்வை, பெண்களின் படங்களை கண்டு மகிழும் வக்ரபுத்தி ஆகிய அத்தனை கட்ட வேடங்களையும் புறக்கணிக்க வேண்டு மென்று கூறியதோடு, உடனே அவர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டுமென்ற தீவிரப் போக்குடையவர்கள்.

தந்தைவழிச் சமுதாயம் அடியோடு தகர்க்கப்பட்டால்தான் பெண்ணின் பாலியல் நிலை, உழைப்பு மற்றும் கருத்தரிப்பு ஆகியவை மீது ஆணாதிக்கம் செலுத்தமுடியாது என்றும், பெண்ணின் ஆளுமைத்தன்மையும், பாலியல் நிலையில் முழுமை யான வளர்ச்சியைப் பெற முடியுமென்றும் நம்பினர்.

தந்தை வழிச் சமுதாயம், ஆணாதிக்கம், உளவியல் ரீதி யான காரணங்கள் ஆகியனவே பெண்ணை அடிமைப்படுத்து கின்றன. இது, ஆண்களின் ஆதிக்க மனத்தைக் காட்டுகிறது. இதை மாற்றியமைக்கவேண்டும். அதற்கு ஆண் பெண் இரு பாலர்க்கும் சமத்துவம் பற்றிப் போதிக்கப் புதியதொரு கலாச் சார விழைவை அவர்களுக்குள் ஏற்படுத்த வேண்டும். பொருளா தார ஒடுக்குமுறை அகல வேண்டும் என வாதிட்டன.

அரசியல் களத்துள் அவள் பிரச்சினைகளைக் கொண்டு வரவும், அவள் அரசியல் பிரக்ஞையைச் செழுமைப்படுத்தி அவளைப் புரட்சிகரச் செயல்பாட்டின் பால் உந்தித் தள்ளவும் தீவிரப் பெண்ணியம் உதவுகிறது.

தந்தையாதிக்கம் இறுதியில் தோற்கும். ஆணாதிக்கத்தைப் பெண்கள் தகர்த்தெறிந்தே தீருவர் என்ற மார்க்சியக் கோட் பாட்டோடு மிகவும் இணைகிறது இந்தப் பெண்ணியவாதம்.

''உண்மையான பெண் விடுதலைக்குப் பிள்ளை பெறும் தொல்லை அடியோடு ஒழிந்துபோக வேண்டும். மானிட வர்க்கம் பெருகாவிட்டால் என்ன ஆபத்து ஏற்பட்டுவிடும்? குங்குமம் வைத்துக் கொள்ள வேண்டுமா?'' எனும் ஈ. வெ. ரா. பெரியாரின் தீவிரக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள் குடும்பமென்ற அமைப்பையே தகர்க்க வேண்டுமென்ற போக் குடையவர்கள். குழந்தை என்ற ஒன்று ஆணுக்கும் பெண் ணுக்குமென்று பிறந்தால்தானே, பெண் குடும்பத்துக்குள்ளேயே குமைந்து போக வேண்டி வருகிறது! தந்தை ஆதிக்கம் இடர் படுத்துகிறது. Test Tube baby தாய்வழிச் சமுதாயத்திற்கு வழி காட்டக் கூடியது. ஏனெனில் குழந்தைக்கு எந்த ஆணும் உரிமை கொண்டாட முடியாதல்லவா? எனும் நோக்குடைய வர்கள்.

மதிப்பு இல்லாமையால் வந்த ஏமாற்றம், விரக்தி மனப் பான்மை ஆகியன ஆண்களையே புறக்கணிக்கும் எண்ணம்

கொள்ளச் செய்கிறது. தானே தன் காலில் நிற்க வேண்டும். குடும்ப அமைப்பே உடையவேண்டும் எனப் போராடுகிறது.

போராட்டம் புரட்சிகரமானது. பெண்கள் மட்டுமே போராட்டத்தை நடத்தவேண்டுமென்ற குறுகிய நோக்குடையது. ஆணைப் போலவே பெண்ணுக்கும் வீரம், கோபம், வன்மை ஆளுந்திறம் இருக்கிறது'' என்ற ஈ. வெ. ரா. கொள்கையைப் பின்பற்றுவது.

1945-ல் Shulamith Firestone எழுதிய 'The Dialectic of Sex'' எனும் நூல் இவர்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது.

மேனாடுகளில் இவ்வகைப் பெண்நிலைவாதிகள் தாம் அதிகம். இந்தியாவில் இதற்கு அதிக வரவேற்புக் கிடையாது.

குறைகள் : 1. இயற்கைக்கு முரண்பட்டது. இறைவனால் படைக்கப்பட்ட உலகத்தையே மதிக்காதது பெரும் தவறு.

2. ஆண்களே இல்லாத சமுதாயத்தை நாங்கள் படைக்க முடியும் என்ற இவர்களுடைய அறைகூவல் நடைமுறைக்கு ஒத்து வராது.

3. சமுதாயம் சீரழியும் - காட்டுமிராண்டித்தனமான மிருக வாழ்க்கையே எஞ்சி நிற்கும்.

4. குடும்ப அமைப்பே சிதைந்து மேனாடுகளைப் போல Hippy cult (Hippyism) வந்துவிடும்.

5. பெண், ஆண் சமன்மைக் கோட்பாட்டினை நிலை நாட்டிப் பாலியல் உணர்வின் முரண்பட்ட வெளிப்பாடுகளின் வழியில் 'சுதந்திரமாக எப்படியும் வாழலாம்' என்ற தவறான நடைமுறைகளுக்கு நியாயம் கற்பிக்கும் பெண்களுக்கு வழிகாட்டியாயமைந்து விடுகிறது.

6. ஆண்களைப் போல எல்லா நிலைகளிலும் பெண்ணால் வாழ முடியுமென்ற எண்ணத்தை உருவாக்கித் தவறுகளை நியாயப்படுத்தும் பெண் உருவாக உறுதுணை புரிகிறது.

7. பெண்ணுக்கு விவாகரத்து நியாயமான தீர்வுதான் எனினும் விரும்பிய எல்லோருடனும் வாழ்வதில் தவறில்லை

என்ற கற்பிதக் கோட்பாட்டினை நடைமுறைப்படுத்துவது பண் பாட்டிற்கு இழுக்காகும்.

## நவீன பெண்நிலை வாதம்

பொது வாழ்க்கைக்கும் சொந்த வாழ்க்கைக்கும் இடையே யுள்ள தடுப்புச் சுவர்களை இக்கோட்பாடு களைகிறது. இதனை 'பண்பாட்டுக் கலாச்சாரப் பெண்ணியம்' என்று கூறலாம்.

பெண்ணினம், ஆணினத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டுக் கலாச்சாரரீதியாக அடிமைப்பட்டதை உடைத்துவிட வேண்டு மென்றால் ஆணினத்தால் கட்டியமைக்கப்பட்ட பெண்ணினத் தின் ரகசிய உலகம் உடைக்கப்பட வேண்டும். இதற்குப் பெண்ணின் உணர்வு நிலையானது உயர்த்தப்பட்டுப் பொது வாழ்க்கைக்குள் அவள் உந்தித்தள்ளப்பட வேண்டும்.

பொதுவாக பெண்நிலைவாதத்தின் கோட்பாடுகள் பெண்ணின் சொந்த வாழ்க்கையிலிருந்தே துவங்கிச் செல் கின்றன. நவீன குடும்ப முறையில் பெண் அந்நியப்பட்டுப் போய் விடுகிறாள். பிரெஞ்சு தத்துவவாதியான கிரேன் திபூவா இதை விரிவாக எடுத்துரைப்பர். பெண்ணின் ஆளு மையும் மன நிலையும் உடைக்கப்பட்டு அவள் உலகத்தை வேறொருவர் கண்கள் மூலமே காண்கிறாள். பெண்அடிமை யை எடுத்துச் சொல்வதே ஆண்மைக்காலக் கிறுக்குத் தன மாகச் சிததரிக்கப்படுகிறது. சொந்த வாழ்க்கையிலிருந்து துவங்கி பொது வாழ்க்கையை வந்தடையும் ரீதியிலான ஆய்வு முறையை இந்தப் பெண்நிலை வாதம் மீண்டும் தொடங்கி யுள்ளது.57

'பெண்களை மாதவிலக்கு, கர்ப்பம், ஆகியவற்றால் வீட்டுக்குள்ளேயே அடைத்துப் போட்டு அடிமையாக்கி னார்கள், என்பதையே பெருமையாக ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது? மனித இன உற்பத்தியை ஓர் ஆணால் செய்ய முடியுமா? வளர்ந்து வரும் ஒரு நல்ல சமுதாயத்தில் நல்ல ஆணையே பெற்று வளர்த்துத் தருவது ஒரு பெண்தானே என ஏன் இன்னும் பூதெய்தக் கூடாது?' என்பன இவர் களுடைய வாதங்கள்.

## கூட்டு சேராப் பெண்ணியம் (Non allgnet Feminism)

அடக்குமுறைத் தளைகளிலிருந்து பெண்டிர் விடுதலை பெற வேண்டும். சம உரிமை வேண்டும். மகளிர் வாழ்வின்

அரசியல், பண்பாட்டு, பொருளாதார ஆன்மீகப் பரிணாமங்களை ஆராய வேண்டும். அத்தோடு தனித்துவத்தை இழக்காமல், எதனுடனும் கூட்டுச் சேராமல், மகளிர் வாழ்வுடன் தொடர்புடைய அனைத்தையும் ஆராய்ந்து மெய் அறிவது இதன் இலக்கு எனச் சார்லட் பஞ்ச் வரையறை தருவார்.58

## மகளிர் முன்னேற்றப் பெண்ணியம் (Carreer Feminism)

''நான் ஒரு பெண்ணியல் வாதியில்லை ஆனால்...... என்று தொடங்கும் இயல்புடையோரின் நிலையை இச்சொல் குறிக்கிறது.

**பணிகள் :** 1. சுய இலக்குகளை அடைதல் 2. மகளிர் கூட்டமைப்புகளை ஏற்படுத்தல் 3. திறம்படச் செயல்படுதல் 4. சமூகத்தில் எந்தப் பணியையும் ஏற்றுச் செயல்படும் உரிமையை வேண்டுதல்.

## மனித இன மேம்பாட்டுப் பெண்ணியம் (Eugenig Feminism)

பிரிட்டன் 19-ஆம் நூற்றாண்டிலேயே பெண் விடுதலையானது பெண்ணின் தாய்மைப் பண்பைச் சிதைத்துவிடும் என்பது இவ்வியக்கத்தாரின் நம்பிக்கை. உண்மையில் பெண்ணுக்கு இவ்வியக்கம் எதிரானது.

இவ்வாறு 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெண் நிலைவாதிகளின் நோக்கும், போக்கும் வேறு வகையான கண்ணோட்டத்தில் மாற்றம் பெற்றன. சமூகக் குடும்ப அடிப்படையில் இரண்டாந்தரக் குடிமக்களாகவே பெண் நடத்தப் படுவதை சைமன்டி பி.யூ.வோர் (The Second Sex-1949), பெட்டி ஃப்ரீடன் (The Feminine Mystique - 1963) ஆகியோரின் நூல்களைச் சுட்டிக் காட்டிப் பெண்ணுரிமை இயக்கம் அதையே வேறுதிசையில் திருப்பப்படக் காரணமாய் அமைந்தன.

குடும்பத்தில் பெண்ணுக்குச் சிறந்த பங்களிப்புண்டு. அது போது தாங்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் என்பதை நீக்கிச் சமூக உற்பத்தியிலும் பங்கு பெறவேண்டும். இரண்டிலுமே அவருடைய நிலை உயர்ந்ததுதான் என்ற எண்ணம்

பெண்களுக்கு உறைக்க எனும் நெறிக்கோளாக இப்போது பெண்ணியம் வளர்ந்து வருகிறது.

இவ்வாறு பெண் விடுதலைக்காகப் பெண் நிலைவாதிகள் பாடுபடுகின்றனர். இன்றும் 'மகளிரியல்' என்ற பெயரில் இத்தூய போராட்டம் வளர்ச்சியடைந்து எல்லாத் துறைகளிலிருந்தும் எடுத்துக்கொண்ட அறிவியல், அறநெறிக் கருத்துக்களையும் இணைந்து இத்துறையை வளப்படுத்தி முழுமைப்படுத்த முயற்சி செய்கிறது. இவ்வளர்ச்சி ஓரினத்தைப் பங்கப்படுத்துவதாக அமையாது சமத்துவம், முன்னேற்றம், சமாதானம் என்ற வழிகளில் வெற்றி நடைபோட வேண்டும். ●

**அடிக்குறிப்புகள்**


1. Tara Ali Baig "India's Woman Power" P.7
2. M. K. Gandhi "Young India, Roll of Women' P. 17
3. Encyclopaedia Britanica, Vol. 9, 1768, P. 154
4. Tara Ali Baig "India's Woman Power", P. 7
5. ராஜம் கிருஷ்ணன் ''விலங்குகள்'' இயல் 13
6. அபர்ணா மகந்தா ''மார்க்சியமும் பெண்நிலை வாதமும்'' முன்னுரை
7. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக வெளியீடு ''பெண்கள் படைப்பில் பெண்கள்'' (தொகுப்பு நூல்) ப. 42.
8. டாக்டர் தேவதத்தா ''மேலும்'' ப. 1.
9. செ. கணேசலிங்கன் ''பெண்ணடிமை தீர'' ப. 7
10. ராஜம் கிருஷ்ணன் ''காலந்தோறும் பெண்'' ப. 16
11. K. M. Kapadia "Marriage and Family in India' P. 138.
12. Dr. P. Jagadesan "Marriage and Social Ligislations in Tamilnadu" P. 7
13. Ibid, P. 102.
14. கோ. செல்வம் ''சோவியத் மகளிர்'' ப. 21

15. Kamala Devi Chattopathyoy "Indian and Women's Battle for Freedom P. 55.
16. A. R. Gupta "Women in Hindu Society" P. 77
17. M. D. Gopalakrishnan "Periyar" P. 29
18. ராஜம் கிருஷ்ணன் ''காலந்தோறும் பெண்'' ப.80.
19. மேலது.
20. Radhakrishnan "Nationalism Social Reforms and Indian Women" P. 191
21. Dr. (Mrs.) S. L. Hooja "Dowry System in India (a case Study) P. 1
22. தினமணி நாளிதழ், 25-11-'87
23. ஆ. சிங்காரவேலு முதலியார் (ப.ஆ.), அபிதான சிந்தாமணி, பக். 383-384
24. Tamil Lexicon, Vol. II, Part II, PP. 821-822
25. ராஜம் கிருஷ்ணன் ''காலந்தோறும் பெண்'' ப.131
26. மேலது, ப. 132
27. மேலது, ப. 133
28. A. S. Altekar "The Position of Women in Hindu Civilization" P. 162
29. Sushil Mehta "Revolution and the Status of Women in India". P. 203
30. நீராதேசாய் & விபூதிபட்டேல் ''இந்தியப் பெண்கள் சாதனையும், சவால்களும், ப. 57
31. நா. வானமாமலை (தொ.ஆ.), ''தமிழர் நாட்டுப் பாடல்'' 03
32 Tara Ali Baig "Indias Women Power" P. 17
33. Indira Awasty "Rural Women of India" P. 13
34. கோ. செல்வம் ''சோவியத் மகளிர்'' ப. 9
35. Sri Devi "A Country of Indian Womanhood' P. 87
36. வ. சுப. மாணிக்கம் ''தமிழ்க்காதல்'' ப. 328
37. Tara Ali Baig "Women of India" P. 157
38. Neera Desai "Women in Modern India" P. 212
39. மார்க்சியப் பெண் நிலை வாதம், ப. 29

40. மேலது.
41. The Encyclopaedia Americana, Vol. 29, 1829 P. 103
42. A. R. Gupta, The Chaning Status Women by Chandrakala Hato, P. 3
43. தேவதத்தா ''மேலும்'' ப. 7
44. பாரதியார், ''பாரதியார் கட்டுரைகள்'' ப. 169-171
45. World University Encyclopaedia Vol. 16, XVI, P. 5563
46. மாலை முரசு நாளிதழ், 2-5-'79
47. தேவதத்தா ''மேலும்'' ப. 1
48. செ. கணேசலிங்கன் ''பெண்ணடிமை தீர'' ப. 130
49. தேவதத்தா ''மேலும்'' ப. 5
50. அபர்ணா மகந்தா ''மார்க்சியமும் பெண்நிலை வாதமும்'', முன்னுரை
51. செ. கணேசலிங்கன் ''பெண்ணடிமை தீர'' ப. 148
52. மேலது, ப. 152
53. மேலது, ப. 150
54. மேலது, ப. 161
55. அபர்ணா மகந்தா ''மார்க்சியமும் பெண்நிலை வாதமும்'', ப. 5
56. மேலது.
57. தேவதத்தா & கமலி, பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேடு, ப. 43
58. மேலது, ப. 50

○

# பெண்ணியமும் உரிப்பொருளும்

டாக்டர் தி. சி. சத்தியம்

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கிற்கு இலக்கணம் கண்ட தொல்காப்பியத்தின் 'உரிப்பொருள்' என்ற கருத்தியல் இக்கட்டுரையில் பெண்ணியப் பார்வையில் படிக்கப்படுகின்றது.

ஆறாவது அறிவினால் பிற உயிர்களிடமிருந்து வேறுபட்ட மனித இனத்திடம் ஆறாம் வேற்றுமை உணர்வு வளர்ந்த போது, மனித வரலாற்றின் திசைதிரும்பியது. உடைமையைக் காக்கும் சக்தியாக ஆதிக்கம் பிறந்தது. அஃறிணைப் பொருள் களின் மீதான ஆதிக்கம் நிலைபெற உயர்திணை மீதும் ஆதிக்கம் விரிந்தது. மனித குலத்திற்கு மறுமதிப்புகளை உருவாக்கித்தரும் பெண்களையும் அடிப்படுத்துவதின் மூலம் தனியுடைமை ஆதிக்கம் தன் காலடிகளை அழுத்தமாகப் பதிக்கத் தொடங் கியது. தாய்வழிச் சமூகம் சரிந்து ஆணாதிக்க சமூகம் எழுந்தது. ஒருதார மணமுறை தோன்றியது. குழு, குடும்பம் குடும்பமாகப் பிரிந்தது. குழுத்தலைமை அரசாக மாறியது. அரசின் அதிகாரத் தைச் செயல்படுத்தும் அணு அமைப்பாகக் குடும்பங்கள் செயல் பட்டன. குடும்ப அமைப்பு சிதையாமல் இருக்கவும், தனிச் சொத்துரிமை பரம்பரை பரம்பரையாகத் தொடரவும் அரசு ஒருதார மணமுறையை வலியுறுத்தியது. அரசின் அதிகாரத்தை நிலைநிறுத்தும் கருத்தியல்களை உருவாக்கி மக்கள் மனத்தில் பதியவைப்பதில் பெரும் பங்காற்றினார்கள் புலவர்கள். இவர் கள் படைப்புகளில் ஒருதார மணமுறையை வலியுறுத்தும் காதல் தத்துவம் பேரழுத்தம் பெற்றது. காதலைக் கற்பாக வளர்த்து, குடும்பச் சிறைக்குள் பெண்களைக் கட்டி வைப்பதில் இலக்கிய இலக்கணங்கள் விழிப்பாய் இயங்கின. சங்க அக இலக்கியங்களை, இலக்கியக் கோட்பாடுகளைச் சமூக வரலாற் றுப் பார்வையில், பெண்ணிய நிலையில் படிக்கும்போது மேற் குறித்த சமூக நிலைக்குரிய கருத்தியல்கள் புலப்படக் காணலாம்.

தொல்காப்பியம், குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் ஆகிய திணைகளுக்குரிய உரிப்பொருள்களைப் பின் வருமாறு பட்டியலிடுகிறது—

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே
(அகத்திணையியல் நூற் - 16)

குறிஞ்சி உரிப்பொருள்—புணர்தல். இது ஆண் பெண் இருவர்க்கும் பொது. களவு கற்பு இரு வாழ்விலும் நிகழ்வது. பெண்ணுக்கு இவ் உரிப் பொருள் ஓர் ஆணுடன் மட்டும் என வரையறுக்கப்பட்டு விடுகிறது. புராதன சமூகத்தில் பாலுறவு கொள்ள விரும்பும் ஆணைப் பெண்ணே தேர்ந்தெடுத்தாள். ஓர் ஆணுடன்தான் என்ற கட்டுப்பாடு அன்று இல்லை. பிள்ளை களை அவளே வளர்த்தாள். பிள்ளைகளுக்குரிய தந்தை தெரியாத நிலை. ஆணாதிக்கச் சமூகத்தில், ஓர் ஆணின் வாரிசு திட்டவட்டமாகத் தெரிய, ஒரு பெண்ணுக்கு ஒருவன் மட்டுமே என்ற வரையறை ஏற்படுத்தப்படுகிறது. இந்த உரிப்பொருள் ஆணைக் கட்டுப்படுத்தாமல் பெண்ணை மட்டும் கட்டுப்படுத்திய மைக்கான சான்றுகளை சங்க அக இலக்கியத்தில் பரக்கக் காணலாம்.

பாலை உரிப்பொருள்—பிரிதல். இது ஆணின் செயல். தனி மனித வளர்ச்சி அல்லது சமூகக் கடமை காரணமாக ஆண் தான் காதலிக்கும் அல்லது வரைந்து கொண்ட பெண்ணைப் பிரிவான். விளைவு - இருவர்க்கும் துன்பம். ஆயினும் பெரிதும் பாதிப்பது பெண்ணைத்தான். களவு வாழ்விலும் கற்பு வாழ் விலும் நிகழக்கூடிய பிரிவின் கொடுமையைப் பெண் தாங்கித் தான் ஆக வேண்டும். அவளின் உள்ளத்தையும் உடலையும் இதற்கு அவள் பக்குவப்படுத்திக் கொள்ளாவிட்டால் சமூகத் தின் பழி தூற்றலுக்கு ஆளாக நேரிடும். மேலும், இப்பிரிவு சந்திப்பில் முடியும். பிரிந்து சென்ற ஆண் இவளை நாடிக் கண்டிப்பாக வருவான் என்பதற்குப் பெண்ணின் நம்பிக்கையைத் தவிர வேறு எந்தவித உறுதிப்பாடும் இல்லை. களவு வாழ்வில் பல ஆண்கள் இவ்வாறு ஏமாற்றியுள்ளனர். எனவேதான் ‘பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் (கற்பியல் நூற்பா. 143) என்கிறது தொல்காப்பியம்.

பாலை உரிப்பொருளும் அகவாழ்வில் பெண்களின் மீதான கட்டுப்பாட்டையும், அவர்கள் அகவாழ்வின் நிரந்தரமின்மை யையும் புலப்படுத்துகிறது.

முல்லை உரிப்பொருள்—இருத்தல். ஆணின் செயல் பிரிவு. பெண்ணின் நிலை ஆற்றியிருத்தல். பெண்ணுக்கு விதிக்கப்பட்ட மண ஒழுக்கம் இது. 'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்' என்ற முறையென்னையெனின், இவ்வொழுக்கம் எல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்கமாதலின், கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிலிருந்து நல்லறஞ் செய்தல் மகளிரது இயற்கை முல்லையாதலின், அது முற்கூறப்பட்டது' என்பது இளம்பூரணார் விளக்கம் (அகத். நூற்பா. 5) உணவு சேகரிப்புக் காலகட்டத்தில், காடு மேடு எங்கும் திரிந்து, தனக்கு மட்டு மின்றித் தன் சமூகத்திற்கும் உணவு தேடித்தந்து உரிமையுடன் வாழ்ந்து வந்த பெண் இனம், எந்தவிதச் சமூகச் செயல்பாடும் இன்றி, கணவனை மையமாகக் கொண்ட குடும்பச் சிறைக்குள் முடக்கப்பட்டமையை இவ்வுரிப் பொருள் தெளிவு செய்கிறது. அன்றைய வள்ளுவரின் வாழ்க்கைத் துணை நலம்; இன்றைய மணிமேகலைப் பிரசுரத்தின் 'புகுந்த வீட்டில் பெண்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை'; அண்மையில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட இருகூர் இளவரசுவின் எங்க வீட்டு மருமகள் வரை, பெண்களுக்கு இத்தகைய இல் லொழுக்கத்தை இலட்சியமாக்குகின்றன. ஆக, இருத்தல் உரிப்பொருள் பெண்ணின் இலட்சிய உரிப்பொருளாகிறது.

மருத உரிப்பொருள்—ஊடல். ஆணின் செயல் பரத்தமை. பெண்ணின் எதிர்ச்செயல் ஊடல். 'கற்பு' என்பது இங்கு ஆணுக் கில்லை. பெண்ணை ஒருவனுடன் பிணைத்த ஆணாதிக்கச் சமுதாயம், ஒருவனுக்கு எத்தனைப் பெண்களை வேண்டுமா யினும் அனுபவிக்கும் சலுகையை வழங்குகிறது. இதை மருத ஒழுக்கம் என்று அனுமதிக்கிறது. இந்த ஒழுக்கத்தால் இரு நிலைகளில் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். ஒன்று-தன்னுடன் இல்லறத்தை மேற்கொண்ட கணவன் அயர்பெண்டிருடன் உறவு கொண்டபோது, அவனைக் கடுமையாகக் கண்டித்து மாற்றவோ அல்லது மாறாத நிலையில் புறக்கணிக்கவோ உரிமையற்ற நிலை! ஊடல் என்பது சிறு சலுகை. இது ஆணினிடத்து எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. சமூகமே அங்கீகரித் திருக்கும்போது இந்தச் சிறு சலசலப்பு என்ன செய்துவிட முடியும். மற்றொன்று - ஆணின் சபலங்களுக்காக வரைந்து வாழும் வாழ்க்கையுரிமையற்ற பெண்களின் பரத்தமை நிலை.

ஆக, மருத உரிப்பொருள் பெண்களைக் கற்புடையவர்களாகவும் ஆக்குகிறது; கற்பற்றவர்களாகவும் ஆக்குகிறது. இருநிலையும் ஆண்களின் சுயநலம் கருதியதே; இரண்டிலும் இழப்பு பெண்களுக்கே.

நெய்தல் உரிப்பொருள்—இரங்கல். ஆணின் செயல், தொழில் காரணமாகப் பிரிதல். பெண்ணின் செயல் நிலையற்ற வாழ்வின் எதிரொலியாக இரங்கல். நெய்தல் நிலை ஆண்மக்கள் வாழ்க்கை கடலோடு கட்டப்பட்டதென்றால், அந்நிலப் பெண் கள் வாழ்க்கை கண்ணீர்க் கடலோடும் கட்டப்படுகிறது.

இவ்வாறு அன்பின் ஐந்திணைக்கும் உரிய உரிப்பொருள் களை உரித்துப் பார்க்கும் பொழுது அவை, ஆண்களின் தனிப் பட்ட மற்றும் சமூகரீதியான நலங்களுக்காக உருவாக்கப் பட்டவை என்பதும், பெண்கள் ஆண்களுக்காகவே தங்களை வடிவமைத்துக் கொள்ள வேண்டியவர்கள் என்பதும் தெளி வாகிறது. தனிச் சொத்துடைமையைக் காக்கவும், அரசு அதிகாரத்தை நிலைநிறுத்தவும் தோன்றிய குடும்ப அமைப்பு சிதையாமல் இருக்க, அதற்குள் பெண்ணைச் சிறைப்படுத்தும் கருத்தியல்களாக உரிப்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதும் புலனாகிறது.

தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுமையையும் சமூக வியல் ஆய்வுக்குட்படுத்தும் பொழுது, உழைப்போரும் உழைப் ஸ்பைச் சுரண்டி உயர்வோருமாக, வேறுபட்டுக் கிடந்த வர்க்க அமைப்பு விளக்கமுறும். உழைக்கும் மக்களின் அடிமைத் தனத் துடன் பெண்ணடிமைத் தனத்தையும் நயமாக நாகரிகமாக வரைந்தெடுத்த ஆணாதிக்கச் சமூகத்தின் போக்கும் புலப்படும். நமக்குக் கிடைத்துள்ள முற்பட்ட இலக்கிய இலக்கணங்கள் அனைத்தையும் இவ்வாறு பெண்ணிய நோக்கில் அணுகிப் பார்க்கும் பொழுது அவற்றிற்குப் புதிய பொருள் பரிமாணம் கிடைக்கும். மேலும் சமூக வரலாற்றிலும் அவற்றிற்குரிய பங்கு புரியவரும். ●

துணை நூல்கள்

1. பெண்ணடிமை தீர, செ. கணேசலிங்கன், பதிப்பு II - 1989 பாரிநிலையம், சென்னை.

2. பெண்களின் சுவடுகளில், சாந்தி சச்சிதானந்தம், பதிப்பு I 1989, தமிழியல், சென்னை.

3. புகுந்த வீட்டில் பெண்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், லேனா தமிழ்வாணன், பதிப்பு II - 1988, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

4. மநுதர்மம், தமிழ்நாடன், பதிப்பு I - 1988, குயில் பண்ணை சேலம்.

(ஆய்வுக் கோவை I - 1993)

—o—

# சிலப்பதிகாரம்: ஒரு 'பெண்ணிய' நோக்கு

அ. அ. மணவாளன்

## 'பெண்ணிய' திறனாய்வு

நமது தமிழ் இலக்கியம் தமிழ் மக்களின் மிகச்சிறந்த பாரம் பரியத்தையும் பண்பாட்டையும் எடுத்துரைப்பது. இறவா இலக்கியங்களாகிய இவற்றை ''பெண்ணிய'' நோக்கில் மறு பரிசீலனைக்கு உட்படுத்திப் பார்ப்பது புதிய அனுமானங்களை, செய்திகளைக் காண்பதற்கு வழி வகுக்கும். 19-ஆம் நூற்றாண்டில் விளைந்த அரசியல், சமுதாய முன்னேற்றங்களுள் பெண்ணுரிமை இயக்கமும் ஒன்று. இவ்வியக்கம் அரசியல், சமுதாயக் களங்களில் சமவுரிமை பெறுவதை இலக்காகக் கொண்டது; சமுதாய நிலையில் குடும்பம், தொழில், பொருளாதாரம் ஆகியவற்றில் ஓரளவு சமத்துவம் பெற்றதும் கலை - இலக்கியங்களிலும் சமவுரிமைப் பார்வையைச் செலுத்தத் தொடங்கியது. கலைகளில் சிறப்பாக இலக்கியத்தில் பெண்கள் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளனர் என்பதை, முன்னரே வென்று நின்ற அரசியல், பொருளாதாரத் தொடர்பான ''பெண்ணிய'' கோட்பாடுகளைக் கொண்டு நோக்கத் தலைப்பட்டது. அதன் விளைவாக, இலக்கியக் கொள்கை, இலக்கியத் திறனாய்வு என்னும் இரு துறைகளிலும் ''பெண்ணிய'' அணுகுமுறை நிலை பெறலாயிற்று. இவ் அணுகுமுறை இரண்டு வகைகளில் தற்போது செயல்படுகின்றது. அவை யாவன :

1. பெண் வாசகர் நோக்கில் இலக்கியப் படைப்பை அணுகுதல் (Woman as a reader-Feminist Criticism)
2. பெண் எழுத்தாளர் நோக்கில் இலக்கியத்தைப் படைத்து ஆராய்தல் (Woman as a Writer-Gyno Criticism)

பெண்வாசகர் நோக்கில் செயல்படும் பெண்ணிய திறனாய்வு பெண்ணின் உடலியற்கை, அதற்கேற்ற வாழ்க்கை அனுபவம்,

அடிமன இயற்கை, மொழிநடை உத்திகள், சமுதாய பொருளாதாரச் சூழல்கள் என்னும் ஐந்து நிலைகளில் பெண் பாத்திரங்களை ஆராயும் இயல்பினது. அதாவது பெண்கள் தமக்கெனத் தனித்த ஆளுமை உடையவர்கள்; ஆண்களின் பின்னிணைப்புகள் அல்ல. தம்முடைய உடலியற்கை, வாழ்க்கை அனுபவம், சமுதாய பொருளாதார வாழ்க்கையில் தமக்கென உரிய நேர் பங்கினைப் பெறுதல் என்னும் கூறுகளை உடைய ஒரு தனியாளுமையே பெண் என்பது இவ் அணுகுமுறையின் கோட்பாடு எனலாம்.

பெண்ணிய நோக்கின்படி, பெரும்பாலான பழம்பெரும் இலக்கியங்கள் ஆடவருலகக் கோட்பாடுகளால் இயற்றப் பெற்றவை. அவற்றில் உலவும் பெண்கள் தனித்துவம் பெற்ற முழு ஆளுமை உடைய உயிர்கள் அல்ல; தலைவனுக்காக, அவனுடைய குறிக்கோளுக்காக அல்லது அவற்றை எதிர்த்துச் செயல்படும் பாவைகள். ஏறக்குறைய சில படைப்பு வாய்பாடுகளுக்குள் அடங்கிவிடும் வார்ப்புகள்; தலைவன் இன்றிப் பொருள்படாப் பதுமைகள்.

உலகின் தலைசிறந்த இலக்கியங்கள் எல்லாம் தற்போது இந்த நோக்கில் மீட்டு ஆராயப்பட்டு வருகின்றன. விளைவாக இவ் இலக்கியங்கள் எல்லாம் பெண்களை இழிவுபடுத்துவன; பெண்களைப் பற்றிய ''உண்மை''யல்லாத இயல்புகளை எடுத்துரைப்பன எனக் கருதப்படுவதால், இத்திறனாய்வு அணுகுமுறையை அழிவுத் திறனாய்வு (Negative Criticism) என்று பொதுத் திறனாய்வுலகம் கருதுகிறது. பெண்ணிய நோக்கு இதனை மறுக்கவில்லை. ஆடவருலகப் பார்வையால் கட்டுண்டு இருக்கும் திறனாய்வு முறையையோ, மதிப்பீடுகளையோ, கொள்கைகளையோ இது ஏற்றுக் கொள்வதில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, இத்தகைய தலைசிறந்த உலக இலக்கியங்கள் பெண்களுக்குப் பயன்படாதன, தொடர்பில்லாதன என்னும் பொருளில் ''அயல் இலக்கியம் (alien Literature) என்று புறக்கணிக்கப்படுகின்றன.

## 'பெண்ணிய' நோக்கில் கண்ணகியும் பிற மகளிரும்

மேற்கூறப்பட்ட இருவகைகளில் இக் கட்டுரை முதல் வகைப் பார்வையாக அமைகிறது. அதாவது ஆடவர் உலகப் பார்வையால் பாதிக்கப்படாத ஒரு பெண் வாசகர் சிலப்பதிகார

மகளிர் படைப்பினை மகடூஉ நோக்கில் அணுகுவதாக அமைகிறது. ஆணாக இருந்து கொண்டு ''பெண்ணிய'' நோக்கில் பார்ப்பது என்பது சற்றுக் கடினமான பணி. ''பெண்ணிய'' திறனாய்வுக் கோட்பாடுகளைப் புதியனவாக அறிந்து கொள்ளத் தேவைப்படும் முயற்சியினைவிட முன்னரே அறிந்து கொண்டுள்ள மரபுவழித் திறனாய்வுக் கொள்கைகளை மறக்க முயல்வது மிகவும் கடினமாகத் தோன்றுகிறது. எனினும் முன்னதைக் கற்கவும் பின்னதைத் தற்காலிகமாகவாவது மறக்கவும் முயன்றுள்ளேன். இவ் ஆய்வில் வெளிப்படும் முரண்பாடுகளுக்கு இக் கட்டுரையாளன் காரணமல்லன். வேறுபட்ட பார்வையும் அதனை ஊக்கிய ஆர்வமுமே காரணங்கள்.

## உடலியற்கை

சிலப்பதிகாரம் காட்டும் மகளிர் நிலையை உடலியற்கை நோக்கில் அழகு, மெல்லியல் தன்மை, கணவனைப் பேணுதல், கணவனுக்காக வருந்துதல், பிற பெரியாரைப் பேணுதல் என்னும் நிலைகளிற் காணலாம்.

## கணவனைப் பேணுதல்

உடலியற்கையால் மெல்லியள் என இரக்கத்துடன் குறிக்கப்பட்டிருந்தும் தம் கணவன்மார்க்கு வேண்டிய உண்டி முதலியவற்றைப் படைத்தும் அவர்கள் மகிழுமாறு தம்மையே கொடுத்தும் வாழும் கட்டுப்பாடுடையவராகப் பெண்களைக் காட்டுகிறது சிலம்பு.

கோவலனுக்கு உணவு சமைத்துப் படைக்கும் திறம் விதந்து பாராட்டப் பெறுகிறது. தன் நாடும் ஊரும் துறந்து அயலாரில்லத்தே வந்து சமைக்கும் கண்ணகிக்கு எந்த உதவியும் கோவலன் செய்ததாக தெரியவில்லை. மாறாக இவளே அவன் திருவடிகளையும் கழுவித் தூய்மை செய்து வணங்கியதாக அறிகிறோம். உண்டு முடித்ததும் அடைக்காய் தரப்பெற்ற கோவலன் ''வழிநடை வருத்தம் உற்றனை; இத்துணையும் செய்து களைத்தனை நீயும் உண்பாயாக'' என்று கூறியிருக்கலாம். கூறவில்லை. மாறாக அவளை அருகழைத்து அவள் வழி நடந்த வருத்தம், அதற்குக் காரணமான தன்னுடைய குறைகள் போன்றவற்றைக் கூறி வருந்த; அவளும்தான் ஆற்றியிருந்த தன்மையையும் இருமுதுக் குரவரைப் பேணியதையும் கூறுகிறாள். பின்னர் தான் போய்ச் சிலம்பு விற்று வருவதாகக்

கூறிச் செல்கிறான். அதற்குப் பிறகும் அவள் உண்டாளா, ஓய்வெடுத்தாளா என்பது பற்றிய குறிப்பு இல்லை. அடுத்துத் தொடர்வதும் கோவலனைப் பற்றிய செய்திதான்.

## கணவனை மகிழ்வித்தல்

உண்டி முதலியவற்றால் கணவனைப் பேணிய மகளிர் தம் கணவன்மார்க்கு உடலின்பத்தையும் அளித்தனர் என்று போற்றுகிறது காப்பியம்.

> கல்வியும் புலவியும் காதலற் களித்தாங்கு
> ஆர்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
> கோலங் கொண்ட மாதவி
>
> (அந்திமாலைச் சிறப்புச் செய்...32-34)

இம்மகிழ்ச்சியில் மகளிரும் பங்கு கொண்டனர் என்ற குறிப்பு காணப்படாமை சிந்திக்கத்தக்கது. மேலும் காதலனுக்கு அளித்து என்பதால் பெண்களின் கட்டுப்பாடு குறிக்கப் பெறுகிறதே தவிர அவர்தம் ஈடுபாடு புலப்படவில்லை.

## கணவனுக்காக வருந்துதல்

இத்தகைய கடமைகளைச் செய்யும்போது தோன்றும் உடல் வருத்தத்தைப் பிறர் கூறுவதுபோல் காட்டவில்லை. மாறாகத் தங்கள் கணவற்குற்ற துன்பத்தைக் கண்டு வருந்துவதாகப் பெண்கள் போற்றப்படுகின்ற தன்மையைக் காண்கிறோம்.

> என்னோடு போந்த இளங்கொடி நங்கை...
> தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி
>
> (அடைக்கலக். 137-41)

> காதலன் துன்பம் காணாது கழிந்த
> மாதரோ பெருந்திரு உறுக வானகத்து
>
> (காட்சிக். 111-12)

## பெரியார்ப் பேணுதல்

கோவலன் மதுரையில் கண்ணகியின் விருந்துண்டு முடிந்ததும் அவனது தியாகப் பண்பினைப் புகழுமிடத்து, ''மாநகர் மருங்கீண்டு எழுகென எழுந்தாய் என் செய்தனை'' என்று இரங்குகிறாள். அதற்கு மாற்றம் உரைக்கும் கண்ணகி

தன் துயரத்தைக் கூறவில்லை; தான் இழந்த இன்பத்தைப் பற்றிக் கூறவில்லை. பிரிவுத் துன்பத்தைக் கூறவில்லை. மாறாக—

அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

(கொலைக்களக் - 71 - 73)

என்று சான்றோர்க்குத் தொண்டு செய்ய வாய்ப்பில்லாமற் போனதைத் தன் இழப்பாகக் கூறுமாறு படைக்கப்பட்டிருக் கிறாள். இவ்வாறு மெல்லியலாளான அவள் தன் இன்ப துன்பங்களை மறந்து ஆண்களுக்காகவே வாழ்ந்த பெண்மை யைக் காப்பியம் புகழ்கிறது.

## கற்பு

சிலப்பதிகாரம் காட்டும் மகளிர் கற்பினை இருவகை நோக்கு - பிரிவுக் காலத்து ஒழுகலாறு, புறத்தொழுக்கம் கூறாமை, பேதமை, கணவனின் புகழ் காத்தல் என்னும் நிலை களில் நோக்கலாம்.

பொது மகளிர் நலம் நுகர்ந்து அவர் செய்த குறிகளும் அழி யாத நிலையில் விருந்தினைச் சாக்கீடாகக் கொண்டு இல்லம் போந்த கணவன்மாரைப் புலவாது வரவேற்றுக் கூடி மகிழும் மனைவியர் அருந்ததி போன்ற கற்பினர் என்று புகழ்கிறார். மகளிர் கற்பு நிலையை - பொறுமையோட போன்ற கற்பினர் என்று புகழ்கிறார். மகளிர் கற்பு நிலையை பொறுமையோடு கூடிக் கடமையை எவ்வளவு நுணுக்கமாக வற்புறுத்துகிறார் அடிகள்.

அதே நேரத்தில் ஆணின் புறவொழுக்கப் பெருமையையும் கடியாமல் புனைந்துரைக்கிறார்.

## பிரிவுக் காலத்து ஒழுகலாறு

கலவியும் புலவியும் காதலற்கு அளித்தும், புறம் போய வழியும் மகிழ்ந்து வரவேற்றும் கணவனைப் பேணி அருந்ததி பட்டம் பெற்ற மகளிர் கணவன்மார் பிரிந்தபோது எவ்வாறு ஒழு கினர் என்று காட்டுகிறது சிலம்பு.

கணவன் உடனுறையாதபோது மனைவி ஒப்பினையின்றி ஒளியிழந்து உணர்வவித்து வாழ்தல் கற்பின் சிறப்பாகப் பேசப் படுகிறது

எனவே கணவன் பிரிந்தபோது தன்னை அலங்கரித்துக் கொள்ளாமல் உணர்ச்சிகளை அடக்கிப் பிறர் தன்னழகால் கவரப் படாதவாறு காத்துக் கொள்ளும் பெண்ணைக் கற்பிற் சிறந்தவளாகச் சிலப்பதிகாரம் காட்டுகிறது.

## புறத்தொழுக்கம் கூறாமை

கணவன் புறத்தொழுக்கம் உடையவனாயினும், உடைய வன் போலும் என்று குறிப்பால் உணர்ந்தாலும் கற்பில் சிறந்த பெண் புலம்பாமல் ஒழுகும் தன்மையள் என்பதைக் கானல்வரிப் பாடல்கள் உணர்த்துகின்றன. புலவாய், எனவே வாழி என்று காவிரியின் மேல் வைத்துப் பாடிய கோவலன் பாட்டைக் கேட்ட மாதவி தானுமோர் குறிப்பினள் போல் புலவியால் பாட, மாயப் பொய் கூட்டும் மாயத்தாள் எனக் கருதிக் கவவுக்கை நெகிழ்ந்து பிரிகிறான் கோவலன். தான் ஏற்கெனவே தன் மனைவியை விட்டுப் பிரிந்த புறத்தொழுக்கத்தனாக இருந்தும், இரண்டா மவள் புலந்நாள் போன்று பாடியதைக் கூடப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை அத்துணையளவிற்ற மாதவியிடம் ஈடு பாடுடையவனாகக் கருதலாம். ஆனால் பெண்கள் அவ்வாறு செய்யாமை கற்புநெறியாகக் கருதப்படுகிறது.

மடப்படு சாயலாள் மாதவி தன்னைக்
கடம்படாள்...

(வாழ்த்துக்.)

என்று மாதவியின் மீது கோபம் கொள்ளாத கண்ணகி பாராட்டப் பெறுகிறாள். கணவன் பிரிவால் தமக்குற்ற துன்பத்தைக் கற்புடை பெண்டிர் வெளிப்படுத்தாமல் வாழும் பெற்றியர் என்பதை—

ஏற்பா ராட்ட யானகத்து ஒளித்த
நோயும் துன்பமும் நொடிவது போலுமென்
வாயல் முறுவல்...

(கொலைக்களக். 78)

என்று தன் மாமன் மாமியர்க்கும் கணவனின் புறத்தொழுக்கம் புலப்படாமல் பொய்யாக நகைமுகம் காட்டி வாழ்ந்த கண்ணகி கூற்றில் அறியலாம். மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம்

வந்த கோவலன் அவளுடைய வாடிய மேனி வருத்தம் கண்ட தாகக் கவிஞர் குறிப்பிடுகிறார். என்றாலும் தான் இல்லாத போது எவ்வாறு ஆற்றியிருந்தாள் என்றோ, தன் புறவொழுக் கத்தால் அவளுக்கு ஏற்பட்ட இழிதகமை பற்றியோ எதுவும் கூறாமல், வான்பொருட் தொலைத்த வறுமை தனக்கு நாணுத்தரும் என்று கூறுகிறான். இத்தகைய இழிதகைமை இருவருக்கும் பொதுவானது என்ற கருத்து காணப்படவில்லை. வறுமை எனக்கு நாணுத்தரும் என்று கூறியதால், கண்ணகி நகைமுகம் காட்டிச் ''சிலம்புள...'' என்கிறாள்.

மனைவியர் புறத்தொழுக்கத்தை மறைத்தாலும் பலரும் அதனை அறிந்தே இருந்தனர். ஆனால் யாரும் அதற்காகக் கோவலனை பழிக்கவில்லை. எல்லாம் அறிந்த மாடலன் இக் குறையைச் சுட்டிக்காட்டாமல், இம்மைச் செய்தன யானறிதல் வினை, முன்வினைப் பயன்தான் உன்னை இப்போது வருத்து கிறது என்கிறான். கண்ணகியின் தோழி கூட—

கைத்தாயு மல்லை கணவற்கொரு நோன்பு
பொய்த்தாய்ப் பழம்பிறப்பில்...

(கனாத்திறம்: 55-56)

என்று கோவலனின் புறத்தொழுக்கத்திற்குக் கண்ணகியே காரணம் என்கிறாள்.

பேதமை

கற்பெனப்படுவது சொல் திறம்பாமை என்னும் வரையறை- பெண்கள் இயல்பாக அறிவு குறைந்தவர்கள் என்பதைச் சுட்டு கிறது. ''மதுரை மூதூர் யாது'' என்று கண்ணகி வினவியமை இதற்குரிய சான்றாகக் காட்டப்படும். எனவே, ஆடவர் கூறிய வழி ஒழுகும் கடப்பாடுடையவர் பெண்கள் என்ற கருத்து நிலை பெறலாயிற்று. ''மாநகர் மருங்கீண்டு எழுகென எழுந்தாய் என்செய்தனை'' என்று கோவலன் கண்ணகியின் சொல்திறம் பாத் தன்மையைப் புகழ்கிறான். குடும்பத்துள் நடைபெறும் முக்கியமான செயல்களில் முடிவெடுப்பது ஆண்களே; பெண் களைக் கலந்தாய்ந்து முடிவெடுக்கும் மரபு இங்கு காணப்பட வில்லை. செல்வம் தொலைந்தது; என்ன செய்யலாம் என்று கோவலன் கண்ணகியைக் கேட்கவில்லை. பேதமை பற்றிய மரபு இடம் பெறவில்லை போலும். மதுரை நெடுவழியாயிற்றே,

உன்னால் நடந்துவர இயலுமா? மதுரைக்குப் போகலாமா என்று அவளைக் கேட்கவில்லை. ''வருக'' என்றான்; எழுந் தாள். மண்மகளறியா வண்ணச் சீறடியாள் கண்ணகி தொலை தூர மதுரை செல்லும்முன் தன் தாய்க்கும் சொல்லவில்லை; காதலன் சொன்ன அளவில் அவன்பின் சென்றாள் என்று கண்ணகியின் கற்புக் கடம்பூண்ட தன்மை புகழ்ப்படுகிறது. இனி, மாதவிக்கு மகள் பிறந்தபோது அதற்கு என்ன பெயரிட லாம் என்று பெற்ற தாயைக் கேட்கவில்லை; கோவலனைத் தான் கேட்கின்றார்கள். ஏனெனில் பெண்கள், ''கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை'' யாகிய இயல்புடையவர் களாகக் கருதப்படுகிறார்கள். இத்தகைய பேதமை இயல் பினைக் காப்பியம்—

பெண்ணறி வென்பது பேதைமைத்தே என்றுரைத்த
நுண்ணறிவி னோர் நோக்கம் நோக்காத

(வஞ்சினமாலை 24-25)

பெண்களைக் காட்டி விளக்குகிறது.

### கணவனின் புகழ் காத்தல்

கணவன் சொற்படி நடந்து, அவனை உண்டி முதலிய வற்றால் பேணி, அவன் புறத்தொழுக்கம் பிறர்க்குப் புலப்படா வண்ணம் வாழும் பெண் அவனுக்குற்ற பழிகளையும் துடைத் துப் புகழ்காக்க வேண்டும். சொற்காத்தலில் சோர்வில்லாத பெண் கற்புடையவள். செங்கோல் வளைதலால் தென்னர் கோமானுக்குற்ற துன்பம் தாங்காத பெருங்கோப்பெண்டு ஒருங்குடன் மாய்ந்தனள். ''இருந்தைக்க'' என்ற கணவனின் கட்டளை கண்ணகிக்குப் பிறந்ததால் அவள் உடனுயிர் துறக்கவில்லை. கள்வன் என்னும் தீச்சொல் அவன் புகழை மாய்க்கும். ஆதலால் அதனைத் தீர்க்கக் கருதி கண்ணகி போராடுகிறாள். காய்கதிர்ச் செல்வன், மதுராபதித் தெய்வம், மதுரை மூதூர்ச் சான்றோர் ஆகியோர் வழியும் ''யானே கள்வன்'' என்று உயிர்துறந்த பாண்டியன் வழியும் கணவன் கள்வன் அல்லன் என்ற தீதறு நல்லுரையைக் கேட்டுக் கணவன் புகழைக் காப்பாற்றுகிறாள். கற்பின் விழுமிய செயலாக இதனைக் காப்பியம் காட்டுகிறது.

கணவனைக் கூடுதற்குரிய வழியாகத் தேவந்தி காமவேள் கோட்டம்தொழ வருமாறு அழைத்தபோது கண்ணகி ''பீடன்று'' என்று கூறிக் கணவனையன்றிப் பிறதெய்வம் தொழாத

கண்ணகியைப் பாராட்டுகிறது காப்பியம்; ஆண், பெண், இருபாலருள் இருந்த சமநிலை நீங்கி ஒருவர் தெய்வமாக உயர்த்தப்படும் நிலை இது. காப்பிய முடிவில் கண்ணகி என்னும் பெண் தெய்வத்தை கற்புடை மகளிருள்ளிட்ட பலரும் தொழுவது காட்டப்பெறுகிறது. இந்த இருவகை நிலைகளை யும் பெண்ணீய திறனாய்வு ஏற்றுக் கொள்ளாது.

## காப்பிய பாவிகம்

கற்பின் கொழுந்தைத் தலைவியாக்கிப்பின்னர்தெய்வமாக்கி காட்டும் பாவிகமும் ஆடவலருகக் கோட்பாட்டின் நன்மைக் காக ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. கண்ணகியின் கற்புத்திறம் அவள் பிறர் நெஞ்சு புகாதிருத்தல் அல்லது பிற ஆடவருடன் வழுவாதிருத்தல் என்னும் நோக்கில் போற்றப்படவில்லை. மாறாக, ஆணுக்கு அவள் எவ்வாறு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கில் காட்டப்படுவதைக் காண்கிறோம். பெண்ணிய நோக்கு கற்பினை வெறுப்பதுமில்லை, புறக்கணிப்பதுமில்லை. ஆனால் ஒரு பாலார்க்கென கற்பு ஒதுக்கப்படுவதை அது ஏற்றுக் கொள்ளாது. இரு பாலாருக்குள் உயர்வு, தாழ்வு இருப்பதாகப் படைப்பதையும், ஓர் இலக்கியப் படைப்பு ஆட வரையோ, மகளிரையோ தனித்து வாசகராகக் கொள்ளும் நோக்கினையும் பெண்ணிய திறனாய்வு ஏற்றுக் கொள்வ தில்லை.

## இருப்பினும் *சில இடங்களில்...*

மேற்கண்டவாறு ஆடவருலகப் பார்வையில் சிலம்பு பெண் களைப் படைத்திருப்பினும், இளங்கோவடிகள் சில இடங்களில் மகடூஉ நோக்கிலும் மகளிரைப் படைத்திருக்கக் காண்கிறோம். சான்றாக, மதுரையில் கண்ணகிக்கு ஏற்பட்ட இன்னல்களை யும் அவற்றை அவன் எதிர்கொண்ட பாங்கினையும் தண்டமிழ் ஆசான் சாத்தன் கூறக்கேட்ட செங்குட்டவன், 'மன்னவன் உயிர் துறந்ததும் உடனுயிர் துறந்த பெருங்கோப்பெண்டு, கணவனை இழந்து வாழும் கண்ணகி ஆகிய இருவரில் வியக்கத் தக்கவராக நீ யாரைக் கருதுகிறாய்' என்று தன் அரசியாகிய வேண்மாளைக் கேட்கிறான். பொதுப்பணி ஒன்றைக் குறித்து ஓர் அரசன் தன் மனைவியைக் கருத்துரைக்குமாறு கேட்பதே மகடூஉ நோக்கில் பாராட்டக் கூடியதாகக் கருதப்படும். ''இப்பத்தினிக் கடவுளைப் பரவல் வேண்டும்'' என்ற வேண் மாளின் கருத்துரைதான் கண்ணகியைக் கடவுளாக்குவதற்கு

அடிப்படையாக அமைந்துவிட்டது. எனவே கருத்துரை கேட்ட தோடு அமையாது அதனைச் செயலாக்கவும் முற்பட்ட செங்குட்டுவனின் செய்கை பெண்ணிய திறனாய்வு நோக்கில் போற்றுதற்குரியது. கண்ணகியைப் பத்தினி கடவுளாக்கிய பாவிகம் பெண்ணிய நோக்கிற்கு எதிரானது எனினும், செங் குட்டுவனின் மேற்காட்டிய செய்கை வரவேற்கத்தக்க மாற்ற மாகும்.

அடுத்து, போற்றா ஒழுக்கத்தைப் பிறர் கண்டித்துக் கூறுவ தாகக் காப்பியம் கூறாவிடினும், அதைக் குறிப்பிட்டு வருந்து வதாக—

நெறியின் நீங்கியோர் நீர்மையே னாகி...

(ஊர்காண். 17)

இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவுக்குச் சிறுமையுஞ் செய்தேன்

(கொலைக்களக். 67 - 78)

என வரும் கோவலன் கூற்றும், கணவனது புறத்தொழுக் கத்தைப் புலப்படுத்தாமல் வாழ்ந்தவளாயினும், அவன் தன் பொறுமையைப் பாராட்டுமிடத்து—

போற்றா ஒழுக்கம் புரிந்தீர் (கொலைக்களக். 81)

என்று அவன் குற்றத்தை அவனிடமே கூறும் கண்ணகி கூற்றும் பெண்ணியத் திறனாய்வு நோக்கில் பாராட்டுதலுக்கு உரியனவாகக் கருதப்படும். ஆண்கள் தம் குற்றத்தை ஏற்றுக் கொள்வதும் பெண்கள் தன் கணவன்மார் குற்றத்தைக் கண்ணின்று கண்ணறச் சொல்வதும் ஆடவருலகப் பார்வையில் ஏற்றுக் கொள்ளாதன. இளங்கோ அடிகளின் இப்புரட்சி மாற்றமும் சிந்திக்கத்தக்கது. ●

**பார்வை நூல்கள்**


| | |
|---|---|
| Dohovan Josophine (ed) 1975 | Feminist Literary criticism : Explanations in theory, Kentucky. |
| Eagdeton Mary (ed) 1986 | Feminist Literary Theory : A Reader London : Oxford. |
| Natoli, Joseph (ed) 1987 | Tracing Literary Theory, chicago, University of Illinois Press. |
| Newton, K. M. (ed) 1988 | Twentieth century Literary Theory : A Reader, Newyork: St. Martins Press. |
| Sehaft, Anne Wilson 1985 | Women's Reality, 2nd edn. Minne - sota Winston Press. |
| Showalter, Elaine (ed) 1985 | The New Feminist criticism : Esaays on women, Literature and Theory Newyork. |


(நாவாவின் ஆராய்ச்சி-35 - 1990)

○

# வேதநாயகம் பிள்ளையின் நாவல்கள்

## —ஒரு பெண்ணிய நோக்குத் திறனாய்வு

*லின்டா கிறிஸ்டி*

மேலைநாடுகளில் யதார்த்தவாத நாவல்கள் தோன்றிய காலத்தில் தமிழகத்தில் யதார்த்தவாத நாவல்கள் தோன்ற வில்லை. வெறும் ரொமான்டிசிசப் பாணி லட்சியவாத நாவல்கள் மட்டுமே தோன்றின. தமிழில் முதல் நாவலாசிரிய ரான வேதநாயகம் பிள்ளையின் இரண்டு நாவல்களிலும் யதார்த்தமான மனிதர்கள் சித்தரிக்கப் படவில்லை. கற்பனை வடிவில் எழுந்த லட்சிய பாத்திரங்களே முக்கியமான பங்கு பெறுகின்றனர். நடைமுறை குணச்சித்திரங்களை இங்கு காணமுடியவில்லை. ஆனால் இந்த நாவல்களின் கதைத் தலைவர்களும் தலைவிகளும் தெய்வீக அம்சம் பொருந்தியவர் களாகவும் உயர்ந்த குடியில் தோன்றியவர்களாகவும் எல்லா விதமான நற்பண்புகளும் லட்சணங்களும் உடையவர்களாகவும் நீதியையும் மனித தர்மத்தையும் காக்கிறவர்களாகவும் காட்டப் படுகின்றனர்.

வேதநாயகம் பிள்ளை பெண்களைக் குறித்துப் பல சீர்திருத்தக் கருத்துகளை முன் வைக்கிறார். ஆனால் அவர் பெண்ணிய வாதிகளின் கொள்கைகளிலிருந்து மாறுபடுகிறார். பெண்ணியவாதிகள் பெண்களைத் தெய்வீகத்தன்மை உடைய வர்களாகவோ, குண நலன்களில் பூரணத்துவம் பெற்றவர் களாகவோ பார்ப்பதில்லை. பெண்களைத் தெய்வமாகவோ, அடிமையாகவோ, பிற பொருட்களுக்கு ஒப்பாகவோ பார்ப் பதைப் பெண்ணிய வாதிகள் ஏற்றுக் கொள்வதில்லை. பெண் களை ஆணைப் போன்று மனிதப் பிறவியாகப் பாராது, ஆணுக்கு இரண்டாம் பட்சமாகப் பார்ப்பதையும், அவர்கள் தன்னிலை உணர்வோடு செயலாற்றினாலும் அதை ஏற்றுக்

கொள்ளாது சமூகம் அவர்களை ஆணுக்குக் கீழ்ப்பட்டவர்களாக நடத்துவதையும் பெண்ணியவாதிகள் கண்டிக்கின்றனர். ஆணை ஆண் மனிதப் பிறவியாகவும் பெண்ணைப் பெண் மனிதப் பிறவியாகவும் காண விரும்பினர். பாலடிப்படையில் காணப்படும் உருவ வேறுபாட்டைத் தவிர செயல்படுவதில் ஆணும் பெண்ணும் வேறுபடுவதில்லை என்று எண்ணினர். ஆனால், ஆணாதிக்க சமுதாயம் பெண்களைத் தன்னிலை உணர்வோடு (as a subject) செயல்படும் மனிதப் பிறவியாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை இலக்கியங்களும் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் உணர்த்துகின்றன. எனவே பெண்ணை மனிதப் பிறவியாகப் பாராது பொருளாகப் பார்க்கின்ற சமுதாயத்தை எதிர்த்து பெண் விடுதலை பெறவேண்டும் என்ற கருத்தைப் பெண்ணியவாதிகள் முன் வைத்தனர். ஆணாதிக்க சமுதாயக் கருத்துகளின் தாக்கத்தினால் பாதிக்கப் பெற்ற இலக்கிய கர்த்தாக்கள் பெண்ணிய வாதிகளைப் போன்று பெண்விடுதலை பற்றிய செய்திகளைக் கூறாமல் பெண் சீர்திருத்தம் பற்றிய செய்திகளைக் கூறினர். இவ்வாறு வேதநாயகம் பிள்ளையின் நாவல்களிலும் பெண் சீர்திருத்தக் கருத்துகளும் ஆணாதிக்கக் கருத்துக்களும் விரவி வருகின்றன என்பதற்குப் பல சான்றுகள் உண்டு.

பெண்களின் திருமண விஷயத்தில் சமூகத்தில் காணப்படும் ஆணாதிக்கப் போக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதை ஆசிரியர் காட்டும் திருமணங்களும் உறுதிப் படுத்துகின்றன. வேதநாயகம் பிள்ளையின் நாவல்களில் நடை பெறும் திருமணங்கள் உறவினர்களுக்குள்ளே நிச்சயிக்கப் பட்டவையாகும். ஞானாம்பாள் பிரதாப முதலியாரின் மாமனாரின் மகள். (பக். 27) ஆண்டாள் அம்மாள் தன் அத்தை மகனை மணந்து கொண்டதாகக் கூறுகிறார். கனகசபையும் அத்தை பெண்ணை மணந்த செய்தி வருகிறது. (பக். 123) மேலும் இந்த உறவினர்கள் செல்வந்தர்களாக இருக்கின்றனர். ‘சுகுணசுந்தரி’யில் சுந்தரியும் புவனேந்திரனும் ஒருவரை யொருவர் மணக்கும் விருப்பமுடையவர்கள் என்பதைப் பெரியோர்கள் தெரிந்து கொண்ட பின்னரும் புவனேந்திரன் குலம் பற்றிய விவரம் கிடைக்கும் வரையிலும் அவர்கள் திருமணம் நடைபெறவில்லை. புவனேந்திரன் உயர்ந்த குலத்தைச் சார்ந்தவன் என்ற உண்மை வெளியான பின்னரே அத்திருமணத்தை, பெரியோர்கள் நிச்சயித்து நடத்துகின்றனர். எனவே குலம், செல்வம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆண்கள்

முடிவெடுக்கும் திருமணங்கள்தான் இரண்டு நாவல்களிலும் காட்டப்பட்டுள்ளன.

பெண்கள் ஆண்களின் உடைமையாகக் கருதப்படும் சமுதாயத்தில் பெண்கள் கற்புடையவர்களாக இருக்க வேண்டுமென்பதைச் சமுதாயம் எதிர்பார்த்தது. இந்தக் கட்டுப்பாட்டைச் சமுதாயம் ஆண்களுக்கு விதிக்கவில்லை. கற்பில் தவறிய பெண்கள் தண்டிக்கப்பட்டனர். திருமணமாகும் பெண்கள் கன்னியராகவே இருக்க வேண்டுமென்று ஆணாதிக்க சமுதாயம் எதிர்பார்த்தது. இதன் மூலம் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான உரிமையைச் சமுதாயம் வழங்கவில்லை என்பது தெளிவாகின்றது. வேதநாயகம் பிள்ளையின் நாவல்களிலும் கற்பில் சிறந்த பெண்கள் பற்றிய செய்திகள் உள்ளன. உதாரணமாக, ராணிமங்கம்மாளின் கதையில் வரும் கற்பலங்காரியின் கற்புச் சிறப்பைக் கூறலாம். ராணியின் தம்பி காமியம் நாயக்கன் ஆவான். கூவனிடம் பணிபுரியும் உத்தியோகஸ்தர்களில் ஒருவர் மங்களாகரம் பிள்ளை. அவரது பத்தினி கற்பலங்காரி. அவள்மீது காமியம் மோகம் கொண்டான். அத் துஷ்டனிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக கற்பலங்காரி பட்ட சிரமங்களை ஆசிரியர் விவரிக்கிறார். ஆனால் அக்கால சமுதாயம் காமியப்பனைத் தண்டிக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இறுதியில் கற்பலங்காரி தன் கணவனின் உயிருக்காக மன்றாடி மங்கம்மாளிடம் முறையிட்டபோது, மங்கம்மாள் காமியப்ப நாயக்கனுக்குத் தண்டனை வழங்குகிறாள். இங்கு ஒரு பெண் மற்றொரு பெண்ணிடம் இரக்கம் கொண்டு தண்டனை வழங்குகிறாள். பெண் எல்லோருக்கும் நியாயம் வழங்கும் உரிமையை ஆணாதிக்க சமுதாயம் அவளுக்கு வழங்கியுள்ளது; அது ஆணாதிக்க சமுதாயத்தின் கட்டுமானத்தைப் பலப்படுத்த உதவும் என்று சிந்தனைவாதிகள் கூறுகின்றனர்.

கணவன் இறந்த பின்னர் பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கம் நம் நாட்டில் இருந்தது. பெண்கள் இவ்வாறு உயிர் துறக்கும் கொடுமை ஆணாதிக்கத்தைக் காட்டுகிறது. அவ்வாறே பால்ய விவாகத்தின் கொடுமையும் இந்நாட்டில் நிகழ்ந்தது. அத் தீய வழக்கங்களை 'சுகுண சுந்தரி' யில் ஆசிரியர் கண்டிக்கிறார் (பக். 75-83). ஆனால் பிரதாப சரித்திரத்தில் அவர் கற்புடைய பெண்களைப் பற்றிக் கூறும் போது, ''அநேக ஸ்திரீகள் அந்நிய புருஷர்கள் கையில் அகப்பட்டுக்

கொண்டு தப்புகிறதற்கு வேறே மார்க்கம் இல்லாமையினால் தங்கள் நாக்கைப் பிடுங்கிக் கொண்டும் கிணற்றில் விழுந்தும் கத்தியால் கழுத்தை அரிந்து கொண்டும், இவ்வகையாகப் பிராணனைக் கொடுத்துக் கற்பைக் காப்பாற்றினார்களே! புருஷர்களோடு கூட உடன்கட்டை ஏறி மாண்டுபோன பதிவிரதைகளுக்குக் கணக்குண்டா?'' என்கிறார். சுகுணசுந்தரியில் பால்ய விவாகத்திற்கென்று கட்டாயப்படுத்தப்பட்ட ஒரு பெண் குழந்தைக்கும் தாய்க்கும் நடைபெறுகின்ற உரையாடலில் மகள் தாயிடம் ''அப்படியானால் நான் முந்தி இறந்துபோனால் புருஷனும் என்னோடு கூட உடன் கட்டை ஏறுவானா?'' என்றொரு கேள்வி எழுப்புகின்றாள். ஆணாதிக்கக் கருத்துக்களோடு பெண்சீர்திருத்தக் கருத்துக்களும் விரவி வருவதற்கு இது தக்க சான்றாகும்.

மேலும் நாக்கைப் பிடுங்கி இறத்தல், கிணற்றில் விழுதல், கழுத்தை அரிந்து கொள்ளுதல், உடன்கட்டை ஏறுதல் போன்றவை இயற்கையாகச் சம்பவிக்கின்ற மரணங்கள் அல்ல. நாட்டுப்புறக் கதைகளிலும், கதைப்பாடல்களிலும் பெண்கள் இத்தகைய மரணங்களை எதிர்கொள்வதுண்டு. சமூகமே இப்படியொரு சூழ்நிலையை அங்கீகரிப்பதால்தான் பெண்கள் இத்தகைய சோக முடிவுக்குள்ளாகின்றனர். அம் முடிவுகளைக் குறித்து வேதநாயகம் பிள்ளையும் தமது நாவல்களில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே வகையான தவறைச் செய்யும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமுதாயம் வழங்கும் தண்டனை வெவ்வேறானது. இதற்கு எடுத்துக்காட்டு வேதநாயகம் பிள்ளையின் நாவலிலும் உண்டு. ஞானாம்பாள் துஷ்டபுருஷனைத் திருத்துவதற்கு மனைவி மேற்கொள்ளும் முறைகளைப் பற்றி ஒரு கதை மூலமாக விளக்குகிறாள் (பக் 13 - 136). வைப்பாட்டியின் மீது பிரியம் கொண்ட கணவனை அவனது மனைவி நற்குணங்களாலும் தெய்வ பக்தியாலும் திருத்துகிறாள். அது போல, கெட்ட பெண்சாதியைக் கணவன் திருத்தும் முறை குறித்துப் பிரதாப முதலியார் கூறும் கதை (பக். 136 - 138) உள்ளது. அது ''அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்'' என்பது போல் தண்டனையால் மனைவியின் பிடிவாதமான துர்க்குணத்தை மாற்றிய கணவனைப் பற்றிய கதையாகும். சமுதாயம் வழங்கும் நியாயத்தின் அளவுகோல் ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறானது என்பது விளங்குகிறது.

பெண்கள் கல்வி கற்க வேண்டும்; குதிரையேற்றம், யானையேற்றம் போன்றவற்றில் தேர்ச்சி பெறவேண்டும் என்ற எண்ணம் உடையவர் வேதநாயகம் பிள்ளை என்பதையும் அவரது நாவல்கள் உணர்த்தும். சுந்தரத்தண்ணி பிற பெண்களோடு கவர்னரை அணுகி ஆண்களைக் காவலிலிருந்து விடுவிக்குப்படி நியாயம் வேண்டிய நிகழ்ச்சி பெண்களின் ஆற்றலை உறுதிப்படுத்துகிறது. வேதநாயகம் பிள்ளை பெண்கள் மீது கொண்டிருந்த அன்பையும் நம்பிக்கையையும் இது புலப்படுத்தும். ஆனால் ஆணாதிக்க சமூகம் கூறும் பெண்களுக்குரிய பண்புகளான அச்சம், மடம், நாணம் போன்ற குணங்களைக் குறித்தும் இவரது நாவல்கள் கூறும். ஆண்டிச்சி அம்மாளின் கணவர் நியாயம் விசாரிக்கும்போது ஞானாம்பாளும் ஆண்டிச்சி அம்மாளும் திரைமறைவில் இருக்கின்றனர் (பக். 112-113). அதுபோல கவர்னரிடம் நியாயம் பெற்ற சுந்தரத்தண்ணியைப் பலரும் வாழ்த்தி வணங்கும்போது அந்நிய புருஷர்களுக்குச் சுந்தரத்தண்ணியின் தரிசனம் கிடைக்கவில்லையாம் (பக். 203). அரசாட்சி புரியும் திறமை கொண்ட ஞானாம்பாள் பிரதாப முதலியாரிடம், ''உங்களைத்தவிர வேறு புருஷர்களை நான் முகாலோபனம் செய்ததேயில்லை. நம்முடைய வீட்டில் வேலைக்காரர்களிடத்தில் பேசும்போது கூட எனக்கு சங்கோசமுமாயிருக்கும்'' (பக். 258) என்கிறாள். இங்கு காட்டப்படும் பெண்கள் ஆண்களோடு நேரடியாகப் பழக முடியாத நிலைமையானது சொத்துடைமை சார்ந்த மதிப்பீட்டைக் (Values) காட்டும்.

பெண்ணடிமையை ஏற்கும் சமுதாயம் பெண்களுக்கு மிக நல்ல பண்பையோ அல்லது மிக தீய பண்பையோ கற்பித்தது. பெண் தெய்வாம்சம் உடையவளாக இருக்கும்போது கீழ்ப்படியும் பண்பு உடையவளாகிறாள். கொடியவளாக இருக்கும்போது காளியின் உருவத்தை ஏற்கிறாள். நாட்டுப்புறக் கதைகளில் காளியின் வடிவமாக தீய சிற்றன்னையைப் படைப்பதுண்டு. பிரதாப முதலியார் சரித்திரத்தில் தீய சிற்றன்னை பற்றிய கதையொன்று உள்ளது (பக். 219 - 230). ஆதியூரில் அருமைநாதபிள்ளை என்பவரின் இரண்டாவது மனைவி, தன் தமக்கையின் மகளாகிய குணபூஷணியைக் கொடுமைப்படுத்துவதை இக்கதை கூறுகிறது. அதைப் போல நற்குணங்கள் வாய்ந்த சுந்தரத்தண்ணி பணிவிடை செய்கின்ற சூழலையும் சொல்கிறார் (பக். 35). பிரதாப முதலியாரின் பாட்டியார், ''உன் தாயாரே எனக்குச் சகல பணிவிடைகளும் செய்து

வருகிறாள்'' என்று பிரதாப முதலியாருக்குக் கூறியபோது, அவர் ''என்னுடைய மாதாவை உலகமாதா என்றே நினைத்து, நித்தியமும் நான் பக்தி பண்ணிக் கொண்டு வந்தேன்'' என் கிறார். பணிவிடை செய்யும் பெண்ணைச் சமூகம் தெய்வமாக மதிக்கும் என்பதற்கு இது சான்றாகும். ஞானாம்பாளும் பிரதாப முதலியாருக்கு பணிவிடை செய்வதில் ஆர்வம் காட்டு கிறாள் (பக். 125).

பெண்ணடிமைச் சூழலில் கூட சிலவேளை பெண் தனக்குரிய மனிதப்பிறவியின் ஆளுமையோடு செயல்படுவதுண்டு. ஆனால் ஆணாதிக்கச் சமுதாயம், ஆண்களின் செயல்களைப் பார்த்துப் பெண் அச்செயல்களைச் செய்வதாகக் (imitate) கூறும். எனவே நாட்டுப்புறக்கதைகள் பெண் ஆண்வேடம் பூண்டு செயல்படு வதைக் கூறுவதுண்டு. அத்தகைய நிகழ்ச்சிகள் வேதநாயகம் பிள்ளையின் நாவல்களிலும் உண்டு. பேசுகிற பக்ஷியும், பாடுகிற மரமும், தங்கத்தண்ணீரும் ஒரு மலைச்சிகரத்தில் இருப்பதை அறிந்து அவற்றைப் பெற்று வருமாறு தனது தமையன்மாரை அனுப்பிய ராஜகுமாரத்தியின் கதை (பக். 288 - 289) பிரதாப முதலியார் சரித்திரத்தில் உள்ளது. அண்ணன்மார் திரும்பி வராதபோது ஆண்வேஷம் பூண்டு அவர்களைத் தேடிப்போன ராஜகுமாரத்தி தனக்கு வேண்டிய பொருள்களையும் எடுத்துக் கொண்டு, கல்லாய் மாறியிருந்த சகோதரர்களையும் எழுப்பி வருகிறாள். அதுபோன்று, தனது புருஷனுடைய ஆடைகளைத் தரித்து ரூபம் மாறிக் கொண்டு, புத்திசாலித்தனத்தால் திருடர்களை ஏமாற்றி தனது கணவனை யும் செல்வத்தையும் பாதுகாத்துக் கொண்ட பெண்ணொருத்தி யின் கதையும் (பக். 129 - 130) இந்நாவலில் உள்ளது. பிரதாப முதலியாரைத் தேடிக்கொண்டு மலையுச்சிக்கு வந்து சேர்ந்த ஞானாம்பாள் பெண் வடிவில் பயணம் செய்வது ஆபத்தை விளைவிக்குமென நம்புகிறாள். ஆண்வேஷம் தரித்துக் கொண்டு ஒரு பட்டணத்தை வந்தடைகிறாள். அப்போது யானையொன்று துதிக்கையிலுள்ள மாலையை அணி விக்க, அந்நாட்டு மக்கள் அவளை அரசனாக்குகிறார்கள். ஆண்வேஷத்திலேயே அந்நாட்டைத் திறமையாக ஞானாம்பாள் ஆட்சி செய்கிறாள் (பக். 256). இவ்வாறு பெண்கள் அரிய செயல்களைச் செய்து தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தும் போது ஆண்வேடம் பூண்டு கொள்கின்றனர். ஆனால் ஆசிரியர் ராணிமங்கம்மாவின் ஆட்சிச் சிறப்பைக் கூறுகிறார். ஆனந்த வல்லி அரசியாக முடிசூட்டப்படுவதைச் சொல்கிறார். சுகுண சுந்தரியும் அரசாட்சி செய்கிறாள். இவ்வாறு பெண்ணின்

ஆற்றலைக் கூறும் ஆசிரியர் சில இடங்களில் அவர்கள் ஆண் வேடம் புனைந்து செயல்படுவதையும் கூறுகிறார். இங்கு பெண்ணியவாத நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும்போது நாவல்களில் ஆணாதிக்க சமுதாயத்தின் கருத்துகளும் ஆசிரியரின் லட்சியக் கருத்துகளும் பின்னிப்பிணைந்து ஆங்காங்கே விரவி வருவது தெரிகிறது.

இவ்வாறு வேடம் புனைந்து பெண்கள் செயல்படுவதற்குப் பல முக்கியமான காரணங்கள் உண்டு. ஆளுமை ஆண்களுக்குரிய இயல்பு என்று சொத்துடைமைச் சமுதாயம் கூறுகிறது. எனவே பெண் ஆற்றலோடு செயல்பட்டாலும் அதை ஆணைப் பார்த்துச் செய்வதாகக் (imitate) கூறும்போது ஆண்களுக்குரிய முதன்மையான ஸ்தானத்தைச் சமூகம் நிலைநிறுத்திக் கொள்கிறது. அப்போது ஆணின் முதன்மையும் பெண் ஆணுக்கு அடங்கியவள் என்பதும் மரபாக நிலைத்து விடுகின்றன. சான்றாக, பெண் ஆணின் ஆதிக்கத்திற்கு அடங்கியவள் என்பதை ஞானாம்பாள் ஆனந்தவல்லிக்குச் சொல்கிறாள், ''நான் குடித்தன முறையை அனுசரித்து என்னுடைய நாயகர், மாமனார், மாமியார் முதலானவர்களை உபசரிக்க வேண்டியவளே தவிர நான் அரசு செய்வது தகுதி அல்ல'' என்று உண்மையில் நல்ல முறையில் அரசு புரிந்த பெண்ணே பேசுகிறாள். ஆற்றல் இருந்தாலும் அரசாட்சி செய்வது ஞானாம்பாளுக்கு விருப்பமான ஒன்றல்ல. கணவனைக் கண்டுபிடிக்க அவள் கையாண்ட யுக்தியே அது. அரசாட்சியின் போது ஜனங்களை அடக்கி ஆள்வதற்கு ஆண்வேடம் அவளுக்குத் தேவைப்படுகிறது. ''இந்தத் தேசத்தார் ஸ்திரீகளை நிதிருஷ்டமாக எண்ணி அவர்களைப் பட்டாபிஷேகத்துக்கு யோக்கியர்கள் அல்லவென்று நினைக்கிறார்கள்'' (பக். 328) என்று பிரதாப முதலியார் சொல்வது போல் வேதநாயகம் பிள்ளையும் எண்ணியுள்ளது நிரூபணமாகிறது. புருஷவேடம் அடக்குவதின் சின்னமாகவும் பெண்வேடம் அடங்கி நடக்க வேண்டியதின் சின்னமாகவும் சமுதாயம் கருதுவதை ஞானாம்பாளின் சொற்களே (''இருக்கிற இடம் தெரியாமல் எவ்வளவோ அடக்க ஒடுக்கமாயிருக்க வேண்டிய ஸ்திரீஜாதியாகிய நான் புருஷ வேஷம் பூண்டு கொண்டு எத்தனை நாளைக்குக் கஷ்டப்படுவேன்'') மெய்ப்பிக்கின்றன. இங்கு ஆணை முதன்மை ஸ்தானத்தில் வைத்து, பெண்ணை இரண்டாவது இடத்தில் வைத்து எடைபோடும் வேதநாயகரின் எண்ணம் தெளிவாகிறது. புவனேந்திரன் சுகுணசுந்தரியைத் தேடிச் செல்லும்போது

பிச்சைக்காரியாகப் பெண் வேடமிட்டுச் செல்கிறான். அப்போது தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் உபாயமாக மட்டுமே அவ்வேடத்தைப் பயன்படுத்திக் கொள்கிறான். புவனேந்திரன் அவ்வேடம் புனையக் கூடாதென்று சுகுணசுந்தரி அவனைத் தடுப்பதையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஆசிரியர், பெண் சீர்திருத்தக் கருத்துக்களையும் சமூகம் காட்டும் ஆணாதிக்கக் கருத்துக்களையும் ஏற்றுப் பெண்ணிய நிலைப்பாட்டில் குழம்புகின்ற அவரது மனநிலையை 'சுகுண சுந்தரி' என்னும் நாவலில் புருடபாரியர் இயல்பு பற்றிய கருத்துக்கள் தெளிவுறுத்துகின்றன. 'கடவுள்' ஆதி மனுஷனுடைய விலா எலும்பிலிருந்து ஸ்திரீயை உண்டு பண்ணின தால் அவர்களிருவரும் சமானமென்று கிறிஸ்துவர்களும் சொல்லுகிறார்கள் என்பது நாவலாசிரியர் கருத்து. ஆனால் பெண்ணியவாதிகள் ஆதாமின் விலா எலும்பிலிருந்து ஏவாள் தோன்றிய நிகழ்ச்சியை மனிதப் படைப்பில் சமமான ஒன்றாகக் கருதவில்லை. கடவுள் ஆதாமைப் படைத்தது போல, ஏவாளை மண்ணிலிருந்து உருவாக்கவில்லை. அவளுடைய தோற்றமும் சுதந்திரமான ஒன்றல்ல. அவள் ஆணின் விலா எலும்பிலிருந்து அவனுக்குத் துணையாகப் படைக்கப்பட்டவள் என்ற கருத்தைப் பெண்ணியவாதிகள் கூறுவர். ஆகவே வேதநாயகம்பிள்ளை பெண்விடுதலை பற்றிய கருத்துக்களைக் கூறாமல் பெண் சீர்திருத்தம் பற்றிய செய்திகளையே கூறுகிறார் என்பது இங்கு தெளிவாகிறது. இன்றைய சிந்தனையில் பெண் சீர்திருத்தம் வேறு; பெண்ணியம் வேறு.

வேதநாயகம் பிள்ளையின் நாவல்களைப் பெண்ணியக் கண்ணோட்டத்தில் அணுகும்போது அந்நாவலில் ஆணாதிக்கக் கருத்துக்களும் பெண் சீர்திருத்தக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளது விளக்கமுறும். ராஜா ராணிகள் பற்றிப் படிப்பதில் ஆசைகொண்ட வாசகர்களின் சுவையைத் திருப்தி செய்வதற் காக ஞானம்பாள் போன்ற கதைப் பாத்திரங்களைப் படைத் திருப்பதாக ஆசிரியர் கூறுகிறார். நாட்டுப்புறக் கருத்துக்கள் பலவற்றையும் நாவல்களில் அவர் எடுத்தாண்டிருப்பதால் மரபை அப்படியே பிரதிபலிக்கும் நாட்டுப்புற இலக்கியத்தின் இயல்பு அவற்றில் உண்டு என்று முன்பே பார்த்தோம். ஆதலால் இவை யதார்த்த நாவல்களினின்றும் மாறுபட்டவை. லட்சிய நாவல்களாக இவை வடிவம் பெறுகின்றன. யதார்த்த நாவல்கள் பெண்ணை இயற்கை இயல்புகளோடு வருணிப்ப துண்டு. பொதுவாக அவளை குணங்களின் வடிவமாகப் பார்ப்ப

தில்லை. வேதநாயகம் பிள்ளையின் நாவல்கள் லட்சிய நாவல் வடிவம் பெற்றிருப்பதால் பெண்கள் யதார்த்த நாவலில் வரும் பெண்களைப்போல் அல்லாது கருத்தை விளக்கும் கருவியாகப் பயன்படுவதையும் முன்னரே கண்டோம். இவரது நாவல்கள் முதன் முதலில் உரைநடை வடிவில் வெளிவந்தவை. அவற்றில் சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிடுவதற்கு வசதியாக இருப்பதாலும் நாட்டுப்புறக் கதை போல எழுத முடிவதாலும் ரொமான்டிசிச லட்சியவாத பாணி நாவல்களை இவர் எழுதினார். அவற்றில் ஆணாதிக்கக் கருத்துக்கள் ஆசிரியர் விரும்பியோ விரும்பாமலோ இடம் பெற்றுள்ளன. எனவே இவ்விரண்டு நாவல்களும் யதார்த்தமான நாவல் பண்புகளையோ, பெண் விடுதலை பற்றிய தெளிவான செய்திகளையோ கொண்டவையாக உருப்பெறவில்லை. அதே காரணங்களால் இந்த நாவல்கள் நாவலுக்குரிய கலையம்சத்தில் கூட வெற்றி பெற முடியாமல் போய்விட்டன எனலாம். ●

BIBLIOGRAPHY

1. Mitchell, Juliet, Psychoanalysis and Feminism, Penguine Books, **1976**.

2. Boauvoir, De Simon, The Second Sex, Penguine Books, **1979**

3. Greer, Germaine, The Female Eundch, Paladin, 1976

4. வேதநாயகம் பிள்ளை, **சுகுணசுந்தரி** வானவில் பிரசுரம், சென்னை, 1979

5. வேதநாயகம் பிள்ளை, **பிரதாப முதலியார் சரித்திரம்** வானவில் பிரசுரம், சென்னை, 1979

(மேலும் - 1992)

# 'பெண்ணியம்'- வரையறைச் சிக்கல்கள்:

பாமாவின் கருக்கு

அ. மங்கை

'பெண்ணியம்', 'பெண் விடுதலை' போன்ற சொற்றொடர்கள் இன்று மறுக்கவியலாத இடத்தை ஆய்வுலகில் பெற்று வருகின்றன. இளக்காரத்தோடோ, மரியாதையோடோ— எப்படி ஆயினும் கட்டாயம் எதிர்கொள்ள வேண்டிய நிலைப்பாடாக பெண்ணியம் பல்வேறு துறைகளிலும் நிலைபெற்று வருகிறது. கல்வித்துறையில், பல்வேறு மட்டங்களில்— இளங்கலை, முதுகலை, ஆய்வுப்படிப்பு— பாடத்திட்டத்தின் ஓர் அம்சமாகவோ அல்லது முழுமையான பாடத்திட்டமாகவோ பெண்ணியம் அறிமுகப்படுத்தப்படுகிறது. எனவே, அதற்கான முதனிலை ஆய்வு நூல்கள் இன்றைய சந்தைத் தேவையாக உருப்பெற்று வருகின்றன. இந்தப் பின்னணியைக் கணக்கில் கொண்டே பெண் பற்றிய அல்லது பெண்களின் படைப்புக்கள், எழுத்துக்களை அணுக வேண்டி உள்ளது.

பெண்ணியம் என்பதன் பௌதீக, கருத்துநிலை அடிப்படைகளே அதன் வரையறைக்கு அடிப்படையாக அமைய முடியும். 'பெண்' என்பவள் யார்? அவளது செயற்பாட்டை, வெளிப்பாடுகளைத் தீர்மானிக்கும் சக்திகள் யாவை? அந்தச் சக்திகள் எத்தகைய கருத்தாடலை கைக்கொள்கின்றன? போன்ற கேள்விகள் நம்முன் எழுகின்றன.

பெண்ணாகப் பிறப்பதனால், பெண்ணியவாதியாகிறார்கள் (I am, therefore resist) எனப்படும் சாராம்சவாதம் ஏற்க முடியாதது. 'பெண்' பற்றிய வரையறை வர்க்கம், இனம், சாதி, மொழி போன்றே அரசியல் உணர்வையும், தன் அடை

யாளத்தையும் பொருத்தது. உணர்வு பெறல் (Coming to Consciousness) என்பது முழுக்க, முழுக்க செயல்பாட்டுடன் கூடிய கல்வியாகும். ஏற்கனவே கற்பிக்கப்பட்ட மதிப்பீடுகளை உதிர்த்து, புதிய மதிப்பீடுகளைக் கற்றுக்கொள்ளும் கடினமான கல்வியாக இது அமைகிறது.

இந்த அடிப்படையில் உணர்வு பெற்ற பெண்ணால்தான் வர்க்க, சாதீய அடிப்படையில் இயங்கும், படிநிலைத் தன்மைகள் கொண்ட சமூகம் எவ்விதம் தனது செயல்பாடு களையும் வெளிப்பாடுகளையும் மறுக்கிறது; மறைக்கிறது; அடக்குகிறது; அனுமதிக்கிறது என்பவற்றைப் புரியமுடியும். அதிலும், பெண்ணியம்/தேசீயம்/ இனத்துவம் ஆகியவற்றை முன்னெடுக்கும் கருத்தாடல்களில் விரவியுள்ள ஐரோப்பிய, வெள்ளை, மத்தியதர வர்க்க மையங்களைக் குறித்து எச்சரிக்கை செய்யும் பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. எனவே, நமது சூழலில் 'பெண்ணியம்' குறித்த வரையறை 'பெண்' என்ற விளக்கம் உள்ளடக்கும் பிற கூறுகள் மற்றும் பிரத்தியேகத் தன்மைகளை மீட்டெடுக்க வேண்டியுள்ளது. இந்த பின்காணல் அடிப்படையில் இங்கு உள்ள கருத்தாடல் களை, அவை முன் வைக்கும் அரசியல் உணர்வை அணுக வேண்டியுள்ளது. தன்னிலை புரிதல் என்பதோடு, பிற அம்சங் களுக்கும் தனது நிலைக்கும் உள்ள ஊடாட்டங்களைப் புரிந்து கொள்ளும் முயற்சி மட்டுமே பெண்ணியத்தை நீர்த்துப்போகாத செயல்பாட்டு ஊக்கம் நிறைந்த கருத்து நிலையாகக் காட்ட முடியும்.

இலக்கியக் கருத்தாடலின் வீச்சும் பரப்பும் வெகுவேகமாக மாறியும், விரிந்தும் வருகிற சூழலில் நாம் வசிக்கிறோம். தமிழ் இலக்கியச் சூழலில் விவாதமட்டத்தில் (படைப்பு உலகில் அதிக எதிரொலிப்பு இல்லை) பல்வேறு அய்யங்களும் முகாம்களும் இதன் காரணமாக உருவாகி வருகின்றன. இவற்றிலும் குறிப்பிடத்தக்க 'தரலாக' பெண்ணியம் இன்னும் ஒலிக்கத் தொடங்கவில்லை. சங்க இலக்கியம் அல்லது நீதி இலக்கி யத்தில் நிலம்-செடி-கொடி பற்றிய தகவல்களைத் தொகுத்து வழங்குவது போல பெண் பற்றிய குறிப்புகளைத் தொகுத்துத் தரும் சில நவீன நிகண்டுகள் ஆங்காங்கே தலைகாட்டி வருகின்றன. இந்தப் பின்னணியில் பெண்ணிய விமரிசனம் உலகளவில் (பெரும்பாலும் வெள்ளை, ஐரோப்பிய, படிப் புலகில்) கடந்து வந்த பாதையை அறிய வேண்டியுள்ளது.

ஷோபால்டர் (A Literature of Their own) பெண்மை (Feminine), பெண்ணியம் (Feminist) பெண்நிலை (Female) என மூன்று கட்டங்களாகப் பெண்ணிய இலக்கிய விமரிசனப் போக்கைப் பார்க்கிறார்.

ஆணுக்குச் சமமாகப் போட்டியிட்டு ஆண்நிலை கலாச் சாரத்தில் (Male culture) இடம்பிடிக்கும் முனைப்பை பெண்மை கட்டம் என்பர். ஆண்நிலை நோக்கு முன்வைக்கும் பெண்நிலை பற்றிய அனுமானங்களை உள்வாங்கி எழுதப்படும் முயற்சி களாகவே இவை அமைந்தன. விசாலாட்சி அம்மாள், வை. மு. கோ. தொடங்கி, சிவசங்கரி, இந்துமதி வரை இப்போக்கு தமிழில் தொடர்கிறது எனலாம். (இந்தக் கட்டம் ஒவ்வொன் றையும் விரிவாக அலச வேண்டியுள்ளது. இது ஒரு வருங்கால ஆய்வுத் திட்டத்திற்கான அனுமானமாக அமையலாம்) இவ்வகை எழுத்துக்களில் பெண்ணியப்பார்வை இடம் மாறி (reversal) காணப்படலாம். இப்பனுவல்களின் சொல்லப்படாத கருத்தாடல்களை நுணுகிப் பார்ப்பதன் மூலம் பெண்ணிய]இழை களைக் கண்டறியக் கூடும்.

பெண்ணிய கட்டம் தவறிழைக்கப்பட்ட பெண் இனத்திற் கான குரலைக் காட்டுவது. பெண்கள் சமூகத்தின் பல்வேறு தளங்களில் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதே இந்த எழுத்தின் முக்கியப் பங்களிப்பு ஆகிறது. கிருபை சத்தியநாதன் அம்மாளில் தொடங்கி லட்சுமி உள்ளிட வளர்ந்து, ராஜம் கிருஷ்ணனில் உச்சத்தை அடைந்த இப்போக்கு ஜோதிர்லதா கிரிஜா, சிவகாமி, திலகவதி போன் றோரில் இன்னமும் வாழ்கிறது. சகோதரித்துவத்தை பிரதானப் படுத்தும் இந்த எழுத்துகளைப் பிரச்சார வாடை என்று ஓரங் கட்டுவது கலை விற்பன்னர்களுக்குச் சாத்தியமாகலாம். ஆனால் பெண்ணிய விமரிசனம் இதனை உடோப்பிய வாதமாக இனங் கண்டு, அதன் தாரதம்மியங்களை அணுக வேண்டியுள்ளது.

பெண்நிலை காலகட்டத்தில் ஆண்நிலையை மாதிரியாகக் (Norm) கொண்டு அதைப் போலவே செய்தல் (imitation) அல்லது அதனை எதிர்ப்பதற்காகவே எழுதுதல் (Protest) ஆகிய இருவகைப் போக்குகளும் சற்றே பின்னடைந்து தனது எழுத் தைத் தானே எழுதுதல் எனும் முனைப்பு மேலெழுகிறது. முதலிரு கட்டங்களுமே அவையவை போக்கில் ஆண்நிலை சார்ந்து இயங்குபவையே. மையத்தை மாற்றாமல் தனது கோணத்தை மட்டும் மாற்ற முயல்பவை. மூன்றாம் கால

கட்டத்தில் கொப்பளிக்கும் கோபங்களும், வெடித்துக் கிளம்பும் அழுகைகளும் மாறி நினைவு ஓர் ஆயுதமாகிறது. புனைகதையில் அம்பையும், ஈழக் கவிதாயினிகள் பலரும் இதனைக் கைக் கொண்டுள்ளனர்.

இம்மூன்று கட்டங்களைக் (காலகட்டங்கள் அல்ல) கண்ணிகளாகக் கொண்டு பெண் எழுத்தாளர்களை (பெண் - அடைமொழி மட்டுமே) ஆய்வு செய்தல்; இன்றளவும் இலக்கிய உலகில் உச்சாடனம் செய்யப்படும் ஜாம்பவான்களின் எழுத்துகளை (ஆண் எழுத்தாளர்கள்) மறுபரிசீலனைக்குஆட்படுத்துதல்; பெண்கள் உலகம் வெளிப்படுத்தப்படுவதை / மறைக்கப்படுவதை நுணுகிப்பார்த்தல்; இவ்வெழுத்துகள் சமகால அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கு அளிக்கும் உதவி / பின்னடைவு போன்றவற்றை எடைபோடுதல் ஆகிய பல்வேறு நிலைகளில் பெண்ணிய ஆய்வு செயல்பட வேண்டியுள்ளது. இதில், சமீபத்தில் வெளிவந்துள்ள பாமாவின் சுயசரிதை நூலான கருக்கு வெளிப்படுத்தும் நிலைப்பாடுகளைக் காண்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

> வாசித்த பொழுது முதல் பார்வையில் ஒரு கிராமத்தின் வரலாற்றை வெளிப்படுத்தும் சரித்திர நூல்போல் தோன்றியது. மற்றொரு கோணத்தில் படிக்கும் பொழுது தனது அனுபவத்தை வெளியிடும் ஒரு சுய சரிதை போல இருந்தது. பிறிதொரு கோணத்தில் ஆழ்ந்து பார்த்தபோது, ஒரு தலைசிறந்த நாவலாகத் தோன்றியது. இவ்வாறு சரித்திரம், சுயசரிதை, நாவல் என்ற மூன்று வெவ்வேறு பரிமாணங்களை உள்ளடக்கி ஒரு புதுவிதமான இலக்கியத்தைப் படைத்திருக்கிறார்கள். இதன் மூலம் ஒரு புது இலக்கிய வடிவத்திற்கு அடித்தளமிட்டிருக்கிறார்கள்.
>
> (கருக்கு, முன்னுரை)

என்று தலைவாசல் அமைக்கிறது மாற்குவின் முன்னுரை. தொடர்ந்து இது பாமாவின் சுயசரிதை என்பதைச் சொல்லும் போது ''தனது வாழ்க்கையைத் தீண்டாமை, சாதிச்சண்டை, உழைப்பு, படிப்பு, ஓய்வு, பக்தி போன்ற பல கோணங்களில்'' பார்த்திருப்பதாக முன்னுரை கூறுகிறது, (மேற்படி) இந்தப் பட்டியலில் மாற்கு அவர்களுக்கு பால் என்ற அம்சம் இந்தப் பனுவலில் காணக் கிடைக்கவில்லை; அல்லது கிடைத்திருப்

பினும் 'போன்ற' என்கிற 'விடுபட்ட' பல கோணங்களில் பத்தோடு பதினொன்றாக பால் பொதிந்து போகிறது.

பாமாவின் என்னுரையும் பால் அம்சத்தை முன்னிறுத்த வில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. ''இரம்பம் போல இருக்கும் பனங்கருக்கு'க்கும், தனது வாழ்வுக்குமான உருவக மாக இந்நாவலை உருவாக்கியதாகப் பாமா குறிப்பிடுகிறார். தனது வாழ்வில் இரணமாக்கிய நிகழ்வுகள், மூச்சுத் திணற வைத்த அமைப்பு போன்றவற்றில் இருந்து திமிறி எழுந்த எழுத்தே கருக்கு என்பார் அவர். தலித் நெஞ்சங்கள் தேடும் நீதி, சமத்துவத்தை முன்னிறுத்தும் கருவே இதன்அடையாளம். இந்நூல் தலித் போராட்டத்திற்கு உத்வேகம் அளிக்கவேண்டும் என்ற ஆவலையும் பாமா வெளிப்படுத்துகிறார்.

கருக்கு நூல் ஆசிரியர் கூற்று, முன்னுரை ஆகிய வற்றின் அடிப்படையில் தலித் பனுவலாக வெளிவந்துள்ளது. ''தலித் மொழியின் அப்பட்டமான வெளிப்பாட்டை இந்நூலில் காணலாம்'' என்பார் ராஜ் கௌதமன் (தலித் பண்பாடு, 1993, 101). சுபமங்களா நாடக விழாவில் (சென்னை, 1993) ஜெய மோகன் இதனை ''ஒரு ரிபோட்டாகக் கொள்ளலாம்'' என்று வடமொழி பாற்பட்ட அழகியல் அளவுகோலின் உச்சாணிக் கிளையில் இருந்து கொண்டு எடைபோட்டார். இந்த இரு வேறு பார்வைகளைக் கிளப்பிய கருக்கு படைப்புலகில் செயல் படும் எதிர்மறைகளை அக்கறையோடு காணவைக்கிறது.

ஊர் வர்ணனை, வாழ்க்கை முறை, சாப்பாட்டு விவரங்கள், பெயர்களில் உள்ள அரசியல், கல்வி நிலையங்கள், கிறித்துவ மதத்தின் சாதீயத்தன்மை, கிறித்துவ மடத்தின் வாசியாக இருந்து கண்ட முகத்தில் அறையும் உண்மைகள் என்று பல வகைகளில் தலித் வாழ்க்கையைக் காட்டுகிறது கருக்கு.

மசாலி, முருகஞ்சொனப் பன்னி, காக்கா, மெதந்தர, பருப்புக்குண்டி, டேப்ப - டூழ...இப்படிப் பட்டப் பெயர்களால் அறியப்படும் மக்களது வாழ்வில் சுயமரியாதையை முளையி லேயே கிள்ளிப் போடும் சம்பவங்கள்தான் எத்தனை. நாயக் கருக்கு வடை வாங்கி வரும் பெரிய ஆளு கயிறைப் பிடித்துப் பொட்டலத்தைத் தூக்கி வந்தது தீண்டாமை யால் எனப் புரிந்தநும், ''எனக்கு வந்த ஆத்திரத் துல வடயவே கையுட்ட தொட்டுப் போடணும் போல

இருந்துச்சு'' (கருக்கு, 12) எனவரும் வேகம் இந்நூலின் மிகப் பெரும் பலம். கல்லறைக்கான சண்டையின்போது போலீஸ் அடக்குமுறைக்கு எதிராக தலித் பெண்கள் துணிவோடு செயல் பட்டது போன்ற நிகழ்வுகள் அடக்கப்பட்டோர் வரலாற்றைக் கட்டமைக்கும் பணியில் நினைவு, வாய்மொழிக்கூற்று போன்ற வற்றின் அவசியத்தை வலியுறுத்தி நிற்கிறது. மதம், கல்விக் கூடத்தில் மதத்தை நிலைநிறுத்தும் தன்மை போன்றவற்றை யும் விமரிசனப் பாங்கில் வெளிப்படுத்தியுள்ளார் பாமா. ஊர்ந் திருவிழா, குழந்தைகள் விளையாட்டு போன்ற விவரணைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

தலித் ஆவணம் என்ற வகையில் கருக்கு பெறும் இடத் தைத் தமிழில் புறக்கணிக்க இயலாது. ராஜ்கௌதமன் (1993) இதனைப்பற்றி ''ஆனால் எல்லோரும் இதை ரசிப்பதைப் பார்த்தால் இதில் ஏதோ ஒரு பலவீனம் இருப்பதை உணரலாம்... யாருக்கும் குற்றவுணர்வையோ கோபத்தையோ உண்டாக்க வில்லை போலத் தெரிகிறது. கழிவிரக்கம் கலக தலித் இலக் கியத்துக்கு உதவாது'' என்கிறார். கிறுத்துவ மதப் பின்னனி யில் தலித் சிக்கல் நிறுவனமயமாக்கலில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துவரும் சூழல் இன்று காணப்படுகிறது. இந்தச் சமூகப் பின்னணியில் தலித்தூக்களை மையப்படுத்தும் ஒரு பனுவல் கிறித்துவ மதம் சார்ந்த ஆய்வு நிறுவனமான ஐடியாஸ் மூலம் வெளியிடப்படுகிறது என்பதே ஓர் அரசியல் நிகழ்வாகப் பார்க்கப் படவேண்டியதாகிறது. தவிர்க்க இயலாத சக்தியாக தலித்தியம் கிறித்துவமத நிறுவனங்களுக்குள் வளரத் தொடங் குகையில் கருக்கு போன்ற நிறுவன - எதிர்ப்பு பனுவல்களை வெளியிடுவது அந்நிறுவனத்தின் 'ஜனநாயக முகத்தை' காட்ட உதவுகிறது. நிறுவனத்திற்குள் வளர்ந்துவரும் கலக சக்திகளுக்கு போடப்படும் ரொட்டித்துண்டாகவும் இது அமைந்து போகிறது. தலித்மொழி, பண்பாட்டு உருவாக் கத்தில் கருக்கு பற்றி டரிசீலனை செய்கையில் இவற்றையும் கணக்கில் கொள்ள வேண்டும். இந்தக் கட்டுரைக்கு நேரடி யாகத் தொடர்பு இல்லாததால் இதனைக் குறித்து இங்கு விரிவாக விவாதிக்க வாய்ப்பு இல்லை. பெண்ணியம் குறித்த வெளிப்பாடுகளை இப் பனுவலில் காண்பதே இங்கு முதன்மை நோக்கமாகும்.

தலித் எழுத்துகளில் பெண் பிம்பம், பெண் பங்கு நிலை பற்றிய விவாதம் டேனியல் எழுத்துகளில் இருந்தே தொடர்ந்து

வரும் ஒன்று. தலித் பழிவாங்கலின் வெளிப்பாடாக மேல்சாதிப் பெண்ணுடனான பாலுறவு, அவளின் அதீத பாலியல் வேட்கை என டேனியலில் வெளிப்பட்டது பற்றிய விவாதத்தை மீண்டும் முன்னெடுக்க வேண்டிய தேவை இன்று உள்ளது. தேவி பாரதியின் பலி கதை அதனை விரைவுபடுத்தியுள்ளது... ''சொல்லும் முறையிலும், பயன்படுத்திய சொல்லாடலிலும், உருவாக்கியுள்ள முறைமீறலிலும், கலக அழகியலிலும், குறியீட்டுப் பாணியிலும் இக்கதை சிறப்பானதொரு தலித் இலக்கியமாக ஆகியுள்ளது'' (ராஜ்கௌதமன், ப. 102) அத்தொகுப்பில் பின் இணைப்பாக உள்ள வாசகர் குரலிலும் இது எதிரொலிக்கிறது. தலித் ஒருவன், அவனது கிராமத்தைச் சேர்ந்த பிராமணப் பெண்ணை விபச்சார விடுதியில் எதிர் கொள்ளும்போது, இரு அப்பாவிகள் - சமூகத்தால் குற்றமிழைக் கப்பட்டவர்களின் சந்திப்பாக அது விரிகிறது. பலியாவது என்னமோ அப்பெண்தான். பிராமணப் பெண் என்பதால், ஆணின் வேட்கைக்கான கருவியாக, சித்ரவதையை மௌன மாக எதிர்கொள்பவளாகக் காட்டுவது துயரம் நிறைந்ததுதான். ஆனால் சாதீய அடக்குமுறை × பாலியல் அடக்குமுறை எதிர் மறைகளாகப் பார்க்கும் தன்மை கலக எழுத்திற்கான கூறாகுமா? ''நான் வேசி'' என்ற அவளது சடங்கு பூர்வமான, திருப்பித் திருப்பிச் சொல்லும் கூற்று, தலித் கலகத்தில் இணைந்து செயல்பட வேண்டியதா? தனித்துக் காணப்பட வேண்டியதா?

டேனியலின் கதைகளில் வரும் பாலியல் பழிவாங்கல் வர்க்க, சாதீயக் குறியீடுகளாகக் காண்பதற்கான கூறுகளைக் கொண்டுள்ளது. அப்பெண்ணின் உயர்சாதி, உயர்வர்க்க உலகிற்குள் தலித் கிளப்பும் பாலியல் முறை மீறலாகி பழிவாங்கு தலாக அதனைக் காண வாய்ப்புண்டு. ஆனால் ஒரு பெண் விபச் சார விடுதியில் தள்ளப்படும் போது (அப்பெண் புதிதாக வந்தாள் என்பதும் குறிப்பிடப்படுகிறது) விபச்சாரம் என்ற சமூக நிறுவனத்தின் அடக்குமுறைகளைக் கொஞ்சமும் கணக்கில் கொள்ளாமல், நினைவுகள் கிளப்பிவிடும் சாதீய அடக்குமுறைகளின் பழிவாங்கலாக பிராமணத்தை முன் னிறுத்தி, பெண்ணை இரண்டாம் பட்சமாகக் காட்டியது சிக்கலை எளிய வாய்ப்பாட்டிற்குள் அடக்குவதாகவே படுகிறது

இனத்துவ தேசிய போராட்டத் தளங்களில் பெண்கள் பங்களிப்பு பற்றிச் சித்திரலேகா மௌனகுரு (பெண்நிலைச் சிந்தனைகள் - 1993, 51-70) குறிப்பிடுகையில், பெண்ணியு

நிலைப்பாட்டில் எதிர்மறையான கருத்துக்களையே வெளிப் படுத்துவதைப் பற்றி எச்சரிக்கை செய்கிறார். நமது நாட்டி லும், தேசிய இயக்கக் காலத்திலும், இடதுசாரி இயக்கச் செயல்பாடுகளிலும் பெண்கள் ஆண் அரசியல்வாதிகளுக்கு துணைப்பாத்திரங்களையே வகித்ததாகத்தான் வரலாறு எழுதப் பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, இத்தகு காலங்களில் பண்டைய காவிய கால பெண் பிம்பங்கள் மறு உருவாக்கம் பெறுவதும் நாம் கண்கூடாகக் காண்பது. வர்க்கம், இனம், சாதி பற்றிய ஆய்வுகளில் பால் தொடர்பான பிரதிபலிப்புகள் மறுக்கப் பட்டோ, திரிக்கப்பட்டோ வருவதைக் காணமுடிகிறது.

இந்தப் பின்னணியில் கருக்கு வெளிப்படுத்தும் பால் தன்மைகளை அணுக வேண்டியுள்ளது. படித்துப் பணியாற்றும் போது கிடைக்கும் புதிய தெம்பை பாமா குறிப்பிடுகிறார்:

> பி.எட் முடிச்சுட்டு வேலைக்குப் போன பெறகு ரொம்ப சௌரியமா இருந்தேன். மாசாமாசம் கைநெ றய்ய சம்பளம் வாங்கிட்டு வசதியா சொதந்திரமா அலஞ் சது நல்லாத்தான் இருந்திச்சு. நெனச்ச சீல சட்டை எடுத்து கெட்டிக்க முடிஞ்சது. நெனச்ச இடத்துக்கு போக முடிஞ்சது. நெனச்சத வாங்கிப் பெறக்கித் திங்க முடிஞ்சது. கொஞ்சம் நகநட்டுஞ் செய்ய முடிஞ்சது. சும்மாவா சொன்னான் ''பணம் பாதாளம் வரப் பாயு முன்னு'' (பக். 62)

அதே சமயம் பாமாவின் பாட்டி நாயக்கர் வீட்டில், நிலத் தில் செய்த உழைப்பு அதில் சுயமரியாதையற்ற நடைமுறை போன்றவற்றையும் குறிப்பிடுகிறார். பாமாவின் பொருளாதார சுதந்திரம், மத்தியதர வர்க்க தேவைகளான சேலை, தீனி, நகை என்பதாகவே விரிகிறது. ஆனால் முந்தைய தலை முறையின் கூலி உழைப்பு வாழ்வின் அடிமட்டத் தேவைகளின் அங்கமாக அமைந்தது. இந்த வேறுபாடு வர்க்கம், வர்க்கம் சார்ந்த பண்பாட்டு உருவாக்கத்தோடு காணப்பட வேண்டிய தாகும்.

படிப்பிடத்திலும், மடத்திலும் சாதிய அடக்குமுறைகளை எதிர்கொண்டதை வெளிப்படுத்தி அவற்றைப் பற்றிய ஆத்தி ரத்தைச் சுயகூற்றாகப் பல இடங்களில் வெளிப்படுத்துகிறது கருக்கு.

கீழ்ச் சாதிப் பெண் ஒருத்தி கிறிஸ்துவ மடத்தில் சேர வேண்டுமென முடிவெடுப்பது பின்வருமாறு வெளிப்படுகிறது:

...ஆனா, எங்கிட்டுக் கெடந்தோ ஓர் ஆச வந்துச்சு. இப்படி இந்தக் கன்னியாஸ்திரீக சேந்துகிட்டு தலித் புள்ளை கள டீச்சர்கள இந்தப் பாடு படுத்துதுகளே. நம்ம ஒரு கன்னியாஸ்திரீ ஆகி இந்த மாதிரி கேவலப்பட்டு, கெட்டுப் பட்டு கெடக்கிற சனங்களுக்கு ஏன் உதவி செய்யக் கூடா துன்னு மனசுல பட்டுச்சு. **எம்புட்டுத்தான் ஒதுக்கினாலும் பொழுதினிக்கும் இப்படியே நெனப்பு.** (ப. 19)

கன்னியாஸ்திரீகளக் கொற சொல்லிட்டு இருந்த எனக்கு **என்ன ஆச்சுன்னே தெரியல.** நான் ஒரு சிஸ்டராகி கஸ்டப் படற சனங்ககிட்ட, இந்த மாறியான சேசும் இருக்கார்னு சொல்லி அவுகள உசுப்பி விடனும்னு மனசுக்குள்ள ஆச வந்துச்சு. ஆனா சிஸ்டரானா இப்படி எல்லாஞ் செய்ய முடி யாதுன்னும் தெரிஞ்சிகிட்டேன். **ஆனாக்கூட வேண்டான்னு வலுக்கட்டாயமா ஒதுக்கினாக்கூட என்னமோ அந்த நெனப்பு இன்னும் அதிகமாகிட்டே போனது.** (ப. 85)

இங்க இந்த சிஸ்டருங்கள இப்படிப் பாத்த பெறகும் எனக்கு எடயிலேயெ மடத்துல சேரணும்னு தோணும். (ப. 84)
(அடிக்கோடுகள் எனது.)

இப்படியாக கன்னியாஸ்திரீயாக சேரவேண்டும் என்ற ஆவல் கருக்கு நூலில் வெளிப்படுகிறது. ஒரு மத ரீதியான கருத்தாடலாகக் கொண்டால் இந்த ஆவல் கடவுளின் அழைப்பு எனும் விவரிக்க இயலாத பூடகத்தன்மை பெற்று விடுகிறது. சமூக சேவைக்கான உந்துதலோடு, சமூக நீதிக் கான சட்டகமாக இதனைத் தேர்ந்தெடுத்ததாக வெளிப்படும் கூற்றுக்களை அடுத்து வெளிப்பட்டுள்ள மதநிறுவனங்கள் பற்றிய விமரிசனங்கள் புறந்தள்ளி விடுகின்றன. இதில் ஒரு சமயத்தில் கூட வெளிப்படுத்தப்படாத அம்சம் கன்னியாஸ் திரீகளின் பாலினமற்ற (a-sexual) தன்மை. பால் கூறுகளைப் பற்றிய வெளிப்பாட்டு சூழல்களில் அவற்றைத் தவிர்க்கும் பல இடங்களை நூலில் காண முடிகிறது. சினிமா பார்க்க பறையர் பெண்கள் அனுமதிக்கப்படாதது பற்றிய குறிப்பு (ப. 47) பொம்பளப்புள்ளகள 'பலசாதிக்காரப் பெயலுக கையப் புடிச்சு இழுத்தால்' வரும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக என்ற வாதம், பாமாவின் எதிர்வினைகள் ஏதுமின்றி சொல்

லப்படுகிறது. ''பிடிக்காத பெண்ணைக் கட்டி வைத்ததால் போட்டு அடிக்கிறானாம்'' என்ற மூன்றாம் நிலை அயற் கூற்று இன்னுமொரு இடத்தில் வருகிறது.

மதம், சாதி சார்ந்த அடக்குமுறைகள் பற்றிய தனது ஆதாரங்களைத் திட்டவட்டமாக முறையிடும் பாமா, இந் நூலின் ஓர் இடத்திலும் பால் அம்சங்களை மறந்தும் வெளி யிடவில்லை. ஆனால் தலித்/தமிழச்சி/ஏழை ஆக உள்ளதால் பெற்ற அனுபவங்கள் பதிவாகி உள்ளன. ஆசிரியக் கூற்றாக இடையிட்டுக் குறுக்கிடும் பல இடங்கள் இந்நூலில் உள்ளன. எனவே, கருக்கு நூலின் பால் அம்சங்களைப் பற்றிய வெளிப் பாட்டு மறுப்பு, அந்த உணர்வு வெளிபாட்டைத் தவிர்க்க வேண்டும் என்பதன் வெளிப்பாடாகிறது. இந்த மௌனம் சுயமான தேர்வா? அடக்கப்பட்டோரின் கலகக்குரலில் பால் சார்ந்த குரல் இன்னமும் ஓங்கி ஒலிக்காததன் வெளிப்பாடா? தலித் பண்பாட்டில் பெண்ணிய சிந்தனைகளை ஒருங்கிணைக் கும் அரசியல் உணர்வு உருவாகாததன் காரணமா? போன்ற கேள்விகள் எழுகின்றன.

கருக்கு பாமாவின் முதல் எழுத்து; தமிழில் இவ்வகை எழுத்தில் புதிது; போன்ற காரணங்களுக்காகச் சற்று பொறுத் திருக்கலாம்தான். பல கதையில் தலித்/பாலியல் வன்முறை எதிர் மறைகளாகக் காணப்படும் பாலியல் தன்மை; சிவகாமியின் எழுத் துக்களில் படித்த, மத்தியதரவர்க்க பெண்ணியம் முதன்மைப் படும்போது தலித்தியம் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படும் தன்மை; போன்றவற்றைப் பொருத்திப் பார்க்கையில் தலித்/ பெண்ணிய நிலைப்பாடுகளில் தொழிற்படவேண்டிய ஒருமிப்பை, கலகத்திற்கான புரிதலை, அதில் உள்ள சிக்கல்களை மையப் படுத்த வேண்டியது அவசியமாகிறது.

# பெண்ணிய நோக்கில் அம்பையின் சிறுகதைகள்

டாக்டர். சு. வேங்கடராமன்

அம்பை, சிறுகதைகளைப் பெண்ணிய நோக்கில் ஆய்வது இக் கட்டுரையின் நோக்கமாகும். மரபு ரீதியாகப் படைக்கப்படும் பாங்கும் மரபு மாற்றங்களும் அவற்றிற்கான சமூகக் காரணங்களும் காட்டப்படுகின்றன. படைப்பாளரின் சார்பு, சமூகப் பிரக்ஞை, அவருடைய ஆளுமை வளர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் கால முறைப்படி பெண்ணிய அணுகுமுறைகளில் கட்டுரை அமைகின்றது. அம்பை (சி.எஸ்.லக்ஷ்மி) எழுதிய 'சிறகுகள் முறியும்' (1976), 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' (1988) ஆகிய இரு தொகுப்புக்கள் அடிப்படைச் சான்றுகளாகின்றன. மரபுரீதியாகப் பெண் படைக்கப்படும் முறை, ஒடுக்கப்பட்ட மகளிர் நிலைக்கான காரணங்கள், சமூக அமைப்பைக் காட்டும் நிலை, மேம்பாடு அடையக் காட்டும் நெறிகள், மேம்பாடு அடையத் தடையாக இருப்போர், தடைகளை எதிர்த்துப் போராடும் பெண், ஏகாதிபத்தியம், சுரண்டல், அடக்குமுறை இவற்றை எதிர்த்துப் புரட்சி செய்யும்- போராடும்- பெண் என்று மரபு மாற்றத்தைக் காட்டும் நிலை என்பவை மையச் சிந்தனைகளாகும். பெண்ணுக்கான சிக்கல்களைப் படைப்பதில் வரலாற்று அடிப்படை, சமூக நிலைப்பாடு, பொருளாதார அடிப்படை, உளவியல் நிலை, அரசியல், சமய நிலைச்சார்பு என்ற அனைத்து நிலைகளிலும் சிக்கல்கள் படைக்கப்படுகின்றனவா என்பதும், ஆசிரியர் இவற்றைப் படைப்பதிலும் தீர்வு காணுவதிலும் காலமாற்றமும் அவரின் ஆளுமை வளர்ச்சியும் அவரின் சார்பும் எந்த அளவிற்குத் துணை போகின்றன என்பதும் காணப்பட வேண்டியன.

பெரும்பாலும் பெண்களுக்கான சமூகச் சூழ்நிலை காட்டப்படும் இடத்தில் ஆணுக்கு அடிபணிந்த நிலை, ஆணைச் சார்ந்து வாழும் நிலை, பொருளாதாரச் சார்பு (சுதந்திர

மின்மை) இரண்டாந்தரப் பிரஜை நிலை, ஆதிக்க வெறிக்கும் சுரண்டலுக்கும் உள்ளாகும் அவலம், பாலுறவு ரீதியாக ஆணின் ஆதிக்கத்திற்கும் மேலாண்மைக்கும் ஆட்பட்டு அடங்கி வெறும் பிள்ளைப்பேறு எந்திரமாகவும் போகப்பொருளாகவும் மட்டும் காட்டப்படும்- உணர்த்தப்படும் நிலை, உடல் அமைப்பு காரண மாகப் பலவீனமானவள் என்று காட்டப்படும் நிலை என்ற தன்மைகளிலே காட்டப்படும் இலக்கிய மரபுகளும் இதை மறைத்து மூளைச் சலவை செய்வதற்காகப் பெண்ணைப் பற்றிய உயர்ந்த பிம்பங்களும் பெண்களின் முகங்கள் மீது மட்டு மன்றி முழு உடல் அளவிலான கவசங்களும் கூட நம் சமூக அமைப்பில் காலங்காலமாக நம்மால் வேண்டுமென்றே திணிக்கப் பட்டவை ஆகும். இந்த நிலை மாறி ஒட்டுமொத்தமாகச் சுரண்டலையும் ஆதிக்கப் போக்கையும் எதிர்த்துப் போராடு வதும் மானுடத்தின் முழுமையான மேம்பாட்டிற்காக முனைந்து செயலாற்றும் தீவிரத்தன்மையே இன்று வேண்டற்பாலது.

அம்பையின் சிறுகதைகளில் பெண் அடக்குமுறைக்கு ஆளாகும் நிலை, அதற்குரிய சமூகப் பொருளாதார உளவியல், வரலாற்று முறையிலான காரணங்கள், பெண்ணின் சமூக நிலை, அவற்றை எதிர்த்துப் போராட வேண்டிய தேவை என்பவற்றை விரிவாக ஆழமாகக் காண முடிகிறது. அத்துடன் பெண்ணைப் பற்றிப் பெண்ணுக்கே அறிவுறுத்தும் நிலை மிகத் தெளிவாக அம்பையின் எழுத்துக்களில் காணப்படும் மிகச் சிறப்பான அம்ச மாகும். குழந்தைகளை வளர்க்கும் முறையிலும் காலங்காலமாக நம் மரபில் போதிக்கப்பட்டு வரும் ஆண்-பெண் மதிப்பீடு களையும் காட்டி, தவிர்க்கப்பட வேண்டியவை எவை என்ப தையும் விளக்கி, பிம்பங்களை நீக்கி, முகமூடிகளை- கவசங் களைக்-களைந்து உண்மை உருவைக் காட்டுகிறார். பெண்ணிய நோக்கு அம்பையிடம் தெளிவாகவும் தீர்க்கமாகவும் உள்ளது.

பெண், 'பாதுகாக்கப்பட வேண்டியவள்', உபயோக மானவள், சுகத்தைத் தருபவள், தீர்மானங்களைக் கேட்டுக் கொள்பவள், அடக்கமானவள், அழகு சாதனங்களுக்கானவள், வீட்டைப் பேணுபவள், தேவியானவள் என்று புனர் (பக்.113-114) கதையில் கூறப்படும் கருத்தும், ''அவள் செய்யக் கூடியவை சமையல், அன்பு செலுத்தல், அம்மாவாதல், அவனையே காதலித்தல், அவனையே அடுத்த பிறவியிலும் அடைய வேண்டிக்கொள்ளல், எல்லாவற்றையும் சகித்துக் கொள்ளல்'' என்று பெஞ்சாதி (பக்.80-81) கதையில் அம்பை கூறுவதும் அறியத்தக்கன. இது காலங்கால

மாகப் போதிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சட்டங்கள் உடைக்கப் பட்டு வீட்டின் மூலையில் சுகாதாரம் இன்றிப் போதிய காற்றும் வெளிச்சமும் இல்லாமல் இயற்கைக் காட்சிகளை அனுபவிக்க வழியின்றி அடைபட்டுக் கிடக்கும் சமையலறையாக இருக்கும் நிலை மாற்றப்பட வேண்டும் என்று அம்பை அழுத்தமாக உணர்த்துகிறார். அவர் மீண்டும் மீண்டும் சொல்வது, 'அவள் நரம்புகளில் ஊடுருவிப் பாயும் ஓர் உணர்ச்சியை, வானில் கரும்புள்ளியாய்ப் பறக்கும் பறவையின் சிறகுகளை மாட்டிக் கொண்ட வேலிகளற்றப் பெருவெளியில் ஸஞ்சாரம் செய்ய விரும்பும் வேகத்தை' என்றும் (ஸஞ்சாரி ப. 82) 'அடியை எட்டியதும் உலகளந்த நீரைத் தொடுவீர்கள், சுற்றியுள்ள உலகுடன் தொடர்பு கொள்ளுவீர்கள்...... தொட்டு எழுங்கள்' (வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, ப. 49) என்றும் பெண் மாந்தர் வழியே முறையே ஆணுக்கும் பெண்ணுக்கும் உணர்த்தும் செய்தி அம்பையிடம் காணப்படும் அடிப்படையான பெண்ணிய நோக்கைப் புலப்படுத்தும்.

பெண்ணைப் போகப்பொருளாகவும், இன்ப நுகர்ச்சிக்கு மட்டும் உரியவளாக ஆண் மதிப்பிடுவதும், நடத்துவதும் நாம் காணும் நிலை. இந்த நிலையில் அவளை இரண்டாந்தரப் பிரஜையாக மட்டுமே நடத்துவதும் ஆணின் ஆதிக்கத்திற்குட் படுத்துவதும் அவளுக்குரிய சமூக நிலைப்பாடுகளாகின்றன. அம்பையின் மிருத்யுவில் மகளின் இயற்கை ரசனை உணர்வைப் பொசுக்கும் தந்தை (ம்ருத்யுஞ்ச ஹோமத்தில் மனைவி, மகள் இவர்களின் உணர்வையும் சமர்ப்பித்து விடுபவர்), கணவன் ரங்கா அவளுடைய உடல் துயரையும் பொருட்படுத்தாது உறவுக்கு அழைக்கும் நிலை இவற்றில் இதைக் காணலாம். இக் கதையில் பெண்ணின் மன உணர்வும், தந்தை இப்படி இருப் பதன் காரணமும் உளவியல் ரீதியில் காட்டப்படுவதுடன் மகளின் மனநிலையில் கதை காட்டப்படுகிறது.

மாறாக, ஆணாதிக்கத்திற்கு அடங்கிப் போகாமல் எதிர்ப்பைக் காட்டுவதை அம்பையின் ஸஞ்சாரி, வல்லூறுகள் ஆகிய கதை களில் காணலாம். ''அப்பா, அம்மாவிடம் கங்கை ஜலத்தின் மீது கை வைத்து தான் புனிதமானவள் என்று நிரூபிக்கச் சொன் னாராம்; சத்தியம் செய்யச் சொன்னாராம்; கங்கைச் சொம்பை அவர் கையிலிருந்து வாங்கி வீசி எறிந்தாள் அம்மா அன்று. அவள் பிடிவாதக்காரி. அப்பாவின் குணத்திற்கும், அகந் தைக்கும் ஊரை ஏய்க்கும் நரித்தனத்திற்கும் அம்மா அந்த

வீட்டிற்குள்ளிருந்துகொண்டே தண்டனை தந்தாள்.'' (சிறகுகள் முறியும், பக். 85-86)

வெளிப்பாடு, புனர் ஆகிய கதைகளில் ஆணாதிக்கத்தை எதிர்க்கும் பெண்ணையும், எதிர்ப்புக் காட்டாமல் அடங்கிப் போவதே பெண் தர்மம் என்று தவறாக எண்ணும் மரபு சார்ந்த பெண்ணிற்கு அறிவுறுத்தும் திறனையும் காண்கிறோம்.

ஆண், பெண் இணைந்து வாழும் வாழ்விற்குரிய திருமணம் வரதட்சணையால் தீர்மானிக்கப்படுகிறது. திருமணப் பேச்சில் பெண்ணுக்குத் தனக்குரியவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையோ தன் கருத்தைக் கூறும் உரிமையோ பெரும்பாலும் மறுக்கப்படுகிறது. நகர, சிறுநகர, கிராமப்புற, மத்தியதரப் பெண்களுக்கு, படிப்பு அதிகமில்லாத பெண்களுக்கு, பொருளாதார சுதந்திரமில்லாதபோது இதுதான் நிலை. மாறாக டில்லி போன்ற பெருநகரங்களில், படித்து அலுவல் பார்க்கும் பெண்களுக்குத் தன் கருத்தைக் கூற, மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுக்க, வரதட்சணையை எதிர்க்க உரிமை உள்ளது. இந்த வேறுபாட்டை அம்பை நுட்பமாகக் காட்டுகிறார். மிலேச்சன் சிறுகதையில் இதைக் காணலாம். 'சவிதா உனக்குத் தேர்ந்தெடுக்க உரிமை இருக்கிறது. உன் அப்பா பெரிய வர்த்தகர். அறிவு ஜீவியை நாடக்கூட உன் போன்றவர்களுக்குத்தான் உரிமை. ஆனால் இந்து...அவளிடம் கல்யாணத்தைப் பற்றிப் பேசி ஒருவனைத் தேர்ந்தெடுக்கச் சொன்னால், அவள் மிரண்டுவிடுவாள். காலம் காலமாய் அவள் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு இல்லாத, இருந்து பழக்கமில்லாத உரிமை அது. தனக்கு நிராகரிக்கப்பட்டது எது என்பதை அவள் அறிய மாட்டாள்'' (சிறகுகள் முறியும், ப. 7, 8). மத்தியதரப் பெண்களுக்கு அவர்களின் இந்த நிலைப்பாடு தெளிவுறுத்தப்பட வேண்டும் என்ற அம்பையின் நோக்கு இதில் புலனாகிறது.

மகளிடம் அன்பு செலுத்தி, மகளை நட்பு ரீதியில் வளர்க்க வேண்டிய தந்தை அவளை அடித்தும், இம்சித்தும் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டுகின்றான். இதன் விளைவாக, மகளுக்குத் தன்னைச் சுற்றிய உலகம் புலப்படவும், ஆண் ஆதிக்கத்தை எதிர்க்கும் துணிவு கைவரப் பெறவும் ஏதுவாகின்றன. பெருநகர வாழ்வில் தன்னிச்சையாக, விருப்பம் போல் செயல்படும் பெண்ணை, உறவும் சுற்றமும் அன்னியப்படுத்துகின்றது. இவற்றை முறையே, வல்லூறுகள், மிலேச்சன் ஆகிய கதைகளில் அம்பை காட்டுகின்றார். பெண்ணைத் தன் கட்டுக்குள்

வைத்திருக்க விழையும் ஆணின் மனோபாவம், விடுதலை வேட்கையுடன் கல்வி கற்று தன் விருப்பத்திற்கேற்பச் செயல்படும் பெண்ணை அந்நியப்படுத்தவும் செய்கின்றனர். இவைகளுக்கு இடையில் பெண் தன் உரிமைக்காகப் போராட வேண்டியுள்ளது என்பது அம்பை காட்டும் செய்தி.

அம்பையின் 'அம்மா ஒரு கொலை செய்தாள்' சிறுகதையில் தாய் மகள் உறவில் அன்பும் நெகிழ்வும் பிரிதலும் பரஸ்பரம் விட்டுக் கொடுத்தலும் கொண்ட பரிமாணங்களைப் பார்க்கிறோம். மனவளர்ச்சியற்ற பெண், வயதுக்கு வந்தபோது சமூகக் கட்டுகளுக்கு உட்படாத, மகளின் சுதந்திரப்போக்கை, அப்போதிருந்த மனநிலை காரணமாக அம்மா சற்று கடுமையான சொற்களால் கூற, மகள் மனத்தில் வடு உண்டாகிறது. தாயின் ஆதரவை எதிர்பார்த்த வேளையில், அவளுடைய வெறுப்பும் அலட்சியமும் வார்த்தைச் சாடலும் மகளின் மென்மை உணர்வைப் பொசுக்கி விடுகின்றன. ''அந்த ஈரமில்லாச் சொற்கள் பட்டாக்கத்தியாய் எழுந்து முன்பு முளைவிட்டிருந்த அத்தனை அழகுகளையும் குருட்டுத்தனமாய் ஹதம் செய்கிறது. தீராத பயங்கள் கருஞ்சித்திரமாக நெஞ்சில் ஒட்டிக் கொள்கின்றன. அக்கினியே ஸ்வா ஆஹா......அசுத்தங்கள் மட்டும் எரிக்கப்படவில்லை. மொட்டுகளும் கூடக் கருகிப் போயின'' (சிறகுகள் முறியும், ப. 151). உளவியல் ரீதியில் மிக அழுத்தமாகவும் உயர்ந்த கலைநேர்த்தியுடனும் கதை உருவாகியுள்ளது. மனித உறவில் அன்பும் புரிதலும் விட்டுக்கொடுத்தலும் வருடிக் கொடுத்தலுமே அடிப்படை நியதிகளாகும். தாய் - மகள் உறவிற்கு மிக்க அன்பும் பரிவும் நெகிழ்ச்சியும் சிநேகிதமும் வருடிக் கொடுத்து இணையாக நடத்தும் மனோபாவமும் அடிப்படைகள். மன வளர்ச்சியற்ற பெண்ணிடம் தாய் கொண்ட அன்பு மகளால் மிக அழுத்தமாகப் புரிந்து கொண்ட போதில், உறவுக்கு ஏங்கும் வேளையில் கிடைத்த கடுஞ்சொல் கூறல் மகளின் மனத்தைக் குத்தி ரணமாக்கிக் கொலை செய்துவிடுகிறது.

மனவளர்ச்சியற்ற கணவனின் மனநோய் அதிகமானது கண்டு, அவன் துயரம் அதிகமானதும் அவன் உறவினர்களால் உதாசீனப்படுத்துவதும் விளையும் என்று எண்ணி, அதற்கு இடங் கொடாது கணவனுக்குக் கொடுக்க வேண்டிய வேளையில் மருந்தே கொடுக்காமல் அவன் இறப்பிற்குத் துணைநிற்கிறாள் என்று 'அறைக்குள் - இருந்தவள்' சிறுகதையில் அம்பை

காட்டுகிறார். இங்கும் நுட்பமான மனோநிலை அதன் அடிப் படையிலான தீர்க்கமாக முடிவெடுத்து செயற்படும் பெண்ணின் துணிவும் சிந்தனைத்திறமும் உளவியல் ரீதியில் காட்டப்படு கின்றன.

ஆணுக்குப் பெண் சமம் என்றும், உடல்நிலை வலிமை, ஆதிக்க மனோபாவம், குடும்பத் தலைமைத் தன்மை, போகப் பொருளாக எண்ணும் மனநிலை ஆகிய குறுகிய வட்டங்களி லிருந்து விடுபட்டு வெளிவந்து, பெண்ணை மனுஷியாக, தோழியாக, தனக்கு இணையானவளாக எண்ணவும், மதிக்கவும் ஆண் புரிந்து கொள்ள வேண்டும். பாதுகாப்பின் பெயரால் அடக்குமுறை செய்வதும், அதிகார அமைப்பினால் பெண்ணை உருக்குலைப்பதும் ஆண் செய்யும் செயல்கள், குடும்பத்தைக் கட்டிக் காப்பது என்ற பெயரில் குடும்பத் தலைவி என்ற முகமூடி யில் வெளிச்சமும் காற்றும் புகாத சமையல் அறையில் ஒடுக்கப் படுபவளாகவும் பெண் துன்புறுத்தப்படுகிறாள். கறுப்புக்குதிரை சதுக்கம், வாமனன், அணில், ஆறு, சிறகுகள் முறியும் ஆகிய கதைகளில் அம்பை, இச் சிந்தனைகளை வலியுறுத்துகிறார். ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் அனுசரணையாய், இணையாய் தோழமையுணர்வுடன் அன்புடனும் நெகிழ்ச்சி யுடனும் ஒன்றுபட்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும். ''உணர்ச்சிகளில் ஆண் - பெண் இல்லை. இது ஆணுக்கு. இது பெண்ணுக்கு என்று பிரித்தால்தான் பிரச்சினையே. ...யார் வேண்டுமானாலும் எந்த உணர்ச்சியை வேண்டுமானாலும் இயல்பாகக் கொள்ளலாம். அப்படியானால் எது பலம், எது பலவீனம் என்ற பாகுபாடு போய்விடும். எது நசுக்கல், எது அடிமைத்தனம் என்பது மாறிவிடும். எது அதிகாரம், எது செல் வாக்கு என்று பார்க்கும் நோக்கு போய்விடும்... ஆணுக் கென்றால் இப்படி பெண்ணுக்கென்றால் அப்படி என்று வரை யறுத்தலில்லாமல் விளக்கங்கள் இல்லாமல் எல்லாக் கதவுகளும் திறக்கப்பட்டு அவமான உணர்வும் வெட்கமுமில்லாமல் நிர் வாணமாய், எந்தப் பூச்சும் இல்லாமல் சுத்தமாய்'' என்று வாமனன் என்னும் கதையில் (பக். 87, 86, 91) அம்பை கூறும் கருத்து இங்கு சிந்திக்கத்தக்கது. பெண் அடிமை நிலை மாற அடிமைத்தனங்கள் எவை, அவற்றிற்கான சமூகப் பொருளாதார சமயப் பண்பாட்டு, வரலாற்று ரீதியான காரணங்கள் எவை என் பதும், அவற்றிலிருந்து விடுபட்டு மீண்டும் வெளிவர வேண்டிய தேவையும், வழியும்கூட அழுத்தமாக விளக்கப்படுகின்றன. உடன் கட்டை ஏறுதல் என்னும் நிகழ்ச்சியில் ஏற்பட்ட நிலைபாடுகள் யாவும் ஆண் தன்னலம் கருதி ஏற்படுத்தியவை. பெண்ணைத்

தனக்கே உரிவளாக எண்ணும் மனப்பான்மை. இளம் விதவைக்குப் பாலுறவு உணர்வு வந்துவிடக் கூடாது என்ற அச்சம், குழந்தை இல்லாதபோது குடும்பச் சொத்து விதவைப் பெண்ணுக்குப் போய்விடக் கூடாதென்று முன்கூட்டியே திட்டம் எல்லாம் சேர்ந்து அவளை உடன்கட்டை ஏறச்செய்தது. தயங்கியவளிடம் இறந்தபின் நீ தெய்வமாவாய் என்று சொல்லி அவளை இசைவிப்பதும், அல்லாதபோது பலவந்தப்படுத்துவதும் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. இவற்றைச் சரியாகவும் தெளிவாகவும் பெண்களுக்கு முதலில் அறிவுறுத்த வேண்டும் என்ற பொறுப்புணர்வு அம்பையிடம் தொடர்ந்து காணப்படுகிறது.

அம்பையின் நோக்கிலும் அணுகுமுறையிலும் தீர்வு சுட்டலிலும் தெளிவான பெண்ணிய நோக்குள்ளது. பெண்ணை அவர் மிகச் சரியாக இனங்காட்டுகிறார். மாறாக ஆண்களைக் கொடுமைக்காரர்களாக அவர் படைக்கவில்லை. (மகளை மனைவியைப் பெல்டினால் அடிக்கும் ஆண். அழகை ரசிக்கும் மகள் / மனைவி விருப்பத்தைத் தடை செய்யும் ஆண் என்று காட்டுவது போல, உள்ள வளர்ச்சியற்ற பெண்ணின் மனவுணர்வைக் கொலை செய்யும் பெண்ணை, தாயை - அவர் படைத்துள்ளார்) உளவியல் அடிப்படையிலும் சமூகப் பொருளாதார, வரலாற்று அடிப்படையிலும் அவர் காரண காரிய இயைபுடன் காட்டுகிறார். தொடர்ந்து அம்பையிடம் பெண்ணிய நோக்கு காணப்படுகிறது. அதனைக் கலைபூர்வமாக - சோதனை முயற்சிகளுடன் அம்பை படைத்திருப்பது அவரின் அழுத்தமான கலை முயற்சிகளைக் காட்டும்.

பெண்ணை வெறும் போகப்பொருளாக, ஆணாதிக்கக் கட்டிற்கு உட்பட்டவளாகப் பார்க்கும் போக்கை எதிர்த்துக் குரல் கொடுக்கின்றார் அம்பை. பெண்ணின் பாதாதிகேச - கேசாதிபாத வருணனைகளை அவரிடம் காணமுடியாது. வீட்டின் மூலையில் ஒரு சமையலறை என்பது போல நுட்பமாயும் தொனி நிறைந்த புதிய புதிய அர்த்த பரிமாணங்களையும் பல்வேறு தளங்களில் செயற்படும் பெண்நிலைகளையும் காட்டுவது அம்பையின் தனித்தன்மை. ●

துணை நூற்கள்

1. அம்பை, சிறகுகள் முறியும், மதுரை, பிகே புக்ஸ், 1976.
2. அம்பை, வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, சென்னை, க்ரியா, 1988.
3. Lakshmi C.S., The Face behind the Mask, New Delhi, Vikas, 1984.

(மேலும் - 1992)

●

# பெண்கள் - சமகால எழுத்தாளர் பார்வைகள்

## சூரியதீபன்

சமுதாயத்தின் புதிய நிலைமைகள், பெண்களிடம் சிந்தனை, வாழ்க்கை முறை, குடும்பத்தில் வகிக்கும் பாத்திரம் எல்லாவற்றிலும் மாறுதல்கள் கோருகின்றன. ஒரு 50 ஆண்டுகளுக்கு முன் உலவிய பெண், இன்று மடிந்துவிட்டாள். பழைய குப்பைகளை கீழே போட்டு மிதித்து, அந்த இடத்தில் முற்றிலும் வேறுபட்ட புதுமைப் பெண் உருவாகிவிட்டாள் என்று கூற முடியாது. சமுதாயத்தில் பாதியான பெண்கள் இனம் முழுதும், அப்படியொரு உருமாறுதலுக்கு வரும்போதே கூறமுடியும். ஆனால் பழைய பெண் மடிந்து வருகிறாள்.

கணவன் மரவுரி தரித்து 14 ஆண்டுகள் வனவாசம், சீதைக்கும் வனவாசமாகிறது. ''நானும் காடேகுவேன்'' என மரவுரி தரித்து நிற்கிறாள். கம்பன் வடித்த கதாபாத்திரம் என்று சொல்வதைவிட, கம்பன் காலத்துப் பெண் வெளிப்பட்டாள் என்பதே பொருந்தும். பெண்ணினத்தின் மீது குவிக்கப்பட்ட இந்தச் சாபங்களிலிருந்து, விமோசனம் தேடும் கேள்வி ஒரு பெண்ணிடமிருந்து பிறப்பதற்கு, ஆயிரம் வருடங்கள் தேவைப்பட்டது. ஆயிரம் வருடங்களின் சரித்திரம் ஓடிவிட்ட பின் அகலிகை கேட்கிறாள்—

''அக்கினிப் பிரவேசம் செய்ய ராமன் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?''

''அவர் கேட்டார். நான் செய்தேன்'' என்றாள் சீதை அமைதியாக.

''அவன் கேட்டானா?'' என்று கத்தினாள் அகலிகை. அவள் மனதில் கண்ணகி வெறி தாண்டவமாடியது.

அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா? ஏமாற்றா? கௌதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா?''

(புலமைப்பித்தன்—சாப விமோசனம்)

காலகாலமாய் ஆணின் குடலோடும், குருதி நாளத்தோடும் ஓடிக்கொண்டிருக்கிற சாபங்களிலிருந்து பெண்ணை மீட்டெடுக்க முதல் கேள்வி ஊசி.

''இப்போது நான் உன்கூடஇருப்பது உனக்குச் சந்தோஷம் கிடைக்கும் என்றுதான். உன் சந்தோசத்துக்கு மட்டுமே நான் வாழ முடியுமா? எனக்குன்னு நான் எப்போ வாழறது? என் சந்தோசத்துக்கு கல்யாணம் குறுக்கே நிற்கும்னா, நான் கல்யாணத்தை புறக்கணிப்பேனே தவிர, தொழிலை (வேலையை) புறக்கணிக்க மாட்டேன்.''

(ஒரு மனுஷி— பிரபஞ்சன்; பக்கம் 84)

அகலிகையின் முணுமுணுப்பு 50 ஆண்டுகளின் பின் உரிமையாக முன் வைக்கப்படுகிறது. நேருக்கு நேர் ஓர் ஆணைக் கேட்கும் நிகழ்வாக புது குணமாறுதல்.

இந்திய சமுதாயத்தில் பெண்ணுக்குத் தரப்பட்டுள்ள மிகப் பெரிய பாத்திரம் குடும்பப் பெண் என்பது. பெண் குடும்பம், சமையல், தாய், மனைவி என்றே நினைவுக்கு வருகிறாள். இன்றைய குடும்பப் படிமுறை அமைவுக்கு ஏற்ற ஒரு பெண், உடைமைச் சமுதாயத்திற்கு பொருத்தமான ஒரு பெண் நினைவுக்கு வருகிறாள்.

சமுதாயம் குடும்ப அமைவை பாதிப்பது போலவே, குடும்பம் சமுதாயத்திற்கு மறுசேவை செய்கிறது. இதனை 'எதிர் சேவை' என மக்கள் மொழியில் சொல்லலாம். மதுரை சித்திரைத் திருவிழாவின் போது, அழகர் மலையிலிருந்து இறங்கி வரும் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கு முன், மக்கள் அவரை எதிர் கொண்டு சேவை செய்கிறார்கள். சமுதாயம் தொடர்ச்சியாக நடந்து வருகையில் அதனை எதிர்கொண்டு சேவை செய்வதற்கான மாந்தர்கள், இங்கேயும் நமது குடும்ப உறுப்பிலிருந்து தயாராக உருவாக்கப்படுகிறார்கள்.

அம்மா சமையல் செய்கிறாள், அப்பா வேலைக்குப் போகிறார் என்ற வாசகங்கள் சமீப காலம் வரை பாடப் புத்தகங்

களில் கோடிட்டு இருந்தன. அம்மா வேலைக்குப் போய் வந்ததும் சமையல் செய்கிறாள் என்பது குழந்தைகளுக்கு அனுபவ ரீதியான பாடம். பிறகு அவர்கள் அதுவாகவே வளர்கிறார்கள். குடும்ப அமைவு, ஒரு பெண்ணிடம் மனைவியாவதற்கான மனோபாவத்தையும் ஆணிடம் கணவனாவதற்கான மனோபாவத்தையும் உருவாக்குகிறது. ஓர் ஆண் கணவனாகவும், ஒரு பெண் மனைவியாகவும் வளர்க்கப்படுகிறார்கள்.

''இக்காரணத்தினால்தான் திருமணமான அன்றே ஓர் இந்தியப் பெண் முன்பின் தெரியாத ஓர் ஆணுடன் சகஜ வாழ்க்கை மேற்கொள்ளும் மனோநிலை உடையவளாக விளங்குகிறாள். பெரியோர்களால் கணவன் என்ற அந்த நபர் அவளுக்கு இனங்காட்டப்படுகிறான். மற்றவை அவளுக்கு ஏற்கனவே மனத்தளவில் முடிந்துபோன விசயங்கள்.''1

இவர்கள் இந்தச் சமூகத்தின் அச்சான பிரதிநிதிகள்; இந்தச் சமூகத்திற்கு பொருந்தும் மாந்தர்கள்.

''ஏற்கனவே சமூகம் தயார் நிலையில் வைத்திருக்கும் ஒழுங்குமுறை, பண்பு, நேர்மை, நியாயம் என்பனவற்றை முழுமையாக ஏற்றுக் கொண்டு, கடமை உணர்வுடன் ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்யும் குடிமக்களாகத் திகழ்வார்கள்.''2

கதாநாயகனும், நாயகியும் (ஜானகி) ஒரு தனியார் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றுகிறார்கள். காதலித்து திருமணம் செய்து கொள்கிறார்கள். ஜானகிக்கு வேறு உயர்ந்த நோக்கங்கள் இருக்கின்றன. மேலும் கல்வி கற்பது, அறிவை வளர்ப்பது, கல்லூரிப் பேராசிரியராக ஆவது. இவை ஒரு பெண் தன்னை சுயமாக ஆக்கிக் கொள்வதற்கான தகுதிகளாகின்றன. இது அவர்களிடம் கருத்து வேறுபாட்டை உருவாக்குகிறது. அவன் தடை போட்டும் நிற்காமல் ஜானகி மேல்படிப்புப் படித்து, பம்பாயில் கல்லூரி ஆசிரியராகப் போய் விடுகிறாள். இருவரும் பிரிகிறார்கள். தந்தையின் அறிவுரை கேட்டு, நிச்சயிக்கப்பட்ட பெண்ணை மணந்திருந்தால் இத்தகைய அவமான வெட்டு தன் வாழ்வில் விழுந்திருக்காது என கதாநாயகன் சிந்திக்கிறான். மீண்டும் பெற்றோரிடமே போய்ச் சேர்ந்து, அவர்கள் ஏற்பாடு செய்யும் பெண்ணை மணக்கிறான். வாழ்வு மணம் வீசுகிறது.3

நா.பா.வின் இந்தக் கருத்தோட்டம், நிலவும் குடும்பப் படிமுறை அமைவை, உயர்ந்ததெனப் போற்றுகிறது. இந்தச்

சமூகம் தயார் நிலையில் வைத்திருக்கும் ஒழுங்குமுறை, நெறி, பண்பு, மதிப்பீடுகளை மாறாமல் ஏற்றுக்கொள்ளும் குடும்ப உறுப்பை வரவேற்கிறது. பெண்ணின் கல்வி மேம்பாடு, அறிவுத் தேடல், கல்வி வளர்ச்சி, ஆணின் சுயநலத்திற்குத் தடை என்ற உணர்வை உருவாக்குகிறது. புதிய பண்புகளாக அமையும் காதல் மணமும், கலப்பு மணமும் மறுநாளே வாடிவிடும் மல்லிகை என்றும், மரபுத்திருமணம் என்றென்றும் மணம் வீசும் மரிக்கொழுந்து என்றும் உவமை சொல்லப்படுகிறது.

சனநாயகம், சமத்துவம் போன்ற பண்புகள் அரசியல், பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விசயங்களாகவே இன்றும் கருதப்படுகிறது. இவை அனைத்துத்துறை சம்பந்தப்பட்ட விஞ்ஞானப் பண்புகள் என இவர்கள் கருதவில்லை. எனவே ஆண் இன்னும் அவன் உடல்வலிமை காரணமாக மதிக்கப் படுகிறான். விவரிக்கப்படுகிறான். அதுபோல் பெண்ணின் பலவீனம், அவளுடைய உடம்பாகக் கருதப்படுகிறது. அவளுடைய பலவீனம் உடலியல்புகளாக, மென்மை, நளினம், அழகு, நாணம் என்பதாக முன் வைக்கப்படுகிறது. இன்னும் நமது கதாசிரியர்கள், கவிஞர்கள் பரம்பரையாக தான் ஒரு பெண் என்ற உணர்வு ஊட்டப்படவும், உணரவும் அந்த அளவிலேயே சிந்திக்கவும், செயல்படவுமான அவளது பலவீனம் என்று உணரவில்லை. அவளுடைய உடல் அமைப்போடு தொடர்புடைய விசயங்களாகச் சமாதானப் படுத்தப்படுகிறது, போற்றப்படுகிறது.

''விடியற்காலை குளிர் அம்மா மாதிரி. இந்த இருட்டேகூட அம்மா மாதிரிதான். ஆழ்ந்த அமைதி. பயமுறுத்தும் இருட்டாய் இல்லாது வானம் மட்டும் வெளிச்ச இதழ் பிரித்து பூமியைப் பார்த்து மெல்லச் செய்யும் புன்முறுவல். அம்மாவின் மெட்டி மாதிரி, கால் கொலுசு மாதிரி பறவைகள் சப்தம் போடும். பட்டுப்புடவை மாதிரி, காற்று வீசும். தூங்குகின்ற பிள்ளையின் விசமங்கள் நினைத்து வாஞ்சையோடு சிரிக்கிற அம்மா மாதிரி வானம் புன்னகை செய்யும். ஈரம்பட்ட புழுதி ரோடு கூட மெத் மெத்தென்று அம்மாவை ஞாபகப்படுத்தும்.''

''விடியற்காலை குளிர் அம்மா எனில், ஏஸி குளிர் என்ன மாதிரி... மனைவி மாதிரி. முன்னிரவில் களைத்துக் கட்டிலில் சாயும்போது பரமசுகம்... ஏஸி குளிர் முத்தமிடும், கால்களைக் குறுகுறுக்க வைக்கும்......''

(மாலை நேரத்து மயக்கம்—பாலகுமாரன்)

தாய்மை, பாலியல் இன்பம் இரண்டும் பெண்ணின் பண்புகள். தாய் என்ற ஸ்தானமும், மனைவி என்ற ஸ்தானமும் வேறு வேறு பண்புகளைக் கொண்ட ஒரே பெண் இவர்களது பார்வையில்.

தாய்மை, கற்பு, பாசம், பாலியல் சுகம் இவை பெண் உடம்பு ஒட்டிய விசயங்களாகப் பார்க்கப்படுகின்றது. தாய்மை என்பதும் அப்படித்தான் பார்க்கப்படுகிறது. 'பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்' என்று அறிவுள்ளவர்களாலும், 'பெற்ற வயிறு பற்றி எரிகிறது' என்று பாமர மக்களாலும் சொல்லப் படுகிறாள். அப்படியானால் தாய்மை, பாசம் என்பது பெண்ணின் கர்ப்பப்பை, வயிறு, மார்பகம் என்று பெண்ணின் உறுப்புகள் சம்பந்தப்பட்ட பண்பாக ஆகிவிடுகிறது. உண்மை யில் அவை அப்படித்தானா? ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவான பண்புகள் இல்லையா? ஒரு பெண், கருவை தனது வயிற்றில் ஏந்துகிற போதே, ஒரு தாயின் கடமைகள் தொடங்குவது போலவே, ஒரு ஆணின் கடமையும் தொடங்கு கிறது. குழந்தை பிறப்புக்கு முன்பும், பின்பும், குழந்தையை குளிப்பாட்டுவதிலிருந்து வளர்ப்பது வரை ஓர் ஆணும் பங்கேற்க வேண்டும். நேரமும், உழைப்பும், உணர்வும் செலவழிக்கப்பட வேண்டும். குழந்தையிடம் தாய்ப் பண்புகள் கொண்டவனாக அவன் ஆகிறான். இங்கு, அந்தக் கடமை ஆற்றாத, சூழலும் பிரக்ஞையும் கொள்ளாதவனாக ஆண் இயங்குகிறான்.

பெண்ணின் இடத்திலிருந்து செய்திருந்தால் அவனுடைய பாசமும் அவளுக்குச் சமதையாகவே நிற்கும்.

அப்படியானால் எல்லா உணர்ச்சிகளும் பண்புகளும் பொது வானவைதானா?

''ஆமாம், அப்படித்தான் அவற்றைப் பார்க்க வேண்டும். அப்போது யார் வேண்டுமானாலும், எந்த உணர்ச்சியை வேண்டுமானாலும் இயல்பாக்கிக் கொள்ளலாம்.''

''பெண்களுக்கு என்று தனியாக ஒரு நோக்கு இல் லையா?''

''அது பெண்ணாய் பிறப்பதால் மட்டும் வரும் நோக்கு இல்லை. அது பிரக்ஞையால் வரும் நோக்கு. அவள் வாழ்வு, அவள் உடம்பு, அவள் பிரச்சினை, அவள் இடம், சூழல் இவை பற்றிய பிரக்ஞை. அவளுக்கும், வாழ்க்கைக்கும்

உள்ள தொடர்பு பற்றிய பிரக்ஞை. கறுப்பனுக்கும் அரிசனுக்கும் உண்டாகும் பிரக்ஞை போல.''

(அம்பை—வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, பக்கம் 88)

பெண் மீது போர்த்தப்பட்ட அல்லது பெண்ணின் உளவியல் ரீதியான அடிமைத் தனங்களையே எழுத்தாளர்களும், கலைஞர்களும் போற்றிக் கொண்டிருக்கிறார்கள். தி.ஜா.ரா.வின் படைப்புக்களில் இத்தகைய மதிப்பீடுகளிலிருந்து திமிறி வெளியே வருகிற பெண்கள் உண்டு. பெண்ணளவிலான மீறல்கள் உண்டு. மீறலில் உளரீதியான அவளின் போராட்டங்களே விவரிக்கப்படுகின்றன. அவர்கள் தங்களளவில், இந்தத் தளைகளை உதறப் பார்க்கிறார்கள். சமுதாய நிலைமைகளுக்கும் இதற்குமான சங்கிலிகள் அவர்களுக்குத் தெரியாது. எனவே பழைய மதிப்பீடுகளை உடைக்க முனைந்து, அவர்களே உடைந்து போகிறார்கள். (நாவல்—மரப்பசு)

பாலியல் பிரச்சினைகள் மட்டுமே தி.ஜா.ரா.வின் பாத்திரங்கள். பாலியல் பிரச்சினைகள் அன்றி பெண்களுக்கு மற்ற பிரச்சினைகள் இல்லை என்பதே தி.ஜா.ரா.வின் கணிப்பு.

## 2

பெண்ணின் உடலும், உடல் பற்றிய அவளின் உணர்வுகளும் ரசிப்புக்குரியதாக, பெண் மீதான லயிப்புக்களாக சமகால எழுத்தாளர்களால் பார்க்கப்படுகின்றன. முந்திய தலைமுறை எழுத்தாளர்கள், யதார்த்தமாகப் பார்க்க முயன்றதும், வணிகக் கலப்படம் இல்லாத, தீவிர படைப்பாளிகளாக இருந்ததும், இன்றைய தலைமுறை அதை உதறிவிட்டதும் காரணம். பேர் பார்க்கும் ஆசை, புகழ் தேடும் வேட்கை, பணம் சேர்க்கும் உத்தி ஏற்கனவே இவர்களுக்கிருக்கும் கண்ணோட்டத்தை இன்னும் மலினப்படுத்தி விடுகின்றன.

உரிமை கோரும் புதுமைப் பெண்களைப் படைக்கும் போது கூட, பெண்ணை உடம்பு ரீதியாகப் பார்க்கிறார்கள். உரிமைக் ; குரல்களினூடே, பழைய பார்வையும் விட்டுப் போகாமல் வருகிறது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சி, சமுதாயத்தில் மிகப்பெரிய மாற்றங்களை முன்கொண்டு வந்துள்ளது. புரட்சிகளும், புதிய மாற்

றங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. சமுதாயத்தின் குண அளவில் மட்டுமல்ல; மனிதனின் பண்புகளிலும் மாறுதலை விளைவித்துக் கொண்டிருக்கிறது. மனித வாழ்வில், சமுதாய இயக்கத்தில் விஞ்ஞானம் ஆற்றும் பாத்திரத்தை, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தும் சுஜாதா பெண்ணை பெண்ணாகவே காண்கிறார். பழைய பெண், வீட்டின் சமையலறை மூலை என்றால் சுஜாதாவின் பெண் கம்ப்யூட் டர் ஏ.சி. அறை. குளித்து தலை முழுகி, முன்னால் குங்கு மம் சுமந்து, பின்னால் பூ சுமந்து 'லட்சுமி'கரமாய் பழைய பெண். ஜீன்ஸ் பேண்ட், சர்ட் அணிந்து சுஜாதா வின் புதுமைப் பெண். ஆனால், உடம்பு மட்டுமே கொண் டவள். பாலியல் உறவுக்கு மட்டுமே உருவாக்கப்பட்டவள். அவளுடைய உடம்பும், உழைப்பும் பழைமைக்குத் தேவைப் பட்டதென்றால், இப்போது அவற்றுடன் அவளுடைய மூளைத்திறனும் முதலாளியத்திற்குத் தேவை. முதலாளித்துவ உலகம், தொழில் நுட்பம், சிந்தனை, பண்பாட்டுக்குப் பொருத்த மான உடம்பாக பெண்களைக் காண்கிறார்.

விஞ்ஞானக் கதை, மர்மக் கதை, கொலைக் கதை, துப்பறி யும் கதை - (ராஜேஷ்குமார், பட்டுக்கோட்டை பிரபாகர் வகையறா) இவை எல்லாமே இந்தப் பார்வைக் கதைகளே.

ஓர் ஆணும் பெண்ணும் பழகுவது காதல் வயப்பட்ட தாகவே இருக்க முடியும். அல்லது கணவன், மனைவியாக இருக்க முடியும். அதற்கப்பால் எந்த உறவும் இல்லை என்று இந்திய சமுதாயம் கருதுகிறது. எழுத்தாளர்களின் கண் ணோட்டமும் அப்படியே.

ஆண் - பெண் உறவுகளில் நட்பு என்பதே இல்லை. அது காதல் உறவு மட்டுமே. பெரும்பாலான எழுத்தாளர்களிடமும் இந்தக் கருத்தோட்டமே தங்கியிருப்பதால், 100-க்கு 75 கதை களில் இளம் பருவத்தினர் மட்டுமே கதாபாத்திரங்கள். காதல், ஆண், பெண் விழைவு தொடாமல் வருவதில்லை.

பூமணி, வீர. வேலுச்சாமி, அஸ்வகோஷ், பாவண்ணன், கந்தர்வன், சுப்ரபாரதிமணியன், தமிழ்ச்செல்வன், கோணங்கி கிருஷி, கோபி கிருஷ்ணன், ராஜம் கிருஷ்ணன் போன்றவர்கள் விதிவிலக்கு. இவர்கள் மனித உறவுகள் அனைத்தையும் தீண்டி எழுதுகிறவர்கள்.

''நான்சி, நா ஒன்னு சொல்றேன். நம்ம தொடர்ந்து பழகனும். நீ என்னை ஒரு நல்ல 'ப்ரண்டா' நெனைச்சிக்கோ, ஒங் கஷ்டத்தக் கேட்டதும் என் துக்கமெல்லாம் பறந்து போயிருச்சி. வா. 'மெரினா கேண்டீனிலே' சாப்பிடுவோம். நாம் சந்திச்ச இந்த தினத்தை தோழமை தினமாகக் கொண்டாடுவோம்......நா ஒம்மேல எந்த ஒரு விசேஷ சுதந்திரத்தையும் எடுத்துக்க மாட்டேன். இன்னும் பச்சையா சொல்லப் போனா, நா ஒன்ன நிச்சயமாகக் காதலிக்க மாட்டேன்.''

(கோபி கிருஷ்ணன்--நிகழ்)

ஓர் ஆண் பெண்ணிடம் காட்டும் அன்பு காதலாக மட்டுமே இருக்க முடியும் என்ற பழைய மதிப்பீடுகளை இவர்கள் உடைக்கிறார்கள். எழுத்தாளர்களின் செக்குமாடு மனோபாவங்களைக் களைந்தெறிகிறார்கள்.

பெண் அன்பு, கருணை, தியாகம் மிக்கவள். அவளது தியாகம், அன்பு, பரிவால் ஆண் திருத்தப்பட வேண்டியவன் என்று ஆணுக்கு எல்லாச் சலுகைகளையும் தந்து, பெண்கள் தங்களது தியாகத்தால், காதலால், அன்பால், தாய்மையால் அவனை மேம்படுத்துவதாகக் காட்டுபவை சிவசங்கரி, இந்துமதி கதைகள்.

பெண் பற்றி ஆண் மனதில் இயல்பான படிவங்கள் பெண்ணை விடுதலைப்படுத்தும் குரல்களாக ஒலிக்கவில்லை. இதன் தாக்கமாக, பாதிக்கப்பட்ட பெண்ணின் எழுத்தாளர்கள் அந்தக் குரலை ஒலிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். பெண்ணுரிமை இயக்கங்களின் வளர்ச்சி, முதலாளித்துவ நாடுகளின் பெண் நிலைவாதம், முற்போக்கு இயக்கங்கள் ஊட்டிய விழிப்புணர்வு பின்புலத் தூண்டுதல்களைத் தந்தன.

பெண்களின் பிரச்சினை, சமூகப் பிரக்ஞை கொண்ட எவருக்கும் பொதுவானது. கலை, இலக்கியத்துறைகளில் முன்னிற்கும் கலைஞர்கள் தீவிர நோக்கு கொள்ளவில்லை. பெண்களுக்காக பெண்கள் குரல் கொடுத்தல், மற்ற துறைகளைப் போலவே, இங்கும் மேலெழுந்துள்ளது. அம்பை, ராஜம் கிருஷ்ணன், ஜோதிர்லதா கிரிஜா, பிரசன்னா ராமசாமி சொல்லாத சேதிகளின் கவிஞர்கள் - என்று, பெண்களின் பிரச்சினைகளை அவர்கள் எழுதுகிறார்கள். இவர்கள் பெருவாரியாகத் தொடுகிற அளவுக்கு பெண்கள் பிரச்சினைகள் வேறு எந்த எழுத்தாளர்களின் வேலைத் திட்டத்திலும் இல்லை.

'சொல்லாத சேதிகள்'— கவிதைத் தொகுப்பு—ஒரு புதிய போக்கில் ஒரு புதிய சேதியாக வெளிப்பட்டுள்ளது. தமிழில் இதுவரையிலும் எழுதப்படாத கவிதைகள் இவை.

தமிழகக் கல்வி நிலையங்களில் 15 ஆண்டுகளாக உயராமலிருந்த ஊதியத்திற்காக 45 நாட்கள் வீரஞ்செறிந்த போராட்டத்தை ஆசிரியர்கள் எடுத்தார்கள். போராட்ட எழுச்சி புதிய முறைகளைக் கற்றுத் தந்தது. ஆசிரியைகள் கைக் குழந்தையுடன், குடும்பத்துடன் போராட்ட முன்னணியில் நின்ற போது, அவர்களைக் கைது செய்யவும் முடியாமல், துரத்தவும் முடியாமல் அதிகார வர்க்கத்தை திணற அடித்தார்கள்.

'மக்களே கவனித்துக் கொள்வார்கள்' என்று, அரசியல் கட்சிக் குண்டர்களை ஏவிவிட்டு சிதைக்கப் பார்த்த எம். ஜி. ஆரின் சர்வாதிகாரமும், ஆசிரியர்களின் போராட்டத்தின் முன்வில் முறிந்தது. போராட்டத்தின் விளைவு, அனைவருக்கும் பழைய பாக்கித் தொகையுடன் ஊதிய உயர்வு கிடைத்தது. அதில் ஒரு டி. வி. வாங்க வேண்டுமென்று கருதிய விருப்பம் கொண்ட பேராசிரியை பத்மா, மீதித் தொகை வந்தால் தன் ஆராய்ச்சிக் கட்டுரையை புத்தகமாகப் போட வேண்டுமென்று கருதிய வசந்தா இருவருமே தோற்றுப் போகிறார்கள். ஒரு வீட்டில், டி. வி.க்குப் பதில் கணவரின் கௌரவத்தைக் காப்பாற்றும் மோட்டார்பைக்காக. மற்றொரு வீட்டில் ஆணுக்குரிய வேறொன்றாக மாறிப் போகிறது. அவர்கள் போராட்டத்தில் வீராங்கனைகள்; வீட்டில் பெண்கள் மட்டுமே.

''உனக்குத் தயக்கமா இருக்குன்னு நினைக்கிறேன். அதனால நான் சொல்றேன். அவங்க மாதிரி நாம பொருளாதார சுமையைச் சுமக்கலாம். இருந்தாலும் இலட்சுமணன் வரைந்த கோடாய் எத்தனை தடைகள் நமக்கு? நீ புத்தகம் வெளியிடனும்னு ஆசைப்படலாம். நிறைவேற்ற முடியறதாக் கூட இருக்கலாம். ஆனால் அதை நீ மட்டும் நினைத்தால் முடியாது; இப்ப நான் ஏன் டி. வி. வாங்கலேன்னு புரியுதா?''

பிரேமா அருணாசலம்

('நெல்லுச்சோறு' தொகுப்பு-பக். 56)

பெண்ணை ஆபாசப்படுத்தும் பத்திரிகையை மனதாலும் கண்களாலும் கவ்விச் சாப்பிட்டு காலரா நோயை மனசில் பெருக்கும் பஸ் பயணிகளை, செத்த பெருச்சாளியைக் கவ்வி

இழுக்கும் நாய்களுக்கு ஒப்பிடும் இந்திரா பவானியின் மற்றொரு சிறப்பான கதை அதே தொகுப்பில்.

இவர்களிடம், பெண்ணை உடம்பாகக் காணும் பேய் மனதை காலால் உதைக்கும் ஆவேசம், யதார்த்தமாய்ப் பொங்கிப் பெருகுகிறது.

## 3

பெண்கள் அவர்களுடைய குரல்களை ஒலிக்க ஆரம்பித்தார்கள்; அவர்களின் போராட்ட ஆயுதங்களை எடுக்கத் தொடங்கினார்கள். ஒவ்வொரு பெண்ணும் நசுக்கப்படுகிற போதும் அவளின் எதிர்ப்பு, அவளின் அழுகை, அவளின் குரல் மட்டுமே ஒலித்தது. நீண்ட காலமாய் அந்த ஈனக்குரல்கள் வரலாற்றின் சுவர்களில் மோதி மோதி விழுந்தன. குடும்பச் சுவர்களின் உயரத்தை தாண்டி மேலே வரமுடியாமல், சமையலறைகளின் மூலைகளில் மோதிக் கருகின. ஒவ்வொரு வீட்டின் சமையலறை, படுக்கையறைச் சுவர்கள் லேசாய்த் தட்டப்படுகிறபோது, உள்ளிருந்து ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் லட்சோபலட்சம் பெண்களின் வீறிடும் குரல்கள்.

பெண்நிலை அவலமாக இருக்கிறதால், அவலத்தின் மீதான கேள்விக் குறிகள், சமுதாயப் போராட்டமாக மாற்றப்பட வேண்டும். மனுசஇனம் மொத்தத்துக்கும் உரிய பிரச்சினையாக மேலெடுக்கப்பட வேண்டும். ஆனால் ஆண் எதிர்ப்பு சீர்திருத்தக் குரலாகவே வெளிப்பட்டது.

ஆணாதிக்கத்தை எதிர்த்து குரல்கள் மையம் கொண்டன. பெண் நிலைவாதம் இந்த இடத்தில் வேர் விட்டது.

''ஒவ்வொரு பெண்ணும், இன்னொருத்தியின் கண் அடியின் கருவட்டங்களைத் தடவவேண்டும். பிரசவக் கோடுகளில் உள்ளங் கைகளை வைக்கவேண்டும். புடைத்த நரம்புகளில் விரலை வைக்கவேண்டும். வெடித்த கால்களை கைகளில் ஏந்த வேண்டும்''4

ஆணாதிக்க எதிர்ப்பில் ஊன்றி எழும் பெண்ணிலைவாதக் குரல் இது.

பெண் அடக்குமுறைக்கு உள்ளானவள். இந்தச் சமூகத்தின் வர்க்கப் பிரிவுகளுக்குள்ளும் ஒரு வர்க்கப் பிரிவாக அவளிருக்

கிறாள். எனவே கூடுதல் அடக்குமுறைக்கு உட்பட்டவள். ஆண் சமூகம், பெண் சமூகம் எனப் பிரிந்து கூடுதலாகவும் அவள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது. இவை அத்தனைக் கும் இந்த சமூகக் கூறு காரணம்; உடமைச் சமூக அமைப்பு அடிப்படை.

சமூகப் பிரச்சினையை முன்வைத்துப் பணியாற்றும் ஆண் தலைமை கொண்ட முதலாளித்துவ அரசியல், சனநாயக இயக்கங்கள், சீர்திருத்த இயக்கங்கள் பெண் விடுதலையை சமூகப்பிரச்சினையின் அம்சங்களாகக் காணாமல் நிராகரித்தன. இதனால் வெறுப்புற்ற பெண்நிலை அமைப்புக்களும் சமூகப் பிரச்சினையின் அம்சமாகக் காணவில்லை.

பெண்ணின் வேதனையை பெண்ணே உணர்ந்து கொள்ள முடியும் என்பது சரியானது. வர்க்கமும் வாழ்நிலையும் ஒன்றா யிருப்பதால், உணர்தலும் சிந்தனையும் ஒத்ததாக இருக்கும். ஆனால் பெண் விடுதலை என்று வருகிறபோது அது போராட்டமாக உருக்கொள்ள வேண்டியது. ஆணாதிக்கத்தை எதிர்த்த போராட்டத்தினூடேயே இந்தச் சமூக அமைப்பை எதிர்த்த போராட்டமாக மாற்றி எடுக்கப்பட வேண்டியது. பெண்ணை அடிமையாக வைத்திருப்பதில் ஆணாதிக்கத்திற்கே அடிப்படையான பொருளியல், அரசியல், வர்க்க சமூகம் என்ற மையங்கள் பிரதானமானவை. அம்பையின் 'கறுப்புக் குதிரைச் சதுக்கம்'—பெண்நிலை வாதத்திற்கு முன்மாதிரியான கதை.

ரோஸா — போலீஸ் வெறியர்களால் மாற்றி, மாற்றி குதறப்பட்டதைக் கண்டித்து பெண்கள் எழுச்சி, ஊர்வலம், கூட்டம் திட்டமிடப்படுகிறது. பலவகையான பெண்கள் அமைப் புக்கள், குழுக்கள். 'பெண்களைத் தெய்வமாகப் போற்றுங்கள்' என்ற மேற்கோள்களுடன் வந்த பெண்கள் குழு—

ஊர்வலத்தை ஏற்பாடு செய்து நடத்தும் மீனாவின் சர்ட் காலரைப் பிடித்து உலுக்கி— பேண்ட் - ஷர்ட் போட்டுக்கொண்டு பெண்களுக்கு ஆதரவு தேடாதே. புடவை கட்டு என்று அவள் ஷர்ட் காலரை கிழித்த குழு - அவர்கள் புடவை கட்டியிருந் தாலும் அவர்களுக்கும் தெய்வத் தன்மைக்கும் இடையே மீனாவின் கிழிந்த காலர் தூரம் இருந்தது என்று விவரிக்கிற பழமைவாதிகளான பெண்கள் குழுவை - போராட்டத்தில் இணைத்துக் கொள்கிறார்கள்.

''நல்ல கிறித்துவர்களே! பெண்களை உதாசீனம் செய்வது ஏசுவுக்கு துரோகமிழைப்பது. ஏசுவின் பக்கம் வாருங்கள். பெண்களைக் கருணையுடன் நடத்துங்கள்'' என்ற அட்டையுடனும் பிரசுரத்துடனும் வந்த கிறித்துவ குழுவைச் சேர்த்துக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

ஆனால் இந்தக் கொடுமையை எதிர்த்துப் போராட முன் வரும் எந்த ஆண்கள் சம்பந்தப்பட்ட அமைப்புகளையும் தங்களோடு இணைத்துக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

சமூக, அரசியல், பொருளியல், வர்க்க சமுதாயத்தை புறக்கணித்து, ஒரு பிரச்சினையாக மட்டுமே காணும் முதலாளியச் சிந்தனை, முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்களின் செயல்பாடு ஆகியவற்றிலிருந்து பெண் நிலைவாத இயக்கம் கருக்கொண்டது என்பதைக் காணவேண்டும்.

உழைக்கும் மகளிரின் வர்க்க நலன்கள், முதலாளித்துவ மகளிர் இயக்கத்தின் வர்க்க நலன்களும் ஒன்றானவை அல்ல. இரண்டையும் ஒன்றாக சமப்படுத்தி, பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அவற்றுக்கிடையே உள்ள பொதுவான அம்சம் மக்கள் சனநாயகத்திற்கும் முதலாளித்துவ சனநாயகத்திற்கும் இடையில் நிலவும் அம்சம் தானே தவிர வேறில்லை. வர்க்கங்களாகப் பிளவுண்டிருக்கும் சமுதாயத்தில் உழைக்கும் வர்க்க மகளிர் இயக்கமும் முதலாளித்துவ மகளிர் இயக்கமும் வேறுவேறாக, நலன்கள் அடிப்படையில் மட்டுமே இருக்க முடியும். பெண்நிலைவாதம் ஆணாதிக்க எதிர்ப்புக் குரலோடு மட்டுமே தன்னை நிறுத்திக்கொண்டு அதற்கான சில உரிமைகளின் எல்லைகளுக்குள் தன்னைக் குறுக்கிக் கொள்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தின் சுரண்டல் உறவுமுறைகளை சேதமுறாமல் அப்படியே விட்டு வைப்பதால் ஒரு முதலாளித்துவ மகளிர் இயக்கத்தின் பங்கை ஆற்றுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

''பெண்களின் நிலைமையையும் அவர்களின் வாழ்க்கை முறையையும் தீர்மானிப்பது, அவர்கள் எந்த வர்க்கத்தின் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்பது தானேயொழிய ஆண்களின் ஆதிக்க நிலைக்குப் பணிந்து போகும் விதத்தில் ஒடுக்கப்பட்டு, எந்தவித உரிமையும் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்ட அவர்களது பாலினச் சமூகப் பிரிவால் அல்ல. எனவே முதலாளித்துவ மகளிர் இயக்கங்கள் கோரும் ''இரு

பாலினருக்குமிடையேயான சட்டரீதியான சமத்துவத்தால்'' கிடைக்கும் உரிமையும் சமத்துவமும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மகளிரைப் பொறுத்தவரை ஒரு கண்துடைப்பே. ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சார்ந்த ஆண்களுக்கு எந்த அளவுக்கு வழங்கப் பட்டுள்ளதோ அந்த அளவுக்குச் சிறியதே.''5 ●

அடிக் குறிப்புகள்

1 ராமமூர்த்தி ரவீந்திரன்—காலச்சுவடு ஜூலை-88
2 மேற்படி
3 மரிக்கொழுந்து—நா. பார்த்தசாரதி
4. அம்பை, வீட்டின் மூலையில் ஒரு சமையலறை. பக்கம் 74
5. கிளாரா ஜெட்கின், மகளிர் விடுதலை இயக்கங்கள் பக்-4 (கேடயம் வெளியீடு)

(மன ஓசை - பிப்.1990)

—o—

# தமிழ் நவீன நாடகங்களும் பெண்ணியமும்

டாக்டர். செண்பகம் ராமசாமி

மானுடம் தொடர்பான எந்தவொரு வாழ்க்கைக் கோட்பாட்டையும் திட்டவட்டமான இலக்கண விதிகளால் விளக்குவது அரிது. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து உலகளாவிய சிந்தனையாக மலர்ந்திருக்கும் பெண்ணியக் கோட்பாடும் அத்தகையதே 'மேலோட்டப் புரிவும், ஆழ்நிலையில் சிக்கலும் உடைய ஒரு கோட்பாடுதான் இதுவும்.

உயிர் வளர்ச்சியின் அடிப்படைத் தேவையான ஆண்-பெண் இணைப்பு, ஆணாகவும் பெண்ணாகவும் பிரிந்து இயங்கும் சமூகச் சூழலில், சமூக வரலாறும் பண்பாடும், காலச் சூழலுக்கேற்ப, சமூகத்தின் பல்வேறு தளங்களுக்கேற்ப, ஆணுக்கும் பெண்ணுக்கும் தகுதி வேறுபாட்டை நிர்ணயித்துவரும் வரலாற்றைத் தெளிவாக அறிந்து, இத்தகுதி வேறுபாட்டைக் களைந்து, இயற்கையின் ஆதிநிலையான இருமைச்சமம் என்ற விழிப்புணர்வை உலகெங்கும் உணர்த்த முற்படுவது பெண்ணியம் - என்னும் விளக்கத்தை இக்கட்டுரைக்காக அமைத்துக் கொள்ளலாம்.

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய நாடுகளில் இயக்க ரீதியில் உருவான இச்சிந்தனை, உலகம் முழுவதும் பரவி வருகிறது என்பதைத் தமிழ்ச் சமுதாயப் போக்கும் இன்று உணர்த்திக் கொண்டிருக்கிறது. மேரிஹேஸ், மேரிவுல்ஸ்டோன் கிராப்ட், சிமொன் திபூவா, பெட்டி ப்ரீடன், டெய்லர், ஜிலா ஐன்ஸ்டீன், ராபின் மார்கன், ஜுலியட் மிச்சல் போன்ற மேலை நாட்டுப் பெண்ணியவாதிகளையோ; பூலே, பெரியார் போன்ற இந்தியப் பெண்ணியவாதிகளையோ பற்றி எதுவும் அறியாத ஆனால் கல்வி வாய்ப்பும் பொருளாதார மேம்பாடும் சமூகப் பணிகளில் பங்கேற்பும் உள்ள பெண்கள் தாமாகவே பெண்

நிலை பற்றிச் சிந்திக்கும் சூழலுடையதாகச் சமூகம் உருவாகி வருகிறது.

பெண்நிலை வாதம் ஓர் அறிவார்த்தக் கோட்பாடு என்ற அங்கீகாரம் பெற்று விட்டதால் பல நிறுவனங்களும் இச்சிந்தனையோடு இயைவதன் வழியே உலகத்தோடு ஒட்ட ஒழுகும் அறிவமைப்புக்களாகச் செயல்பட முன் வருகின்றன. இக் கொள்கைப் பரப்பல் அரசுக்கு ஒரு கடமையாக ஆகியிருக்கிறது. கல்விச் சிந்தனையில் இது இணைகிறது. சமூகவியல் என்றொரு கல்வித்துறையின் தகுதியை உணர்ந்த செய்திப் பத்திரிகைகளும், பிற வார, மாத இதழ்களும், சமூக அக்கறையின் வெளிப்பாடாக வரதட்சணைச் சாவு, பெண் சிசு கொலை, கற்பழிப்பு, ஆதிவாசிப் பெண்களின் வாழ்வுச் சேதம் போன்றவற்றை விளக்கப்படங்களுடன் நீண்ட கட்டுரைகளாகவும், பேட்டிகளாகவும், கதைகளாகவும் வெளியிட்டு வருகின்றன. பெண்ணியம் தொடர்பான விழிப்புணர்ச்சி ஏனைய ஊடகங்களான திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, இவற்றிலும் பிரதிபலிக்கிறது. இச்சூழலில், பெண்ணியக் கருத்துக்களைத் தமிழின் நவீன நாடகம் எந்த அளவில் உள்வாங்கியிருக்கிறது என்பது கேள்வி.

தமிழில் நவீன நாடகம் என்பது எது? நாடகமே தமிழில் இல்லை எனவும், தெருக்கூத்தின் தொல்மரபாக நாடகம் இருந்தது எனவும் விவாதம் தொடரும் இன்றைய தமிழ்க்கல்வி வட்டத்தில் நவீன நாடகம், ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு கலையாயிருக்கிறது. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து எழுத்திலக்கியமாகக் கிடைத்துவரும் நாடக மரபின் தொடர்ச்சியில், மரபு மாற்றமாக நவீன நாடகங்கள் அமைகின்றன. இவை வெளிநாட்டார் விளக்கியிருக்கும் பல்வேறு இலக்கிய, உளவியல், அறிவியல் கோட்பாடுகளையும், ஓரளவு இந்தியத் தொல்மரபையும் இணைத்துக் கொண்டு நாடகாசிரியரின், இயக்குநரின் கற்பனைத் திறனுக்கேற்ற பல்வேறு நாடக உத்திகளையும் கருத்து நிலைகளையும் கொண்டு விளங்குகின்றன.

நாடகம் கருத்து வெளிப்பாட்டின் பல்வேறு நிலைகளையும் பல்வேறு தொனிகளிலும் பார்வையாளர்களுடன் நேரடியாக வெளிப்படுத்தும் பிரச்சார ஆற்றல் கொண்டது. தொனி பெரும்பாலும் தோல்வியடையாத கலைவடிவம் நடிக்கப்படும் நாடகமாகும். ஆயின் நடிக்கப்படும் நாடகத்தை ஆய்வு செய்வதற்கு, நாடகத்தைப் 'பலமுறை பார்த்தல்' அனுபவத்துடன்

ஒலி ஒளி நாடாப்பதிவுகளின் துணையும் தேவை என்பதால், அச்சில் வெளிவந்த நாடகங்கள் மட்டும் கட்டுரைக்காகத் தெரிவு செய்யப்படுகின்றன. சிறுகதை, புதினப் படைப்பாளர்கள் அளவு, நவீன நாடகாசிரியரின் எண்ணிக்கை இல்லை என்பது ஒரு கணிப்பு. கதை இலக்கியம் மக்களைக் கவர்வது அளவு, நாடகத்தின் எழுத்து வடிவால் மக்களைப் பிடிக்க முடிவதில்லை. இலக்கிய அம்சம் மிகுந்ததாகக் கருதப்படும் நாடகங்களும் (மனோன்மணியம், சாகுந்தலம், ராஜராஜசோழன்) பாடப் புத்தகங்களாகவே கௌரவம் பெறுகின்றன. இந்தப் பின்னணியில் தமிழில் நாடகங்கள் குறைவாக இருப்பதும், வெகுஜன ரசனையிலிருந்து விலகும் நவீன நாடகங்கள், அதிலும் அச்சில் வந்தவை இன்னும் குறைவாக இருப்பதும் கருத்தில் கொள்ளத் தக்கவை.

இக்கட்டுரையில், பெண்களின் வாழ்க்கைச் சிக்கலைக்கூறும் தமிழ் நாடகங்களும், தமிழகச் சூழலுக்கேற்ப உருவான தழுவல் நாடகங்களும் மட்டும் விளக்கப்படுகின்றன. மொழியாக்க நாடகங்கள் இடம் பெறவில்லை. தெரிவு செய்யப்பட்ட நவீன நாடகங்கள் அனைத்தும் நிகழ்கலை உத்திகளுடன் எழுதப் பட்டிருப்பதால் இவை நடிக்கப்படுவதற்காகவே எழுதப்பட்டிருக் கின்றன என்பது தெளிவு. இந்நாடகங்களின் கருத்துநிலை களில் பெண்ணிய சிந்தனை மிகுதியுமில்லை என்பது கட்டுரை யின் கருதுகோள்.

இந்த நூற்றாண்டுத் தமிழ் நாடக வளர்ச்சியின் தொடக்கத் திலேயே பெண்ணிய சிந்தனையின் முகிழ்ப்பைக் காண முடிகிறது. ஜான் லாக், மான்டெங்கு, வால்டேர், ஹியூம், மெக்காலே போன்ற மேலைநாட்டு அறிஞர்கள், 'பெண்நிலை' பற்றித் தொடங்கிய சிந்தனை உலகெங்கும் பரவியது இதற் கான காரணமாகலாம். சமூகத்தின் இறுக்கமான பல கட்டுக் களின் நெகிழ்ச்சியை எழுத்தில் வடித்தவர்களாகிய புதுமைப் பித்தன், கு. பா. ரா., பாரதி, பாரதிதாசன் ஆகியோர் பெண் ணுரிமை பற்றிச்சிந்தித்தவர்கள். சிறுகதையையும் கவிதை யையும் எழுத்துத் தளங்களாகக் கொண்டிருந்த இவர்களை நாடகாசிரியர்கள் என்று கூறமுடியாது போனாலும், நாடக ஆசையின் காரணமாக இவர்கள் எழுதிய மிகச்சில நாடகங் களையே இன்றைய நாடக மரபின் தொடக்கமாகக் கொள்ள நேர்கிறது.

''பெண்களுக்கு சுய பிரக்ஞை அவசியம் வேண்டும்'' (அகலியை) என்ற கு. பா. ராவின் குரலே இன்றைய பெண் நிலைவாதச் சிந்தனைவாதிகளின் பெருங்குரலாக ஒலிக்கிறது. ''இல்லற மகிழ்வுக்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் பரஸ்பர மரியாதை மிகவும் அவசியம்'' என்றும், ''குடும்பத்திற்குள் ஆண் பெண் இருவருடைய மனப்பான்மையும் தனியாக வளர்ந்து ஆராய்ச்சியினால் ஒன்றுபட வேண்டும். அப்பொழுது தான் பரஸ்பர மரியாதை, ஹிதம் இவைகள் ஏற்படும்'' என்றும் கூறும் கு.பா. ராவின் கருத்துக்களில் காணப்படும் சமத்துவம், தனித்துவம், ஆராய்ச்சிப் போக்கு, ஹிதம் இவையெல்லாம் குடும்ப வாழ்வில் புரிபடப்படும் பொழுது, குடும்ப நிறுவனங் களுக்குள் எழும் பல பிரச்சினைகளும் சீராக வழியுண்டு. கு. பா. ராவின் மற்றொரு நாடகத்தில் (பெண் இருதயம்) 'தாய் கோட்பாடு' உடைகிறது. காதலனே தனக்குத் தேவை யானவன் என்று சகுந்தலை பகிரங்கமாகப் பேசுகிறாள். தாய் மகள், மோதல் உளவியல் அடிப்படையில் எழுகிறது. புதுமைப் பித்தன் நாடகங்களில் (வாக்கும் வக்கும்) இந்தப் பிரச்சாரத் தொனியில்லை. ஆனால் பெண்ணை நாடாள வைத்தல், பெண்ணுக்கு ஆண் பணிகள் செய்தல் என்பதான மரபு விலகல் சிந்தனைகளை வெளிப்படுத்துகிறார். பாரதியின் வள்ளி, கந்தன் கயிறுகள் உல்லாசமாகக் காற்று வெளியில் சல்லாபம் செய்கின்றன. ஆண் பெண் உறவைக் கொச்சையானது (Taboo) என்பதாக மக்கள் பாவனை செய்து கொண்டிருந்த காலத்தில் காதல் இயல்பானது என்று பாரதி, கயிறுகளின் தழுவல், காதல்மொழி இவற்றால் நிறுவுகிறார். பாரதிதாசனின் வீரத்தாய் நாடகம், பெண்ணைத் தாழ்வாக மதிக்கும் சமூ மதிப்பீட்டுக்கும், உயர்வாக மதிக்கும் சமூக மதிப்பீட்டுக்கு நடைபெறும் விவாதத்துடனேயே தொடங்குகிறது. மாறுவேட புனைந்து நாட்டையே காப்பாற்றிய விஜயராணியைப் பார்த்து பிறர்—

''அன்னையும் ஆசானும் ஆருயிரைக் காப்பானும்
என்னும்படி அமைந்தீர்! இப்படியே பெண்ணுலகம்
ஆகுநாள் எந்நாளோ? அந்நாளே துன்பமெலாம்
போகுநாள் இன்பப் புதிய நாள்''

என்று பாராட்டும் பொழுது, ''பெண்ணுயர்வும்'' ''பெண் திறனும்''பேசுவது பாரதிதாசனின் குறிக்கோள் என்பது புலப்ப கிறது. பெண்ணின் 'மீட்பு' சிந்திக்கப்பட்டது. கற்புக் கோ

பாட்டை ஒரு வலுவான கோடாரியாகக் கொண்டு, இந்திய நாடெங்கும் பெண்ணைக் காலம் காலமாக வதைத்துக் கொண்டிருக்கும்பண்பாட்டுச் சீரழிவு உணர்த்தப்பட்டது. இதன் தொடர்ச்சியை விதவை மணம், பொருந்தா மணப் புறக்கணிப்பு, கலப்பு மணம் ஆகிய கருத்து விரிவுகளாக அண்ணாவின் நாடகங்களில் காணமுடிகிறது. சோ, பரத்தமையின் அவலம் உணர்த்தினார். அறந்தை நாராயணனின் ''மூர்மார்க்கெட்'' இந்த வரிசையில் குறிப்பிடத்தக்கது. 1975-ல் வெளிவந்த இந்நாடகத்தில் ஆதரவற்ற ஏழை சரோஜா, சமூக அமைப்பின் இழிவைச் சரியாகப் புரிந்து கொண்ட மனவளர்ச்சியுடன், தன்னையொத்த ஏழை ஆண்களிடையே விபச்சாரத் தொழிலை, மனநெருடலின்றி நட்பு ரீதியாக நடத்திக் கொண்டு, ஏழ்மைத் துயரிலிருந்து மீளாமல் வாழ்வது காட்டப்படுகிறது. பரத்தையர் என்ற சமூக உருவாக்கக் கேடும், பரத்தையரின் மன அவலங்களும் இலக்கியப் பொருளாகத் தொடங்கிய காலத்தில், ஆண்களுக்கு அறிவுரை கூறுபவளாக, ஆறுதல் கூறுபவளாக, மேட்டுக் குடியினரை எதிர்க்கும் துணிவுடையவளாக சரோஜா உருவாக்கப்பட்டிருக்கிறாள்.

சமூக அளவில் மாற்றங்கள் செய்ய நினைத்த இந்நாடக மரபினர்க்கு குடும்பம் என்ற நிறுவனத்தின் இறுக்கம் பற்றி எந்த ஐயமுமில்லை. சமூகத்தின் இந்த அடிப்படை அலகு வலுவாகவும் அமைதியாகவும் விளங்க வேண்டும் என்ற அதி உன்னதக் கனவு இவர்களுக்கு இருந்தது. திருமணமே வாழ்க்கைப்பயன் என்பதை, அதன் சடங்குகளோடு ஒத்துக்கொண்டிருந்தால், திருமணம் இல்லாத பெண்களுக்கான இவர்களின் பரிவே, விதவைமணம், குழந்தை மணஎதிர்ப்பு, பொருந்தாமண எதிர்ப்பு, கலப்புமண ஆதரவு, பரத்தமை எதிர்ப்பு - என்பதான விரிவுகளாக அமைந்தது. மேலை நாடுகளின் ஆரம்பகால எழுத்தாளர்களைப் போலவே, பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவே இவர்கள் எழுதினார்கள். பெண்களின் 'அறிவு நுட்பம்' பற்றிய பார்வை இவர்களிடம் அதிகம் இல்லை.

தந்தைவழிச் சமூகத்தின் ஆணாதிக்க மனப்பான்மை, தனிச் சொத்துடமை, பெண்ணைப் பொருளாகப் பார்த்தல், ஒருதார மணமுறை, கற்பு மேம்பாடு இவையே பெண்ணடிமைத் தனத்திற்குக் காரணங்கள் என்பதான, மார்க்ஸ், ஏங்கல்ஸ் போன்றோர் கருத்துக்கள் இந்நாடக மரபில் இல்லை. சமூகத்தில் ஓர் ஆணுக்குள்ள சகல உரிமைகளும் பெண்ணுக்கும் வேண்டும், கர்ப்பப்பை கூட அவள் உதறக்கூடிய ஒன்றுதான் என்பதான

பெரியாரின் பெண்நிலைக் கோட்பாடுகளும் நாடகத்துறையி நுழையவில்லை. பெண் எந்தக் காலத்திலும் ஆணின் பயன்ப பொருள், அவளை ஒரு புராண மரபாக்கி (Myth) விருப்ப போல் வளைத்து நெகிழ்த்து வந்தது ஆணின் (சிமொன் பூவா) என்ற வகையிலான பெண்நிலைவாத விழிப்புணர்வு வராத காலம் அது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணி கொண்ட நவீன நா கங்கள் உருவானபின் பெண்நிலைவாதச் சிந்தனை புதி திரும்பம் பெறுகிறது. வங்காள நாடக வளர்ச்சி, டெல் நாடகப்பள்ளி, கேரள நாடகப்பள்ளி இவற்றின் தொடர்பா தமிழ்நாட்டில் நவீன நாடக அலை உருவாகியது. ஜெர்மன பிரான்சு, ரசியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் நாட முயற்சிகளைத் தெரிந்து கொண்ட அளவில், இங்கும் சோதனை நாடக முயற்சி உருவானது. புதிய நாடக மரபில் சமூகத்தை விமர்சிப்பது என்ற நோக்கில், அங்கதப் போக்கிலும் அவல போக்கிலும் நவீன நாடகங்கள் உருவாயின.

தமிழ்நாட்டில், தொடக்கநிலை நாடகாசிரியர்கள் என் அறிமுகமாகி உள்ள ராமானுஜம், ந. முத்துசாமி, ஞா மு. ராமசாமி, இந்திராபார்த்தசாரதி இவர்களுள், இந்தி பார்த்தசாரதியின் நாடகங்களே மிகுதியும் அச்சில் வந்துள்ள ஏனையோர் நாடக உருவாக்கங்களிலேயே அதிக கவன செலுத்துவதால், இவர்களிடமிருந்து தமிழுக்குப் பங்களிப்ப நாடகங்கள் அதிகம் பதிவாகவில்லை.

இந்திரா பார்த்தசாரதி, தன் நாடகங்களில் டெல்லியி படித்த மேல் மத்தியக் குடும்பச் சூழல்களின் நாகரிகப் பே கினை உணர்த்துகிறார்.

பெண் மேட்டுக்குடி அதிகாரிகளுக்கு வைப்பாக விளா கிறாள். (போர்வை போர்த்திய உடல்கள்) உலகளா இச் சமூகப் பழக்கம் பற்றிக் கூறும் சிமொன் தி பூவா, ' கலைத்திறத்தையும் அறிவாற்றலையும் வளர்த்துக் கொள்வ மூலம் கணிகை ஒரு தனித்தன்மை கொள்கிறாள். ஆணு இணையான திறம் கொள்கிறாள்' என்று கூறும் கருத்து இங் நினைக்கத்தக்கது. நாடகத்தலைவி யாருக்கும் அஞ்சாம தர்க்க ரீதியான விவாதங்கள் பேசி நிற்கும் துணிவுடையவள உருப்பெற்றிருக்கிறாள். ஆயின் இந்த வகை வாழ்க்கை நொந்து கொள்ளாது, ஊர்ப்பிரமுகர்களின் அந்தரங்கங்க

அறிந்த அகந்தை கூட இவளிடம் வெளிப்படுகிறது. பாதிப்பும் சாதனையுமான ஒரு சமநிலை தெரிகிறது. ஆயின் சமூக நன்மை ஒரு கேள்விக்குறியாகி விடுகிறது.

அப்பாவுடன் வாழும் ஒரு பெண், தனிமையின் தாபத்தில் ஒருவரை மணஉறவுக்கு அழைக்கிறாள் (மழை). அப்பாவும் மகளும் ஆணும் பெண்ணுமாக மோதுகின்றனர். உறவு இலகுவாக அமையாமல் சிக்கலாகிறது. தந்தைவழிச் சமூக மரபில், தந்தையை மதித்து வாழத் தொடங்கும் பெண், காலப் போக்கில் இம்மரபை உடைத்துத் தனித்துவ (Subjectivity) சிந்தனை கொள்கிறாள். இந்த நூற்றாண்டுப் பெண்களுக்கு உள்ள ''தந்தையை மதித்தல் - மாறான சுயசிந்தனை கொள்தல்'' என்ற மனப்போராட்டமே இந்நாடகத்தில் விளக்கம் பெறுகிறது. 1907-ல் சின்ஞ் (Synge) எழுதிய நாடகத்தில் வரும் பெகீன்மைப் போன்ற படைப்பு இது.

கணவனின் புறக்கணிப்பால் ஆண்களை நாடிச் செல்லும் தாயை, புறக்கணிக்கப்பட்ட மகள் வெறுக்கிறாள் (கால இயந்திரங்கள்) மகளும், மணத்திற்கு முன்பு ஆடவனுடன் உறவு கொள்கிறாள். இத்தொடர்புகள் பற்றித் தாயும் மகளும் வெளிப்படையாக மோதிக் கொள்கின்றனர். தாய் மகள் மோதல், பிராய்டியப் போக்கில் நாடகப் பொருளாகிறது. இந்திரா பார்த்தசாரதியின் நாடகங்களில் தாராளப் பாலுணர்வு கருத்திடுகிறது. அதிகாரிகளின் வைப்பாக விளங்குபவள், சூழலால் இந்நிலைக்குத் தள்ளப்படுகிறாள். என்றாலும் இதிலிருந்து விடுபடும் முயற்சியே இல்லாதிருப்பது அவளுக்கும் இவ்வகையான சமூகத் தகுதி வேண்டியிருப்பது போலாகிறது. 'மழை' நாடகத்தில் தந்தைக்குத் துணையாக வாழ்வது என்ற முடிவுடன் வாழ்பவள் சுயத்தின் விழிப்பில், தனிமை உணர்வு துன்புறுத்த, தந்தைக்கும் தனக்கும் உள்ள பிடிப்பு எலக்ட்ரா பிறழ்வு நிலையோ என ஐயமுறுகிறாள். தந்தை மகள் உறவு குரூரமாகப் போய், நாடகம் தந்தையின் மரணத்துடனும், பெண் எனக்கொரு ஆண்துணை வேண்டும் என்று பகிரங்கமாக முறையிடுவதுடனும் முடிவை நோக்கி நகர்கிறது.

குடும்ப உடைவு, உறவுகளின் செயற்கைப் பிடிப்பு, இவையெல்லாம் கூறும் 'கால இயந்திரங்கள்' நாடகம், முறையான பெண்ணியத்துக்கு வழிவகுக்காமல் அனைவரையும் சாகடித்து, ஓர் இன்மையாக முடிகிறது.

'கொங்கைத் தீ' நாடகத் தொடக்கத்தில் 'இந்தியச் சமுதாய வாழ்வில் பெண்ணால், சீதையாகவோ, பாஞ்சாலியாகவோ, கண்ணகியாகவோ, மாதவியாகவோ இருப்பதினின்றும் தப்பிக்க முடியாது' என்று இந்திரா பார்த்தசாரதி நம்பிக்கை யின்மையையேவெளிப்படுத்துகிறார். மாறாக, ராமானுஜத்திடம் தன்னம்பிக்கை வளர்ப்பு தெரிகிறது. பூமிப் பரப்பின் புழுதியை எழுப்பிய போர்கள் அத்தனையிலும் பெண்களைப் பாலியல் வதைக்கு ஆளாக்குதல் வெற்றிப்படையின் ஒரு நியதியாகும் அவலம், ராமானுஜத்தின் டிராய் நகரப் பெண்கள் (The Trojen Women) நாடகத்தின் தமிழ்த் தழுவலாகிய வெறியாட்டத்தில் வெளிப்படுகிறது. போரென்றாலே பொன்னும் பெண்ணும் சூறையாடப்படல் என்பதான குரூர மரபைச் சந்திக்கும் பெருந் தேவி, தன் குடும்பத்துப் பெண்கள் அனைவரும் பகைவரின் பாலுறவு வன்முறைக்குப் பலியாகும் சூழலில், குடும்பத்தின் ஒரே வாரிசான பேரக்குழந்தையைப் பகைவர் வேல் கொண்டு குத்தும் சூழலில்—

''பேடி மகன்கள் நீங்கள்! பெரியதொரு கோழை நீங்கள்
வாருங்கள் பெண்டுகளே!
வரும் விதியை எதிர்கொள்வோம்
வலுவேதும் உள்ளவரை
விதியையும் எதிர்த்து நிற்போம்''

என்கிறாள். ஐ. நா. உள்ளிட்ட உலக அமைப்புகளுள் எதனாலும் மாற்ற முடியாத, போர்க்காலப் பெண்கள் வதையி லிருந்து புறப்படும் பெருந்தேவியின் இந்த நம்பிக்கைக்குரல், யூரிபிடிசின் ஹெகூபாவின் குரலைவிடவும் வலுவானது.

மு. ராமசாமியின் துர்க்கிர அவலமும் (சோபாக்ளீசின் ஆன் டிகனி - தழுவல்) பெண்ணிய நோக்கில் குறிப்பிடத்தக்கது. மண்மகள் அறியா வண்ணச்சீறடியோடு கூண்டுப் பெண்ணாய் வாழ்ந்த கண்ணகி, ஒரு பேரரசனையே எதிர்க்கத் துணிந்த மனவலிமை பெற்றது பற்றித் தமிழ் இலக்கியம் கூறும். இதே போல் சோபாக்ளீசின் ஆன்டிகனி, பேரரசனையே எதிர்த்துப் போராடுகிறாள். இக்கதை தமிழ் வடிவம் பெறும்பொழுது யாமினி (ஆன்டிகனி) வழியே, மென்மைக்குள் புதைந்து கிடக்கும் வன்மையின் எழுச்சி தெரிகிறது. பெருந்தேவியும் யாமினியும் சமூகப் புரட்சிக்காக அரசை எதிர்க்கவில்லை. ஆயின் சமூகப் புரட்சிக்காகவும் எழக்கூடிய பெண்ணின் அடை யாளங்கள் இவர்கள். தந்தைவழிச் சமூகத்தின் ஆணாதிக்க

மனோபாவத்தில் பெண்ணை மென்மையாக உருவாக்கி வைத்தல் இங்கே உடைகிறது. வன்மையும் மென்மையும் சமூகம் ஆக்கியவையே தவிர, ஆண் பெண்களின் இயல்புணர்ச்சி களல்ல என்பது உணர்த்தப்படுகிறது. ''நாம் வேண்டும் பெண் உரிமை என்பது என்னவெனில், ஆணைப்போலவே பெண்ணுக்கும் வீரம், வன்மை, கோபம், ஆளும்திறன் உண் டென்பதை ஆண்மக்கள் ஒப்புக்கொள்ளவேண்டும்'' என்ற பெரியாரின் கூற்று இங்கே நினைக்கத்தக்கது.

ஞாநியின் 'பலூனில்' விமர்சனத்துக்குள்ளாவது நீதித்துறை தான் என்றாலும், இருமைச் சமக்கோட்பாடு, உஷா என்ற பெண் பாத்திர வடிவில் பலவிடங்களில் பேசப்படுகிறது. சமூக அக்கறையுடன் அநீதிக்கு எதிராக ஊர்வலம் போவதிலும், ஆணுக்கு இணையாகச் சிறைதண்டனை பெறுவதிலும் உஷா சமநிலை எடுக்கிறாள், சமநிலை கேட்கிறாள். ஞாநியின் நாடகத்தில் குடும்பக் கூட்டின் எல்லை தாண்டி வந்து சமூகப் பிரச்சினையில் பங்கு கொள்ளும் உஷா 'பெண்ணுக்கும் மூளை இருக்கிறது' என்பதை உணர்த்துகிறாள்.

அம்பையின் நாடகத்தில் (பயங்கள்) ஆணுக்கும் பெண் ணுக்கும் பயங்கள் பொதுவாக இருப்பதாகச் சொல்லப்படுவது வித்தியாசமானது. இந்த நாடகத்தில் அம்பை, ஓர் ஆணின் பாதுகாப்பிலிருந்து பெண்ணை விடுவிக்க நினைக்கவில்லை, இந்தப் பயம் யதார்த்தமானது என்றாலும் பெண்ணிய நோக்கில் கேள்விக்குரியதாகிறது. பயன்படுத்தியபின், பெண்ணை ஒதுக்கும் ஆடவனுக்காகக் 'கற்புநிலை' காக்காது, மற்றொரு தேடலுக்காகப் போகும் நம்பிக்கை நன்றாக அமைந் திருக்கிறது. மரபுமீறல், மென்மை, மாமியாரிடம் எழும் மரபுப் பொறாமை எல்லாம் கலந்தவளாக அஞ்சலி இருக்கிறாள். தாலி, குடும்ப இறுக்கம், உடைமைப் பண்பு இவையெல்லாம் கூட இந்நாடகத்தில் இருக்கின்றன. ஆயின் பெண்ணுக்குப் பாலுணர்வை விடவும் நட்பு மேலானது என்பதாக ஒரு கருத் தமைப்பைப் பெண்ணிய நோக்கில் இவரால் வைக்க முடிந் திருக்கிறது. கற்புநிலை உடைவதும், ஆணும் பெண்ணும் பரஸ்பர நட்புக் கொள்வதும், இந்நாடகத்தில் கவனிக்கத் தக்கவை. தீவிரப் பெண்ணிய வாதிகளின் 'குழந்தை வேண் டாத சிந்தனை'யும் இந்நாடகக் கருத்துகளில் ஒன்றாகிறது.

ஜெயந்தனின் 'நிறைகாப்பு' திருமணமான ஒருவனும் ஒருத்தியும் தனியிடத்தில் தங்க நேர்ந்தபொழுது ஒருவரை

யொருவர் அவாவுவதும், ஆனால் ஆசைப்படாமல் இருப்பது போல் நடிப்பதும், பிரியும் பொழுது தனிமனித ஏமாற்றத்துடன், ஆயின் சமூக மரபைக் காத்த நிறைவுடனும் செல்வது என்பதான கதைப் பொருளுடையது. மனச்சாட்சியை வெளிக்கொணர முயலும் விசாரணையில் ஆண் 'ஆமாம்! நான் இவளை விரும்புகிறேன்' என்கிறான். பெண்ணோ 'பூசி மெழுகுகிறாள்' உண்டு - இல்லை என்பதாகக் குழப்பம் காட்டுகிறாள். காலம் காலமாகக் கட்டப்பட்டிருக்கும் மரபுத் தளையிலிருந்து மீறி, அந்தத் தாலி கட்டியுள்ள பெண்ணால் உண்மை சொல்ல முடியவில்லை. நடிப்பில் பெண், ஆணை விஞ்சுவதும், மனத்தின் ஆழத்தை மேலும் தோண்டிக் கொள்வதற்குமான சமூகக் காரணம் இந்த மரபின் அழுத்தமே என்பதை 'நிறைகாப்பு' விளங்குகிறது. குடும்பமாகிய நிறுவனத்தை இந்நாடகம் கேள்விக்குட்படுத்துகிறது.

பாலியல் வன்முறையின் அவலம் காட்டும் பிரபஞ்சனின் நாடகம் (முட்டை) அதிகார வர்க்கத்தின் அடக்குமுறையைப் பிரச்சாரக் கலப்பின்றி கலைவடிவில் தருகிறது. காவல் நிலையங்களில் பாலியல் வன்முறை பொதுவான சமூக நியதி போல் ஆகிக் கிடப்பதை 'முட்டை' காட்டுகிறது. ஆணாதிக்கமும் அதிகார வெறியும் இணையும் பொழுதில் பெண் ஓர் எறும்பைப் போல் நசுக்கப்படுகிறாள். பெண்களின் சிந்தனை, சமூகப் பங்களிப்பு இவை, ''பொம்புள''யின் அறிவின்மையாகக் கருதப்படும் சமூக மதிப்பீடுகள், இந்நாடகத்தில் பெண்ணிய நோக்கில் இணைக்கப்படுகின்றன. பிரபஞ்சனின் 'அகலிகை', அகம் இல்லா ஒருத்தியொடு அறம் நடத்தும் கௌதமர் போன்றோரைச் சாடுகிறது. மனம் பொருந்தா மணத்தில் ஏற்படும் சேதத்தால் குறுகுறுப்பற்ற மற்றொரு தேடலுக்கு அகலிகை முனைவது நாடகத்தில் நியாயப்படுத்தப்படுகிறது. ஆயின் 'எது செய்தபின் மனம் சந்தோஷிக்கிறதோ, அதுவே அறம்' என்று ராமன் கூறும் நீதி அகலிகைக்குப் பொருந்துகிறது. ஆயின் பொதுவிதியாக்கும் பொழுது?

ஜென்னிமாவின் 'பிணங்கள்' நாடகத்தில், அரசியல் வன்முறையால் ஆதரவற்றுப் போகும் ஒரு பெண்ணின் அவலச் சீறல் குறிப்பிடத்தக்கது.

பரிமாறிக் கொள்ள எதுவுமேயற்ற உலகைப் பற்றிய நிஜந்தனின் நாடகங்களில் இருமைச்சமக் கோட்பாடு, ஆண் குரல், பெண்குரல் வழியே வெளிப்படுகிறது எனலாம்.

அலுவலகப் பெண்ணுக்கு அதிகாரியால் ஏற்படும் சேதம் (ஒரு நடுக்கமான மீட்சிக்கு) ஓரிடத்தில் நயமாக வெளிப் படுகிறது.

குழந்தைப் பேற்றின் துயரத்தை ஒரு தெய்வீகம் போல் ஆக்கித் தாய்மைக்கு மகுடம் சூட்டும் சமூகப் பொய்மை பற்றிச் சிந்திக்க வைக்கிறது ஞானராஜசேகரனின் 'வயிறு.' கணவன் இருந்தாலும் இறந்தாலும் புறக்கணித்துப் போனாலும் எந்தச் சூழலிலும், குழந்தையென்னும் பெரும் பொறுப்பைத் தோளில் சுமந்திருக்கும் பெண்ணினம் பற்றிய சிந்தனையை இது முன் வைக்கிறது. ஏழைத்தாய்களின் உணவிட முடியாத இயலாமை அவலம் காட்டுவது வயிறு. கருப்பை நீக்கத்தால் பிள்ளைப்பேற்றிலிருந்து விடுதலை பெற நினைக்கும் பெண் ணியம் இச்சூழலில் அறிவுடையதாகிறது. 'பாடலிபுத்திரம்' பெண் ஒரு போகப் பொருள் என்பதை உணர்த்துவதோடு, அடிமைச் சமூகத்தின் அடிமைகளாகவும் பெண்கள் விளங்குவதை எடுத்துக் காட்டுகிறது. ''காமம் ஆணுக்குப் பெண்ணைச் சொத்தாக ஆக்கிவிட்டது. தனது சொத்தை வேறு எவனாவது சுரண்டி விடுவானோ என்று கண்காணிப்பதிலேயே ஒவ்வொரு வனும் கருத்தாய் இருக்கிறான். காமத்தில் மட்டும் எவனுக்கும் எவள் பேரிலும் நம்பிக்கையில்லை. எவன் பேரிலும் எவளுக்கும் நம்பிக்கையில்லை. கண்காணிப்பு ஒன்றே நடக்கலாகுது'' என்று அங்கத நடையில் ஞானராஜசேகரன் கிருபாலாரின் உடைமைப் பண்பையும், கற்பு நிலையையும் கேள்விக்குள்ளாக்கு கிறார்.

அரிச்சந்திரனையே குறிக்கோள் மனிதனாகப் புகழும் இந்திய மரபில் 'சந்திரமதி' போன்ற பெண்களின் தியாகமும் சத்திய சோதனையும் மறைந்து போயிருப்பது பற்றிய கே. ஏ. குணசேகரனின் நாடகம் (சத்திய சோதனை) பெண்ணிய நோக்கமுடையது. அவரின் 'பேயோட்டம்', 'கிராமப்புறப் பெண்களின் மனநிலையை உளவியல் ரீதியில் விளக்க முயல் கிறது. நவீன நாடகங்கள் தொடாத ஒரு புதிய பிரச்சினையைத் தொடுகிறது 'பேயோட்டம்'.

உலகம் முழுவதுமான பெண்ணிய சிந்தனை வளர்ச்சியில் ஈழத்து எழுத்தாளர்கள் பங்கேற்கின்றனர். ஈழத்துத் தமிழரும், தமிழகத் தமிழரும் பண்பாட்டு ரீதியில் ஒத்திருக்கும் சூழலில், ஈழத்து நவீன நாடகங்கள் காட்டும் பிரச்சினைகள் பொதுவான தமிழ்ப் பெண்களின் பிரச்சினைகளாகவே விளங்குகின்றன.

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'மாதொரு பாகம்' 'தாயுமாய் நாயுமானார்' நாடகங்கள் பெண்நிலை வாதத்தினைக் கருவாகக் கொண்டவை என்றே குறிப்பிடப்படுகின்றன.

''நாயெண்டால் பெட்டைக்கு மதிப்பில்லை... நாயிலும் அல்சேஷன் போல நல்ல இனம் என்றால் பெட்டைக்கு மதிப்பு, ஏனெண்டால் யாவாரம் பெருகும்'' என்ற கருத்தினைப் பெண் சிசுகொலை, பரத்தமை இவற்றுடன் ஒப்பிட முடிகிறது.

''பெண்ணைப் பற்றிய கனகேள்வியளுக்கு மறுமொழி, இந்தச் சமூகத்தில் மட்டுமல்ல, வேறு சமூகத்தினாலும் கிடைக்குமோ தெரியேல்ல... பொம்பிளையள் இனியாவது குடும்பத்திலை, சமூகத்திலை உங்கடை உண்மையானநிலையை அறிஞ்சு கொள்ள முயற்சி செய்யுங்கோ'' என்று அப்பட்டமான பிரச்சாரம் செய்கிறார் குழந்தை ம. சண்முகலிங்கம்.

மகாகவியின் 'ஒரு புதிய வீடு' குடும்ப நிறுவன மரபில் பெண்ணுக்கு ஏற்படும் சிக்கலை மையமிட்டதாக அமைகிறது. இறந்ததாக நம்பப்பட்ட கணவன் திரும்பும்பொழுது, இரண்டாம் கணவனோடு வாழ்ந்துகொண்டிருக்கும் பெண்ணுக்கு ஏற்படும் திகைப்பு, சமூகத்துக்கே ஒரு கேள்விக்குறியாகிறது.

திருமணம், குழந்தை, வசதியான வாழ்வு என்ற எதிர் பார்ப்புக்கள் மட்டுமுள்ள ஒரு சராசரிப்பெண், சமூக அநீதிகளை எதிர்க்கும் புரட்சிக்கு மாருவதாக ஓர் உருமாற்றம் செய்கிறது நா.சுந்தரலிங்கத்தின் விழிப்பு' நாடகம். பெண்ணடிமை பற்றிய சிந்தனைகளை இந்நாடகங்கள் தூக்கலாகவே தருகின்றன.

இவையெல்லாம் தமிழின் நவீன நாடகங்கள் பெண்நிலை தொடர்பாகக் கூறும் கருத்துக்களாகும். மேலை நாடுகளில் 1960களில் தொடங்கி, 1980கள் வரை இரண்டாவது அலை யாகத் தோன்றிய பெண்ணியம், அந்நாடுகளில் பரவலாகப் பரபரப்பூட்டி, தீவிர வளர்ச்சியடைந்து இப்பொழுது ஒரு நிதானப்போக்கில் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கும் காலத்தில், தமிழ்நாட்டில் கடந்த இருபது ஆண்டுகளுக்குள்தான் 'பெண்ணியம்' என்ற சிந்தனையோடு படைப்பிலக்கியவாதிகள் எழுதி வருகின்றனர்; நவீன நாடக நிலையும் இதுதான். பெண்ணியம் பரபரப்பான நிலையில் பரவலாகப் பேசப்பட இங்கே இன்னும் காலம் இருக்கிறது. தமிழ்நாட்டில் சமூக நெருக்கமும் போதாது, மனோபாவத்திலும் அதிக வளர்ச்சி

யில்லை என்னும் பொழுது இது மெல்லத்தான் நிகழும். அதனால்தான் தமிழின் நவீன நாடகங்கள், சமூக அக்கறையுள்ள கருத்து நிலைகளைக் கொண்டிருந்தாலும் பெண்ணியம் சார்ந்த கருத்துகள் இவற்றில் மிகுதியுமில்லை. தவிரவும் தமிழின் நவீன நாடகங்கள் நவீனம் என்று அழைக்கப்படுவதற்கான பல்வேறு சோதனை முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனவே தவிர, பரவலாக மக்களைச் சென்றடையும் இலக்கைக்கொண்டவை அல்ல. உலக நாடகாசிரியர்களை அறிந்திருக்கின்ற கல்வியாளர்கள் குறிப்பிட்ட ரசனை வகைகளை அறிந்திருக்கும் அழகியல்வாதிகள், திறனாய்வு நுட்பமுடைய இலக்கியவாதிகள் ஆகியோரை அவையோராகக் கொள்ளும் இந்நாடகங்கள், ஏனைய மக்கள் தொடர்பு சாதனங்கள் எடுத்துக் கொள்ளும் வரதட்சணை, பெண் சிசுக்கொலை, பெண்ணின் பல்வேறு குடும்பத்தளைகள் போன்ற பரவலான பெரும் பிரச்சினைகளை ஒதுக்கிவிடுகின்றன. இன்றைய பெண்களின் சமூக நடமாட்டத் தகுதியால் உருவாகியுள்ள கற்பு நெகழ்ச்சியும் குடும்ப நெகிழச்சியும் நாடகங்களில் இடம்பெறுகின்றன. இவை சமூக மரபிற்கு மாறுபட்ட, ஆயின் யதார்த்தமான கருத்துக்களாகும். பெண்நிலை கூறும் நாடகங்கள், பாலியல் சுரண்டல் பாலியல் வன்முறை இவற்றைத் தொட்டுக் காட்டுகின்றனவே தவிர, சாதகமான தீர்வுகளை நோக்கி அமையவில்லை. இந்நாடகங்களில், குடும்ப நிறுவனத்தின் அழுத்தம், பெண்ணை மனைவியாகவும், தாயாகவும் நிலைநிறுத்தல் இவற்றின் பதிவு அழுத்தமாகவே இருக்கிறது. பெண்ணின் 'தளைநீக்கம்' என்பது மற்றோர் ஆடவனைத் துணை சேர்ப்பதாகவே இருக்கிறது. சில இடங்களில் பெண்ணுக்குச் சமூக மரபு ஒரு சிக்கலாகிறது. இவ்வாறு மிதவாத பெண்ணியக் கருத்துக்களையே தமிழின் நவீன நாடகங்கள் எடுத்தாள்கின்றன. மிதவாதப் பெண்ணியமே சமூகத்தில் பரவலாகப் பரவாத நிலையில், தீவிரப் பெண்ணிய வாதம் மேடையேறுவதற்கான காலம் இன்னும் வரவில்லை. மிதவாதக் கருத்துக்களையுமேகூட, இந்நாடகங்கள் மென்மையாகவே கூறுகின்றன. சேதமுற்ற பெண்களின் எழுச்சிக்கான அறைகூவல் இல்லை. பெண்ணியம் தொடர்பான புதிய கோட்பாடுகள் உருப்பெற வேண்டிய அவசியத்தை உணர்த்தவில்லை. இன்னுமே ஓர் அவலத்தொனிதான் நாடகங்களின் குரலாக இருக்கிறது.

தமிழ்ப்பெண்களின் பொதுச்சிக்கல்கள் தவிரவும், தமிழ்ச் சமூகத்தின் பலபடி நிலைகள், படிநிலைகளின் பல்வேறு

தளங்கள், தளங்களின் பணி வேறுபாடுகள் இவற்றிற்கேற்ப, வாழ்க்கை அமைப்பும் சிக்கல்களும் உருவாகியுள்ளன. முதிர் கன்னியர், குழந்தைச் சுமையுடன் ஆதரவற்ற மகளிர், பாட்டாளிப் பெண்கள் இவர்களின் சமூகநிலை பற்றிய கேள்விகள் நாடகங்களில் இல்லை. தமிழ்ப் பண்பாடு பல நூறு பிரிவுகளாகச் சிதறிக்கிடக்கிறது. தொட்டில் குழந்தைக்குத் தாலி கட்டுதல், குடும்ப ஆடவருக்குப் பொதுவான மனைவியை வரித்தல், மருமகளை மனைவியாக்கல், ஏழைப்பெண்கள் பெருந்தனக்காரரின் உடைமையாதல் - இவையெல்லாம் சடங்கு ரீதியாகவோ, அழுத்தமான மரபு ரீதியாகவோ இன்னும் தொடரும் பழக்கங்கள்; பெண்நிலை பற்றிப் பேச நிறைய இருக்கிறது. இத்தனையும் நிறைந்த ஒரு பெரும் பரப்பின் பல கருத்துக்கள் தமிழின் கதை இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. ஆயின் நவீன நாடகங்களின் கருப்பொருள், ஒரு சிறு பகுதியையே தொட்டு நிற்கிறது. தமிழ்ப்பெண்களின் பிரச்சினைகளில் சில, பெண்ணுரிமை இயக்கங்கள் சிலவற்றாலும், கல்லூரி மாணவ மாணவியராலும், சமூக சேவைக் குழுக்களாலும் ஆங்காங்கே சில நிமிட நிகழ்கலை நாடகங்களாக நடிக்கப் படுகின்றன. பிரச்சாரத் தொனி மிகுந்த இவை தவிர, நவீன நாடகாசிரியர்களிடமிருந்து பெண்நிலை வாதப் படைப்புக்கள் மிகுதியும் வரவில்லை.

தமிழ் நவீன நாடகங்களில், பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே இருக்கிறது. மேலைநாடுகளில் 1990க்கும் முன்பிருந்தே பெண்ணியம் சார்ந்த குழுக்கள், நாடக மன்றங்களை உருவாக்கி கதையாக்கம், நடிப்பு, இயக்கம் என்ற துறைகளில் ஈடுபட்டு நூற்றுக்கணக்கான நாடகங்களை நடத்தியுள்ளன. (Spider woman theatre, Circle of the witch, Omalga magic theatre, women's Experimental theatre போன்றவை) ஆயின் தமிழ் நவீன நாடகங்களில் நடித்தல் தவிர, பெண்ணிய நோக்கில் நாடகக் குழுக்களை அமைத்துக் கருத்துப் பரப்புதல் தமிழகத்தில் நிகழவில்லை. சென்னையில் உள்ள 'பூமிகா' பெண்ணிய நோக்கில் உருவான நாடகக்குழு என்று அறியப்படுகிறது. அதன் செயல்பாடுகளே அதன் திறத்தை உணர்த்தும்.

சமூக வளர்ப்பினால் பழக்கங்களும் பண்புகளும் வரையறுக்கப்படுகின்றனவே தவிர, இயற்கை நியதியில் ஆணுக்கும் பெண்ணுக்கும் மனோபாவங்களில் வேறுபாடுகள் இருக்கவே முடியாது. ஆயின் ஆண்நியதி, பெண்நியதி என்று பிரித்துப்

பார்த்துக்கொண்டிருக்கும் நம் சமூகத்தின் கலைகள் இன்னுமே இந்தப் பார்வையை ஒட்டித்தான் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பின்தங்கிய நிலை மாற, ஏனைய கலைகளுடன் இணைந்து, தமிழ் நவீன நாடகத்தின் கருத்துநிலைப் பணி பெண்ணியம் தொடர்பாக மேலும் வலுப்பெற வேண்டும்.

| நூல் | நாடகம் | ஆசிரியர் | பாதிப்பு ஏற்படக் காரணம் | பெண்ணிய நோக்கில் தடை | தீர்வு |
|---|---|---|---|---|---|
| சிறகுகள் முறியும் (1976) | பயங்கள் | அம்பை | துணை தேடல் | பாலியல் சுரண்டல் | தவறு |
| ஔரங்க சீப் (1978) | போர்வை போர்த்திய உடல்கள்* | இந்திரா பார்த்தசாரதி | சமூக ஊழல் | பாலியல் சுரண்டல் | ,, |
| ஆறு நாடகங்கள் (1979) | புதியதொரு வீடு* | மஹாகவி | துணையின்மை | ஒரு கணவ மணமுறை | ,, |
| ஆறு நாடகங்கள் (1979) | விழிப்பு | நா. சுந்தரலிங்கம் | சமூக வளர்ப்பு | சிந்தனைவளர்ச்சியால் தடை வெல்லுதல் | சரி |
| வயிறு (1980) | வயிறு | ஞானராஜசேகரன் | குழந்தைப் பொறுப்பு | ஆணாதிக்க மரபு | தவறு |
| பலூன் (1981) | பலூன் | ஞாநி | சமூக ஊழல் | சிந்தனை தடை | ,, |

| நூல் | நாடகம் | ஆசிரியர் | பாதிப்பு ஏற்படக் காரணம் | பெண்ணிய நோக்கில் தடை | தீர்வு |
|---|---|---|---|---|---|
| முட்டை (1983) | முட்டை | பிரபஞ்சன் | சமூக ஊழல் | பாலியல் வன்முறை | ,, |
| முட்டை (1983) | அகலிகை* | பிரபஞ்சன் | துணை தேடல் | ஒரு கணவ மணமுறை | சரி |
| பசி (1986) | மழை* | இந்திரா பார்த்தசாரதி | துணையின்மை | தந்தை வழி ஆதிக்கம் | தவறு |
| ,, | கால இயந்திரங்கள் | ,, | துணையின்மை | பெண் பொருளாதல் | ,, |
| துர்க்கிர அவலம் (1986) | துர்க்கிர அவலம் | மு. ராமசுவாமி செண்பகம் ராமசுவாமி | சிந்தனைத் தடை | ஆணாதிக்க மரபு | ,, |
| ஏழு நாடகங்கள் (1987) | மாதொரு பாகம்* | குழந்தை ம. சண்முகலிங்கம் | சமூக மரபு | ஆணாதிக்க மரபு | ,, |
| ,, | தாயுமாய் நாயுமானார்* | ,, | ,, | ,, | ,, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கூத்தாடிகள் (1989) | பிணங்கள் | ஜென்னிமா | அரசியல் | ,, | ,, |
| வெறியாட்டம் (1990) | வெறியாட்டம் | ராமானுஜம் | அரசியல் | பாலியல் வன்முறை | ,, |
| கணையாழி (1992 | நிறைகாப்பு* | ஜெயந்தன் | துணை தேடல் | ஒரு கணவ மணமுறை | தவறு |
| அழிதல் காணும் காலம் (1992) | ஒரு நடுக்கமான மீட்சிக்கு | நிஜந்தன் | சமூக ஊழல் | பாலியல் சுரண்டல் | ,, |
| சத்திய சோதனை | சத்திய சோதனை* | கே. ஏ. குணசேகரன் | சமூக மரபு | ஆணாதிக்க மரபு | ,, |
| ,, | பேயோட்டம்* | ,, | ,, | ,, | ,, |

[மேற்காணும் நாடகங்களில் * குறியிடப்பட்ட நாடகங்கள் மட்டுமே பெண்நிலை வாதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவானவை. ஏனைய நாடகங்களின் கருத்துப் பொருளில் பெண்நிலை வாதமும் இடம் பெறுகிறது.]

□

# பிம்பங்களின் ஊடே...

க. நாகநந்தினி

'பெண்ணியம்' என்பது பிரபலமாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தகவல் தொடர்பு சாதனங்களில் மிக வலிமை யானதும் மக்களின் கவனத்தை அதிகம் ஈர்ப்பதுமான திரைப் படங்கள் 'பெண்ணடிமைத்தனத்தை' மிகவும் எளிய கதைப் பின்னணியில், பல்வேறு ஜோடனைகளுடன், மக்கள் மனதில் கட்டமைத்துக் கொண்டிருக்கின்றன. இன்றைய ஆணாதிக்க, தந்தை வழிச் சமூகத்தை பண்பாட்டு ரீதியாக ஆண் நோக்கு (Male Gaze) என்ற சொற்றொடர் மூலம் விளக்கலாம் என் கிறார் வ. கீதா. 'ஆண் நோக்கு' என்ற சொற்றொடர் இங்கு பொருத்தமாக இருப்பதால் அதுவே கையாளப்படுகிறது. ஆண் நோக்கு என்பது குறிப்பிட்ட ஆண்களின் வக்கிரப் பார்வையோ, பெண்ணடிமைத்தனத்தையோ குறிப்பதல்ல. மாறாக, அது எப்படி நாம் பார்க்கிற விதத்தை வெளி உலகத்துடன், சமூகத் துடன், கலைகளுடன் நமக்கிருக்கும் உறவை வடிவமைக் கின்றது? பண்பாட்டுக் களத்தில் எப்படி செயல்படுகிறது? திரைப்படங்கள் மூலமாகவும், பாடல்கள் மூலமாகவும் இந்த ஆண்நோக்கு நாம் இருக்கவேண்டிய சூழலை அப்படியே ஏற்றுக் கொண்டு வாழ ஓர் ஆயுதமாக எப்படி பயன்படுத்தப் படுகிறது? என்பதை தற்போது வந்திருக்கும் திரைப்படங் களிலிருந்து காணலாம்.

இன்றைய திரைப்படங்களில் கதையம்சம் குறைவு. மாறாக பிம்பங்கள் - பிம்பங்களின் தொகுப்பாக பாடல்கள், சண்டைக்காட்சிகள் இவற்றின் ஊடே அவ்வப்போது செண்டி மெண்டுக்காகச் சேர்க்கப்படும் 'அம்மா', 'தங்கை' பற்றிய கதைகள். பிரதானப் பாத்திரங்கள் கதாநாயகனும் வில்லனும்; கனவுக் காட்சிகளுக்காக கதாநாயகி. இந்தச் சூத்திரத்திற்குள் எல்லாப் படங்களையும் அடக்கிவிடலாம்.

இந்த பிம்பங்கள் மிகவும் வன்மையான முறையில் காட்டுவதற்காக 'ஆடைக்குறைப்பு', 'வசனங்கள்', குருதி தோய்ந்த ஆயுதங்கள், ஒளி ஒலி மற்றும் காட்சிப்படுத்துதல் மூலமான பல்வேறு உத்திகள் வாயிலாக மக்கள் மனதில் நீங்காத ஒரு பிம்பத்தை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக 'பெண்' பற்றிய பிம்பத்தை அவை கட்டமைப்பதில் மிகுந்த கவனத்துடன் செயல்படுகின்றன என்று கூறலாம்.

திரைப்படங்கள் முழுவதும் 'ஆண் நோக்கு' செயல்படுவதைக் காணலாம். கதைகூறும் முறையிலிருந்து, காட்சிகளின் தொடர்ச்சி, காமிராக்களின் கோணம், பாடல், வசனம் அனைத்தும் ஆண் முதன்மையானவன், பெண் கீழானவள் என்ற பிம்பத்தின் மீதே கட்டமைக்கப்பட்டுள்ளன. இப்படங்களில் வரும் பெண் பாத்திரங்கள் சுய அறிவுடையவர்களாக ஒருபோதும் சித்தரிக்கப்படுவதே இல்லை. இந்தப் படங்கள் முழுக்க முழுக்க பெண்ணை அவளது உடல் உறுப்புக்களுக்குள் குறுக்கிவிடுகிறது. முழு உடலாகக் கூடப் பார்க்காது பாலுறுப்புக்களை மட்டுமே பிரதானப்படுத்தும் நோக்கில் பாடல் காட்சிகள் அதிகம் காட்டப்படுகின்றன. இக்காட்சிகள் இவை மட்டுமின்றி ஆண் - பெண் உறவு பற்றிய பிம்பங்களையும் அப்போது ஏற்படும் பெண்ணின் துன்ப உணர்ச்சிகளையும் வன்மையான பாலுறவுக் காட்சியாகக் காட்டுவதில் கவனம் செலுத்துகின்றன. பெண்களின் மீதான இத்தகைய பாலுறவு வன்மையை மிகவும் ஜனரஞ்சகமாக, பின்னணியில் பல துணை நடிக நடிகையர்கள் ஆடைக்குறைப்புடன் தோன்றி ஆட கதாநாயகனும் கதாநாயகியும் குளோசப்பான காட்சிகளில் இடம் பெறுகின்றனர். இத்தகைய காட்சிகள் ஆண்நோக்கு முறையில் அமைந்திருப்பது ஆண் மேலானவன் பெண் கீழானவள் என்ற பிம்பம் நிலையாக சமூகத்தில் இடம்பெற உதவுகின்றன. (அநேக திரைப்படக் காட்சிகள் இதற்கு எடுத்துக் காட்டு). இனி கதையின் வாயிலாகப் பார்த்தோமென்றால் கதாநாயகனுக்குக் கட்டாயம் ஒரு தங்கை இருப்பாள். அவள் பருவம் வந்தவுடனேயே வில்லனால் பாலியல் வன்முறைக்கு ஆளாவாள். அதற்குக் காரணம் அவள் அண்ணனுக்குத் தெரியாமல் எப்போதேனும் வில்லனுடன் வம்புக்குப் போயிருப்பாள். கெடுக்கப்படுவது என்பதற்காக தங்கை என்னும் கதாபாத்திரம் படைக்கப்படுகிறதோ? இத்தகைய கதையில், காட்சியமைப்பில் 'கற்பு' என்னும் அருபமான சூத்திரத்திற்குள் பெண்ணை அடக்கி அவளது முடிவை ஒன்று தற்கொலை அல்லது கெடுத்தவனுக்கே

திருமணம் செய்து வைத்தல், அல்லது அவனைப் பழிவாங்குதல் என்ற மூன்று முறையில் தீர்வு சொல்லப்படுகிறது. இத்தகைய பாலியல் வன்முறைக் காட்சிகள் திரைப்படங்களில் பார்க்கும் போது ‘ஆண் நோக்கு’ என்பது தனிப்பட்டவர்களின் வக்கிரப் பார்வையாக இல்லாது, லட்சம்பேர் பகிர்ந்து கொள்கின்ற ஒரு பார்வையாகிறது. பெண் உடல் என்பது மனித உயிர் என்று பார்க்கப்படாமல் ஒரு பொருளாக மான் - புலி, பால் - பூனை, மலர் - வண்டு, சித்தரிக்கப்படுவதைக் காணலாம். இக்காட்சிகள் இத்துடன் நின்றுவிடுவதில்லை. மாறாக சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை, மதிப்புகளை, நியாயப்படுத்தும் வகையில் இருப்பதைக் காண்கிறோம். பெண் மென்மையானவள், அழகானவள், இன்பம் தரக்கூடியவள், மயக்கும் சக்தியுடையவள் என்ற பிம்பங்களை மரபான இலக்கிய உவமான உருவகங்கள் மூலம் காட்சிகளை அமைக்கும் போக்கு அதிகமும் இடம் பெறுவதைக் காண்கிறோம். நகர்ப்புறத்தைவிட்டு கிராமங்களின் கதை வந்தபோது (பாரதிராஜா படங்கள்) அன்றாட வாழ்வில் நடக்கும் சடங்குகள், பழக்கவழக்கங்கள் வாயிலாக பெண் பிம்பம் ஆண்நோக்கில் கட்டமைப்பதற்கு மிகவும் எளிதாக இருந்தது. பெண் பருவமடைந்தவுடன் செய்யப்படும் சடங்கிலிருந்து அவள் தாயாகும் தகுதி பெற்று விட்டாள் - என்பதை சிம்பாலிக்கான காட்சி ஜோடனைகளுடன் குழுவினர் ஆடிப்பாடும் காட்சியுடன் காட்டத்தொடங்கி இனி திருமணம் செய்துதான் அவளது இறுதி கட்ட வாழ்க்கை என்பதை காட்சிகள், வசனங்கள் வாயிலாக விளக்குவது. அடுத்த சடங்காக திருமணம். திருமணம் - தாலி - பூ - மெட்டி என்ற அம்சங்களை மட்டுமே கொண்டு திரைப்படங்கள் எடுக்கப்படுவதைக் காண்கின்றோம். திருமணம்தான் பெண்ணுக்குப் பாதுகாப்பானது மதிப்பைத் தருவது என்ற பிம்பம் மாறி மாறி திரைப்படங்கள் வாயிலாக மக்கள் மனதில் பதியவைக்கப் படுகிறது.

> ‘‘பொண்ணாப்பொறந்தா ஆம்பிளகிட்ட
> கழுத்த நீட்டிக்கணும் அவன்
> ஒண்ணு ரெண்டு மூணு முடிச்சு போட்டா
> மாட்டிக்கணும்...’’

என்று எம். ஜி. ஆர். காலந்தொடங்கி தற்போதைய கதாநாயகன் ‘சரவணன்’ வரை கதையில் மாற்றமில்லை (செவத்தபொண்ணு). இக்கதைகளில் வரும் நாயகி படித்தவள்,

மார்டன் உடைகளை அணிபவள், திமிர் பிடித்தவள், யாரையும் மதிக்காதவள். அவளை அடக்குவதற்கு கதாநாயகன் தேர்ந்தெடுக்கும் ஒரே வழி அவள் விருப்பமின்றி அவள் கழுத்தில் தாலி கட்டிவிடுதல். தாலிகட்டியவுடன் ஏதோ ஒன்று நடந்த மாதிரி கதாநாயகி அடிபணிந்து 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்று அவன் பின்னே சென்றுவிடுவாள். அதுவரை இருந்த பெண் பிம்பம் அழிக்கப்பட்டு சேலைகட்டிய, பூவும் பொட்டும் வளையலும் மெட்டியும் தாலியுமணிந்து கதாநாயகி தெய்வமகளாக வருவாள். மக்களும் பார்த்துவிட்டு இதுதான் இந்த மண்ணுக்குரிய பெண் என்று ஏற்றுக் கொள்ளும்படியாக காட்சியமைப்பது தாலியை வைத்தே படங்களுக்கு (கிழக்கு வீதி, செவத்தபொண்ணு, சின்னத்தம்பி, இன்னும் பல படங்களைச் சான்றாகக் கூறலாம், கதைபண்ணியதாகக் கூறப்படும் 'பதவிப் பிரமாணம்' வரை பெண்ணின் முதல் அடிமை விலங்கு 'தாலி' என்பதைக் காட்டாமல் புனிதமான, தெய்வீகமான ஒரு பொருளாக 'தாலி' சித்தரிக்கப்படுகிறது. கணவன் இருந்தால்தான் மதிப்பு. இல்லையென்றால் விதவை பல்வேறு துன்பங்களுக்கு ஆளாவாள் என்பதைச் சித்தரிக்கும் காட்சிகள். இதில் இக்காட்சியில் வரும் விதவைகளுக்கு நடக்கும் சடங்குகளை தாலியறுத்து பாலில் போடுதல், பூவையும் பொட்டையும் எடுத்தல், வளையலை உடைத்தல், வெள்ளைச் சேலையைத் தருதல் - உதாரணம் ராஜகுமாரன். இக்காட்சிகள் தாய்மார்களின் அனுதாபத்தைப் பெற்று படம் என்றும் மூன்று வாரம் தொடர்ந்து ஓடும். அதுபோல விதவைத் தாய்க்கு அவமதிக்கும் வகையில் மீண்டும் திருமணச் சடங்குகளை செய்ய முயல்வது போல் காட்சிகளை அமைத்தல். விதவைப் பெண்ணுக்குப் பொட்டு வைத்தல், பூ வைத்தல் அதற்கு அப்பெண் உடன்படாது மக்களின் பரிதாபத்தைப் பெறுதல். தங்கையை அல்லது தாயை இவ்வாறு செய்யும் காட்சி போய் மனைவிக்கு கணவன் உயிருடன் இருக்கும்போது செய்வதாகக் காட்டும் 'வண்டிச்சோலை சின்ராசு' 'நம்ம அண்ணாச்சி' படங்களில் பெண்கள் விதவையாவது மிகவும் கொடுமை என்ற பிம்பம் கட்டமைக்கப்படுகிறது. இத்தகைய காட்சிகள் குறிப்பாகப் பெண்களைக் கவர்வதற்காகவே செய்வதாக இயக்குநர்கள் கூறுவதையும் காணலாம். இத்தகைய காட்சிகளை விரும்பிப் பார்க்கும் பெண்கள் யார் என்பதில் எவ்வித ஏற்றத்தாழ்வுமில்லை - மரபாக பெண் - கற்பு -விதவை- மலடி என்ற பிம்பங்களை மனதில் ஆழமாகப் பதியவைத்திருக்கும் ஆண் நோக்கு உள்ளவரை பெண்களிடம் இப்பிம்பங்கள் பற்றிய விழிப்புணர்வு தோன்ற சாத்தியமில்லை.

பெண் பற்றிய கருத்துருவத்தைத் தக்க வைக்க திரைப் படங்கள் உதவுகின்றன. பெண் அழகாக இருக்கவேண்டும், குலமகளாக விளங்க வேண்டும். மகளாக, மனைவியாக, தாயாக, பாட்டியாக ஆணைச்சார்ந்தே வாழவேண்டும். ஆணின் பாதுகாப்பில் இருக்க வேண்டும். ஆண்களை எதிர்த்துப் பேசக் கூடாது. அப்படி பேசுபவள் அடங்காதவள். கணவன், தந்தை, விருப்பப்படி நடக்க வேண்டும். விருப்பத்திற்கு மாறாக நடப்பவள் நல்ல பெண் அல்ல. இத்தகைய கருத்துருவத்தை உருவாக்க முரண்பாடான இருமை உதிர்வுகளாக—

| | | |
|---|---|---|
| அடங்கிய மனைவி | × | அடங்காத மனைவி |
| பணக்காரி | × | ஏழை |
| வேலைக்குப் போகும் பெண் | × | போகாத பெண் |
| குலமகள் | × | விலைமகள் |
| அடக்கமான பெண் | × | அடங்காத பெண் |
| சேலை கட்டிய பெண் | × | மார்டன் உடையணிபவள் |
| கற்புடைய பெண் | × | கற்பிழந்த பெண் |
| மணமானவள் | × | விதவை |

இவற்றின் மூலம் இப்படிப்பட்டவள் தான் பெண் என்ற நிலைப் பாட்டை மக்கள் மனதில் பதிய வைக்கின்றன திரைப்படங்கள். இருமை எதிர்புகளின் புதைநிலையில் இருக்கும் கட்டமைப்பு ஆணாதிக்கம் விரும்பும் பெண்ணடிமையாகும். மரபாக வரும் ஆணாதிக்கக் கருத்துருவத்தில் பெண் பற்றிய நிலை இருவித மாக இருக்கிறது. ஒன்று பெண்ணை போகைப் பொருளாக, அலங்காரப் பதுமையாக, அடிமையாகப் பார்ப்பது, மற்றொன்று தாயாக, கன்னியாக, தெய்வமாக, அதீத சக்தியுடையவளாகப் பார்ப்பது. இத்தகைய மரபான பார்வையை முன்னிறுத்தவும் இவை போன்ற இருமை உதிர்வுகள் உத்தியாகப் பயன் படுகின்றன.

பெண்ணைத் தாயாகப் பார்ப்பது என்பது புறத்தில் நன்றாக இருந்தாலும் அவளது அடிமை விலங்கின் முதல் கன்னியாக நாம் அதை அடையாளங் காணலாம். தாய்மை என்ற கருத்துருவப் பின்னணிதான் கன்னிமை, கற்பு, திருமணம், குடும்பம், உறவு போன்ற பல நிலைகளுக்கான

ஆதாரமாகக் காட்டப்படுகிறது. தாய்மை - உலகில் அன்பு, கருணை மட்டுமே உண்டு, தியாகம் உண்டு என்ற சித்தரிப்பு களால் தாய்மை போற்றப்படுகிறது. தாய்க்கு அநீதி இழைத்தவன் தண்டிக்கப்படுவான். தாயால் அல்ல, மகனால். தாய் எப்படியாவது மகனைக் காப்பாற்றுவாள். தாய்க்குப் பின் தாரம் அவனை போஷிப்பாள். அவனது வருமானத்தில் குடும்பத்தை சிறப்பாக நடத்துவாள். தனக்கென்ற தனிப்பட்ட விருப்பு வெறுப்பு கிடையாது. கணவன் சொல்லுக்குக் கட்டுப் பட்டவள். தாய்ப்பாசம் தடுத்தாலும் தளராத உள்ளம் படைத்த வளாக சித்தரித்தல், 'சின்னத் தம்பி' 'செந்தமிழ்ப்பாட்டு' 'ஆனஸ்ட் ராஜ்' 'வீரா'. அநேக திரைப்படத் தாய்மார்கள் விதவைகளாகவே வருவதற்குக் காரணம் என்ன? என்பதை யோசிக்க வேண்டியுள்ளது - மகனால் ஆணால் பாதுகாக்கப் படும் பரிதாபத்திற்குரியவள் பெண் - என்ற பிம்பத்தை வலி யுறுத்தும் முகமாக இத்தகைய கதைப் பின்னணி உருவாக்கப் படுகிறது.

அடுத்ததாக கதாநாயகி பற்றிய பிம்பங்கள். கதாநாயகி அழகானவள், குறும்புக்காரி; நாயகனது பார்வைக்காகவும் தொடுதலுக்காகவும், உறவுக்காகவும் ஏங்குபவள் என்ற சித்தரிப்பு இப்போதுள்ள படங்களில் அதிகரித்துள்ளது. ('ஆனஸ்ட் ராஜ்') ஆண் தொட்டவுடனே உணர்ச்சி மயமாகி விடுவாள். தன் உடல் அழகால் எத்தகைய ஆணையும் வீழ்த்தி விடுவாள். மழை பெய்தால் போதும் கதாநாயகி பயங்கி விடுவாள். எளிதில் உணர்ச்சிக்காட்படும் தன்மையுடைய பஞ்சு போன்றவள். ஆண் நெருப்பு போன்றவன். இந்த மாபான உவமை தான் படங்களுக்கு மிகமிக அடிப்படையான கட்டு மானம். இவளது உணர்ச்சியைத் தூண்ட பின்னணியில் மழை மற்றும் துணை நடிக நடிகையர்களின் ஆடலுடன் கூடிய காட்சிகள் கட்டாயம் இடம்பெறும். இந்தப் பாடல் காட்சியின் பின்புலம். பாடலின் அர்த்தம் புரியாவிடினும் உருவாக்கப்படும் பிம்பங்களால் காட்சி இன்பம் (Visual pleasure) பார்வையாளர் களுக்கு உண்டாக்கப்படுகிறது. பாலியல் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய பிம்பங்களின் தொகுப்பாக பாடல்கள் இடம் பெறுவதற்கு பெண்கள் மிக குறைந்த ஆடையுடன் தோற்ற மளிக்கின்றனர். துணை நடிகைகளின் பாலுறுப்புக்கள் திரை முழுதும் தெரியும்படி கேமிராக்கள் செயல்படுகின்றன. இப்பிம்பங்கள் உருவாக்கும் கருத்துருவம் பெண் பாலியல் முறைக்காகப் பயன்படும் ஒரு வஸ்து என்பதை மீண்டும்

மீண்டும் வலியுறுத்துகிறது. இத்தகைய பாடல் காட்சிகள் மூளையின் சலனத்தில் பதிந்து பெண் பற்றிய இழிவான பிம்பத்தைக் தக்கவைக்கின்றது.

கதாநாயகியை கதாநாயகன் பாட்டுப்பாடி கேலி செய்து அவளை அடக்குதல். பெண் ஆணால் அடக்குவதற்காகவே படைக்கப்பட்டவள். அவளை எத்தனை வயது ஆண் வேண்டுமென்றாலும் கேலி செய்யலாம். ஜென்டில்மேன் பாடல் தொடங்கி பல பாடல்கள். 'இந்து' படத்தில் வரும் கதாநாயகியை கேலி செய்பவர்கள் மூட்டை தூக்கும் கூலியாட்கள். பெண்ணின் பாலுறுப்புக்களை முழுவதும் உணவுப் பொருட்களாக மாங்கா, தேங்கா, பூசணிக்காய், கப்பக்கிழங்கு, கோழிக் குழம்பு வருணித்தல்களால் பெண்ணை உண்ணப்படும் பொருளாகச் சித்தரித்தல்—

''பொம்பளைக்கு லேணும்
அச்சம் மடம் நாணம் - இல்லையின்னு
போனாலே வம்பிழுக்கத் தோணும்''

என்று இதற்கு ஒரு விளக்கம் வேறு.

பெண்களைப் பற்றிய உளவியல் சித்தரிப்புக்களும் அதிகம். பெண் எதற்கும் பயப்படுவாள், தனியே இருப்பது அழகல்ல, அழகாக இருக்க வேண்டும், சமைக்க, குடும்பத்தை நிர்வகிக்கத் தெரியவேண்டும். கணவனின் அன்பைப் பெறுவதில் எவ்வித தடையும் கூறக்கூடாது. ஆண் தொட்டாலே கற்பு போய்விடும், ஓர் ஆணுடன் தான் தொடர்பு கொண்டோம் என்று பழி ஏற்பட்டாலே பொறுக்காது தற்கொலை செய்யவேண்டும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, கற்பு, நகை முகம், தியாகம், அன்பு, கருணை, பொறுமை போன்ற குணங்களின் குன்றாக இருக்கவேண்டும். ஆண் என்றால் வீரம் மட்டும் போதும். இத்தகைய மரபான குணச்சித்தரிப்பு திரைப்படங்களில் கச்சிதமாகப் பின்பற்றப்படுகின்றன. மேற்கூறிய குணச்சித்திரிப்பில் மாறியவளாக இருக்கும் பெண்ணை கதாநாயகன் திருமணம் செய்து அவளை நல்ல பெண்ணாக மாற்றிவிடுவான் ('மன்னன்' 'சிங்காரவேலன்' 'வீரா') கதாநாயகியை மாற்ற அவனுக்கு தேவையானது 'தாலி' அல்லது திருமணச்சடங்கு மற்றும் உடலுறவு மட்டுமே. சடங்குகளாலும் சமூக மதிப்புகளாலும் கட்டமைக்கப்படும் பெண் பிம்பங்கள் பார்வையாளர்களான பெண்களின் மனதில் நன்கு பதியவைக்கும் காட்சி உத்திகளாகக் கையாளப்படுகின்றன. இவை தவிர மதச் சடங்குகள், வழிப்

பாட்டுச் சடங்குகள் வாயிலாகவும் பெண்ணடிமை பற்றிய சித்தரிப்புகள் இடம் பெறுவதைக் காண்கிறோம். 'மாரியம் மனும்' 'அம்பிகை'யும் கதாநாயகன் கதாநாயகி கழுத்தில் தாலி கட்டுவதற்காகத் தயாராக தாலியணிந்திருப்பார்கள். கோவிலில் வைத்து தாலிகட்டியவன் எப்படிப்பட்டவனாக இருந் தாலும் அவனைக் கணவனாகக் கருதவேண்டும், இல்லாவிட் டால் ஆத்தாவின் கோபத்திற்கு அவள் ஆளாக நேரிடும். கணவன் கெட்டவனாக இருந்தால் அவன் திருந்தும் வரை விரதம் இருக்க வேண்டும். குளித்து ஈர உடையுடன் பிரகாரத்தை அங்கப்பிரதட்சனம் செய்யவேண்டும். மண்சோறு உண்ண வேண்டும். சுமங்கலிகளுக்கு மரியாதை செய்யவேண்டும் (புருஷ லட்சணம்). இந்தச் சடங்குகளில் கதாநாயகி மட்டுமன்றி அம்மனும் குளித்து கவர்ச்சியாகத் திகழும் காட்சியை நம் படங் களில்தான் காணமுடியும். தெய்வக் கதைகளாக எடுக்கப்படும் இராம நாராயணன் படங்களில் பெண்கள் தவிர நாய், குரங்கு, பாம்பு போன்ற உயிரினங்களும் கவர்ச்சி காட்டும் - கனவுக் காட்சிகள் இடம் பெறும். இவையெல்லாம் 'பெண்ணடிமை' என்றால் என்ன என்பதைப் பற்றி சிந்தனையைக்கூட எழுப்ப முடியாமல் செய்யும் தந்திரங்களாகும். அன்னையின் சக்தி யைப் பிரதிபலிக்கும் படங்களிலும் அம்மனும், கதாநாயகியும் பெண்ணடிமைச் சக்திகளாக சித்தரிக்கப்படுவதைப் பார்க் கிறோம். பார்வதியே சிவனுக்கு அடங்காத காரணத்தால் தான் பூமியில் தோன்றி பல்வேறு சோதனைகளை அடைந்தாள் என்ற ஆண் நோக்கு கதையாடல்தான் பெண்களுக்கு விருப்ப மான அம்சம். அதைத்தான் நாங்களும் படமாக தயாரிக் கிறோம். தாய்க்குலத்தின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதே எங்கள் நோக்கம், இது தவிர அம்மனுக்கு தீச்சட்டி எடுத்தல், வேப்பிலை ஆடையுடன் வலம் வருதல், ஈரஉடையுடன் உருளுதல், அலகுகுத்தல், காவடி எடுத்தல் போன்ற வழிப் பாட்டுச் சடங்குகளின் வாயிலாகவும் 'பெண்ணடிமை' திரைப் படங்களில் கையாளப்படுவதைக் காண்கின்றோம். இச்சடங்கு களில் மூடநம்பிக்கையைப் போக்கும் எவ்வித விமர்சனமும் பற்றி காட்சியில் இடம் பெறுவதில்லை என்பதும் ஒருபுறம் இருக்க, இக்காட்சிகள் எடுக்கப்படும் நோக்கமே பெண்களின் பாலுறுப்புக்களைக் காட்சிப்படுத்தும் ஆண்நோக்கு ஒன்றே பிரதானமாக இடம் பெறுகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

மரபான மொழிப்பிரயோகத்தால் 'பொம்பள சிரிச்சா போச்சு' 'கணவனே கண் கண்ட தெய்வம்' 'கல்லானாலும்

கணவன்' 'அடிக்கிற கைதான் அணைக்கும்' 'பொறுத்தார் பூமியாள்வார்' 'பத்தினியைஅனைவரும் வணங்குவார்கள்'எனக் கட்டமைக்கப்படும் வசனங்கள்; மூடநம்பிக்கைகளான 'விதவை எதிர் வந்தால் கெட்ட சகுனம்' 'அழுகுரல் கேட்டால் அவலம்' 'பருவப்பெண் தனியே சென்றால் ஆபத்து' 'மலடி தொட்டால் துளங்காது' இன்னும் இதுபோன்ற பழக்க வழக்கங்களாலும் 'பெண்' பற்றிய மரபுகள் கட்டிக்காக்கப்படும் விதத்தில் காட்சிகள் இடம் பெறுவதைக் காணலாம். முடிவாக இன்றைய திரைப்படங்கள் பெண்பற்றி உருவாக்கியிருக்கின்ற பிம்பம் எல்லா வகையிலும் பெண்ணியத்திற்கு வலிமை சேர்ப்பதல்ல. மாறாக பெண் பலவீனமானவள், ஆண்களின் இன்பத்திற் காகவே படைக்கப்பட்ட ஒரு வஸ்து - பொருள். அதற்கு மேல் அவள் சித்தரிக்கப்படவில்லை. திரைப்படங்களில் பெண்ணை மனித உயிராகப் பார்க்காமல் மனித உடலாகக் கூடப் பார்க்காமல், பாலுறுப்புக்களின் தொகுதியாக தனித் தனியே ரசிக்கும் ஆண் நோக்கே இடம் பெற்றுள்ளது. பெண் ணின் வாழ்வு, இயக்கம், விருப்பு வெறுப்புகள், உணர்ச்சிகள், ஆணாதிக்கம் உருவாக்கித் தந்துள்ள சமூகச் சட்டங்களுக்குள்- திருமணச் சடங்கு, பூப்புச் சடங்கு, விதவைச் சடங்கு, வழி பாட்டுச் சடங்கு, இறப்புச் சடங்கு போன்ற சமூக சடங்கு களுக்குள்-மிகவும் இறுக்கமாகக் கட்டமைக்கப்பட்டிருப்பதையே கதைகள், காட்சிகள், பிம்பங்கள், பாடல்கள், வசனங்கள் மூலமாகத் திரைப்படங்கள் மீண்டும் கட்டமைக்கின்றன. இந்த கட்டமைப்பைத் தகர்த்தெறிய முடியாதவண்ணம் மரபான சிந்தனைகள் பார்வையாளனை மழுங்கடித்துக் கொண்டிருக் கின்றன. மேலும் மழுங்கடிக்கும் விதத்தில் திரைப்பட உத்திகள் - ஒளி ஒலியமைப்பு, ஒளிப்பதிவு, காட்சியமைப்பு, நவீன உத்திகள், சென்டிமெண்டுகள், பாடல் காட்சிகள், ஆடைக்குறைப்பு, ஆவேச சண்டைகள் போன்ற மசாலாக்கள் செயல்படுகின்றன. குடும்பம், அரசு, கல்வி நிறுவனம், மத நிறுவனம் போன்ற நிறுவனங்கள் கட்டிக்காக்கும் மையங் களை மேலும் வலுப்படுத்தத் திரைப்படங்கள் தகுந்த ஒரு சாதனமாக, அதிகாரத்தின் குவியலாக விளங்குகின்றது என் பதையே இன்றைய திரைப்படங்கள் உணர்த்துகின்றன. பெண்ணின் மீது செலுத்தப்படும் பாலியல் வன்முறையை நியாயப்படுத்தும் திரைப்படங்கள் சமூக ஏற்றத் தாழ்வு களையும், உயர்சாதி × தாழ்ந்த சாதி போன்ற சமுதாய கட்டமைப்பினையும் நியாயப்படுத்துகின்றன என்பதையும் விளங்கிக் கொள்ளலாம். ●

# தமிழகத்தில் தாய், தாய்க்குலம் மற்றும் தாய் - அரசியல்

சி. எஸ். லட்சுமி

[தமிழ் இலக்கியங்களிலும் அரசியல் வாதிகளின் பிரச்சாரத்திலும் தமிழ்ப்பெண் தாயாக போற்றப்படுகிறாள். பெண் உரிமைக்காகவும் பெண் விடுதலைக்காகவும் குரல் கொடுக்கப் படுகிறது. ஆனால் இது ஒரு பிரமை அவ்வளவுதான். சாராம்சத்தில் பெண் அடங்கி ஒடுங்கி இருக்க வேண்டும். குடும்பத்தைப் பராமரிக்க வேண்டும். ஆணின் பெருமைக்கு உறுதுணையாயிருக்க வேண்டும் என்பதே நோக்கமாயுள்ளது. இதனை நிறைவேற்றாத பட்சத்தில் அவளை வேசியாக இழிவு செய்யத் தயங்குவதில்லை. புறநானூற்று காலந்தொட்டு சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்க திரைப்படங்கள் வழியாக ஜெயலலிதா விவகாரம் வரையிலும் இந்நிலை நீடிப்பதை இக் கட்டுரையில் விவரிக்கிறார் சி. எஸ். லட்சுமி (அம்பை) ]

அறுபதுகளின் தொடக்கத்தில், தமிழிலக்கியத் துணையுடன் வளர்ந்திருந்த என்னைப் போன்ற சிறுமிகளின் மனதில் எல்லாப் பெண்களுமே அடிப்படையில் தாய்மார்கள் என்பது குறித்து சந்தேகமே நிலவவில்லை. தாயாக இருப்பதென்பது மண்ணிலிருந்து மரம் முளைத்து வருவது போல அல்லது மரம் கனிகளைத் தாங்குவது போல அவ்வளவு இயற்கையானதும் அடிப்படையானதுமாகும். தமிழ்ப்பாடம் ஒன்றில் வரும் தாலாட்டு தாயைக் குறித்த எங்களது கருத்தைத் தொகுத்துக் கொடுத்தது.

''மண்ணுக்கு மரம் பாரமா?
மரத்துக்கு கிளை பாரமா?
கொடிக்கு காய் பாரமா? பெற்றெடுத்த
குழந்தை தாய்க்குப் பாரமா?''

குழந்தையைப் பெற்றெடுக்கும் அவசியமும் குழந்தையின் பாலான உணர்வுகளும் பெண்ணின் உடலில் இயற்கையாகவே தங்கியுள்ளன என்னும் கருத்தின் விரிவாக்கமே இப்பாடல். நகம், முடி அல்லது குடல்வால் போன்ற உடலியல் பகுதியாக இத்தேவை நிலவுகின்றது. இத்தேவைகள் இல்லாதவர்கள் அல்லது நிறைவேற்ற இயலாதவர்கள் ஏதாவதொருவகையில் குறைபாடுடையவர்கள். குழந்தையொன்றைப் பெற்றெடுக்காத பெண் முழுமையடையாதவள், நிறைவு பெறாதவள். மிகவும் சோகமான நாட்டுப் பாடல்கள் மலடிகளால் பாடப்பட்டவை என்பதில் வியப்பில்லை —அவர்கள் தங்களை காய்க்காத மரங் களுக்கும் வற்றிய ஆறுகளுக்கும் வளப்பமற்ற பூமிக்கும் ஒப்பிடு கின்றனர்.

வேதனை, குருதி மற்றும் கழிவு என்னும் பௌதிக உலகி லிருந்து நீங்கித் திளைக்கும் தாயும், தனது உடலெனும் பொறியில் சிக்கிய துயரமே உருவான மலடியும்தான் வளர் கின்ற தமிழ் ஆடவர் மற்றும் பெண்டிரிடம் மேலோங்கியுள்ள இரு கருத்துகளாகும். தாய் உடலில் - ஒரே பொருளுடன் கூடிய உலகளாவிய ஓருடல் போல - பெண்ணின் இருப்பு தொடர்பான அர்த்தத்தைப் பற்றிய 'உண்மைகளை' பொதிந்து வைப்பதென்பது தமிழ் பண்பாட்டு நெறிகளிலும் நடைமுறைகளிலும் நீடித்ததாயுள்ளது; ஒருவகை அரசியல் செழிப்பதற்கான வளமான பூமியாகத் திகழ்ந்துள்ளது.

தாய் - கருத்தமைவை மட்டுமல்லாது தாயின் சூழலையும் பரிசீலிப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம். தமிழ் பண் பாடு மற்றும் அரசியலின் நடைமுறையில் தாயின் நிலையைக் காணவும்; தாய்மாரை தாய்மார், தாயல்லாதவர், தூய தாயர், பரத்தை தாயார், மகன்களின் தாயர் மற்றும் மகள்களின் தாயார் எனப் பிரித்து அர்த்தங்கள் ஏற்றிடுவதற்கான பலதரப் பட்ட வழிமுறைகளைப் புரிந்துகொள்ளவும் ஒரு முயற்சி 'தாய்' என்பதை சூழலுடன் பொருத்திக் காட்டி, தொடர்ந்து மாறுபடும் பொருளும் பல்பொருளும் அடைவதான தன்மையையும் சாராம்சப்படுத்தலில் தொடரும் அரசியலையும் வெளிப்படுத்தி பிரச்சினைக்குள்ளாக்கும் ஒரு வேலை.

தாய்மையினை தெய்வீகம், புனிதம் மற்றும் தூய்மையின் களன்களாக மாற்றிடும் உடல்களைத் கொண்டவர்களாகத் தமிழ்த் தாய்மார்கள் தமிழ் இலக்கியத்தில் வருகின்றனர். கருவ

றைகள் 'புலிக்குகைகளாகின்றன; அவற்றினின்றும் புலிபோன்ற செம்மாந்த புதல்வர்கள் வருகின்றனர்; யுத்தகளங்களில் மட்டுமே அவர்களைக் காணமுடியும். கோழையான மகன் பிறப்பது தாய்ப்பாலின் குறைபாடே. அப்போது அம்முலைகளைப் பிய்த்தெறிவதே முதல் உள்ளுணர்வாக இருக்கிறது. 'புறநானூறு' இத்தகைய தாய்மாரைச் சித்தரிக்கிறது.

தமிழ்த்தாயின் முலைகளும் கருப்பையும் இயற்கையாகவே அதீத ஆற்றல் கொண்டவையாக உள்ளன - அதன் காரணமாகவே அவள் பெண் என்ற முறையில் நிறைவு காண்கிறாள். சிலப்பதிகாரத்தின் கண்ணகி அறுபட்ட முலையுடன் மதுரை வீதிகளில் ஓடுகிறாள் - அது சினத்தின் காரியமாகக் கருதப்படுகிறது. இருந்தாலும் தன்மீதே தண்டனை விதித்துக் கொள்ளும் 'வருத்திக் கொள்வதில் இன்பங் காணும் காரியமே' அது ஆகும்...பாலூட்டாத முலைகள் சுமையாகிவிடுகின்றன.

தெய்வீகமும் அற்புதமும் ஆற்றலும் கொண்ட தாய்மை பெற்ற இதிகாசத் தாயர்கள் மகன்களின் தாயரே. கிருஷ்ணனின் தாய் யசோதை; ராமனின் தாய் கௌசல்யை; பாண்டவர்களின் தாய் குந்தி; லவ-குசர்களின் தாய் சீதை...மகள்களைப் பெற்றெடுத்த இதிகாசத் தாயர்கள் அவர்களது தாய்மைக்காகக் குறிப்பான வகையில் நினைவு கூறப்படவில்லை. மாதவி நடன மாது. சந்நியாசியாக மாறும் மணிமேகலையைப் பெற்றெடுக்கிறாள். மாதவிக்கு எந்தச் சிறப்பும் சேரவில்லை. முன் காலத்தில் கல்வி, ஆன்மீக சாதனை, மனவளர்ச்சிகளில் ஆண்கள் மேலோங்கியிருந்தனர்; இப்போதோ ஆண்கள் சம்பாதிப்பதில் அக்கறை காட்ட, பெண்களோ, எப்போதும் போல கலைகள், நல்ல சம்பிரதாயங்கள் மற்றும் மதத்தைப் பாதுகாப்பதில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர்; இதன் காரணமாகவே அதிகமாகப் பெண்கள் பிறக்கின்றனர் என்று விளக்கம் தந்தார் காஞ்சிப் பெரியவர் ஒருமுறை. தாம் வாழும் முறையாலும் சிந்திக்கும் முறையாலும் பெண்கள், குழந்தையின் பாலினைத் தீர்மானிக்கின்றனர் என்பதைத் தெளிவுபடுத்துகிறது இவ்விளக்கம்.

திரு. வி. க. வின் ''பெண்ணின் பெருமை''யானது திருக்குறளுக்கு அடுத்தபடியாக அதிகமாக மேற்கோள் காட்டப்பட்டது. சமூகசீர்திருத்த வாதியான அவர் ஒவ்வொரு பெண்ணி

டும் உள்ள தெய்வீகத்தை வழிபட்டார். பெண்மையின் மையமாகத் தாய்மையைக் கண்டார். பெண் ஒடுக்குமுறையை எதிர்த்து எழுதினார்.

முன்காலத்தில் பெண்களுக்கு மேலான அந்தஸ்து இருந்தது என்றும் அவர்கள் இழிநிலை பெற்றது சமீப காலங்களில்தான் என்றும் வாதிட்டார். புறநானூற்றுப் பெண்கள், பெண்கவிகள் மற்றும் கண்ணகியைக் குறிப்பிட்டு, இவர்களெல்லாம் மறக்குலத்தவர்கள், கற்புக்காகப் போற்றப்பட்டவர்கள், கல்வியறிவு பெற்றவர்கள் என்று விளக்கினார். மரபுவழிக் கல்விதான் அவர்களை இந்நிலைக்கு உயர்த்தியது என்று நம்பினார். மேற்கத்தைய கல்வியானது விடுதலை தருவதில்லையாதலால் பெண்களுக்கு உகந்ததல்ல என்றார். இந்தியாவின் பண்பாட்டையும் கலைகளையும் பெண்கள் அறிந்துகொள்ள வேண்டும் என விரும்பினார். தேசியவாதியான அவர், மேற்கத்தைய கல்வி தேசிய உணர்வுகளை ஊட்டாது, கண்ணகியைப் போல் தீரத்தை தராது, மணிமேகலையைப் போல் சீலத்தை வழங்காது என்பதால் அதனை வெறுத்தார்; மேற்கத்தைய கல்வி மூலம் கிடைக்கும் சுதந்திரமானது ஆண்களிடம் அவமரியாதையையும் திருமணத்தின் பால் அலட்சியத்தையும் வளர்க்கும்; தீய பழக்கங்களுக்கு இட்டுச் செல்லும், பெண்மைக் குணங்களை இழக்கச் செய்யும்.

''...பெண் வாழ்க்கையின் இலட்சியம் யாது? தாயாவது. இதுவே படைப்பின் நோக்கமாகும். இயற்கைக்கும் அதுவே நோக்கம். இதற்கு எதிராகச் செயல்பட வைக்கும் ஒன்றை எப்படி கல்வி என்பது?

''பெண்ணை உயர்வடையச் செய்வது எது? உலகிற்கு சேவை செய்து வளரவைப்பதான தாய்மையே. பெண்ணிடம் உள்ள உயர்வெல்லாம் தாய்மை காரணமாகவே. தாய்மையில் தெய்வீகம் உள்ளது. பெண்மையின் இறுதி இலட்சியம் தெய்வீகமே.''

தமது உடல்கள் மூலமாக தெய்வீகத்தை எட்டுவது என்பது தமிழ் பண்பாட்டில், விநோதமான வழிமுறைகளில் தமது உடல் பந்தங்களை வென்ற பெண்களின் கதைகள் உள்ளன. தாம்பத்ய உறவு வைத்துக்கொள்ள இயலாது என கணவன் கருதியதால் பேயாக மாறுகிறார் காரைக்கால் அம்மையார்.

கணவனுக்குப்பாடாத உடலை - அதன் காரணமாக இனவிருத்திக்காக - எலும்புக்கூடாக மாற்றிக் கொள்கிறார்.

**தூய்மை, கற்பு மற்றும் புனிதத்தின் சாயல்களுடன் கூடிய தாய் உருவகம், குறிப்பிட்ட ஒருவகைத் தமிழ்ப் பெண்ணின் தொடர்ச்சிக்காக இருப்பது. உருவகம் என்ற வகையில் அது தாய்மை உணர்வுகளை மட்டும் விவரிப்பதில்லை; குடும்பத்திலும் உலகிலும் தனிச்சிறப்பாக விதிக்கப்பட்ட முறையில் பெண்ணின் இருப்பை நியாயப்படுத்தவும் செய்கிறது.**

இனவிருத்தித் திறன்களுக்கு அழுத்தம் கொடுத்து எல்லாப் பெண்களையும் தாயாராகப் பாவித்தனர் சித்தர்கள்; சைவம் அதனுடன் தாய் - ஆற்றலான சக்திக்கு முக்கியத்துவம் தந்தது. சுயமரியாதை இயக்கம் தனது செல்வாக்கைப் பரப்பிக் கொண்டிருந்த வேளையில் மகாகவி பாரதி ''புதுமைப்பெண்'' -சக்தியின் உருவம் - பற்றி உணர்வாவேசமாகப் பாடினார். சக்தி உருவத்தின் சந்தம், வேகம் மற்றும் வீரியத்தால் உத்வேகம் கொண்டார்; பல பாடல்கள் தீமையை நாசம் செய்யும் காளியை நோக்கிப் பாடப்பட்டன. தனது பண்பாடு குறித்த புத்துணர்வும் கல்வி எழுச்சியும் கொண்ட ''புதுமைப் பெண்'' பற்றி அவர் எழுதினார்; ஆனால் அவளது முக்கியப்பணி அரசியல் சமூக அடிமைத்தனத்தை நொறுக்கித் தள்ளுவதே.

பெண்களுக்கான பத்திரிகை ஒன்றை 1906-ல் அவர் நடத்துகையில், பண்பாடற்ற ஆண்களிடம் அவமானம் அடைவதிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதுதான் பெண்களுக்கு வேண்டியது என எழுதினார். அரசியல் உரிமைகள் அவர்களுக்கு முக்கியமல்ல. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் பெண்கள் திருமணமாகாதவர்கள்; அழகின்மை மற்றும் இதர காரணங்களால் மணமுடிக்க இயலாதவர்கள். ''தனது பிள்ளைகள் முன்னேறுவதைக் காண ஆவலாயிருப்பவள், கல்வி மற்றும் துணிச்சல் அளிப்பதிலும் அளவற்ற மகிழ்ச்சி காண்பவள் நாடாளுமன்ற உறுப்பினராயிருப்பது குறித்து அவ்வளவாகக் கவலைப்பட மாட்டாள்.

சுயமரியாதை இயக்கத்தின் தாய் - பெண் இந்த அடிப்படையில் நிறுவப்பட்டவள். தமிழின் பாலும் தமிழ்க் கலைகளின் பாலும் வேட்கை கொண்டவளும், தமிழ் மகனுக்குத் தனது துணையால் உத்வேகமும் இதமும் அளிப்பவளுமான

இப்புதுமைப் பெண்ணை புகழ் வாய்ந்த மரபிலிருந்து உருவாக்கிக் கொடுத்தார் புரட்சிக்கவி பாரதிதாசன்.

''துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா...''

தமிழ்மொழி, தமிழிசை மற்றும் தமிழர் வாழ்க்கை முறையானது இயக்கத்திற்கு வலுவூட்ட வேண்டும் என்பதன் பொருட்டு, சுயமரியாதை இயக்கம் சில சீர்திருத்தங்களைப் பிரச்சாரம் செய்யத் தொடங்கிற்று. அதில் ஒன்று சுயமரியாதைத் திருமணம்; சடங்குகள், புரோகிதர் மற்றும் தாலி இல்லாதது, 'தாலி' அடிமைத்தளையாகக் கூறப்பட்டது. சுயமரியாதைத் திருமணங்கள் ஒப்பந்த முறைகளாகக் காணப்பட்டன. இவ்வியக்கம் பேசிய இன்னொரு சீர்திருத்தம் விதவை மறுமணம். விதவைகள் குறித்து நெகிழ வைக்கும் கவிதைகளைப் பாரதிதாசன் பாடினார். விதவை மறுமணத்திற்காகவே ''மாதர் மறுமணம்'' என்ற பெயரில் காரைக்குடி மரகதவள்ளி அம்மையார் பத்திரிகை நடத்தினார்.

ஆணைப் பொருத்தவரை சுயமரியாதை என்பது எந்த சாதியைச் சேர்ந்தவனாயினும் சமூகத்தில் தனது உரிமைகள் மறுக்கப்படாதிருத்தல், மத மூடப்பழக்க வழக்கங்கள் இல்லாதிருத்தல், தமிழுக்கோ தமிழ்ப் பண்பாட்டிற்கோ நேரும் எந்த இழிவையும் சகியாதிருத்தல். பெண்ணைப் பொருத்தவரை ஆணுக்கு ஒத்தாசை செய்தலும் தாய்க்குலத்திற்கு உரியவற்றை அங்கீகரித்தலும் ஆகும். ஆணைப் பொருத்தவரை சுயமரியாதை என்பது உலகுடன் உறவு கொள்வதற்காக; பெண்ணுக்கோ, குடும்பத்துடன் கொள்ளும் உறவுக்காக.

சொத்து, விவாகரத்து, காதல், திருமணம் போன்றவை தொடர்பான பிரச்சினைகளெல்லாம் எவ்வாறு பெண்ணை அடிமைப்படுத்துகின்றன என்று விளக்கியதோடு அமையாது, பெண்ணினை அடிமைப்படுத்தும் இடம் கருப்பை என்பதை ஆற்றல்மிகு கட்டுரைகளில் சுட்டிக்காட்டினார். குழந்தைகளைப் பெற்றெடுப்பது, பெண்களை ஆண்களுக்கும், ஆண்களின் விதிகளுக்கும் சார்ந்திருக்கச் செய்கிறது; எனவே உண்மையான பெண் விடுதலைக்கு இப்பிரச்சினையிலிருந்து அவள் விடுபட்டாக வேண்டும். ''கருவுறுதல் பெண் விடுதலைப் பாதையில் தடையாகிறது. பெண்ணுக்கு சொத்தில்லை. வருவாயோ, தொழிலோ இல்லை. எனவே, குழந்தைகளை வளர்க்க

அவர்கள் பிறரைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. மேலும் ஆண்களிடையே பிரம்மச்சாரிகளும் துறவிகளும் உண்டு. சங்கராச்சாரியார்களும் மதபீடங்களைச் சேர்ந்த மற்ற துறவிகளும் உண்டு. துறவிகளாயிருப்பதிலிருந்தும் சங்கராச்சாரியர்களாக இருப்பதிலிருந்தும், சுதந்திரமாக வாழ்வதினின்றும், சொத்து வைத்திருப்பதிலிருந்தும் பிறரால் வணங்கப்படுவதிலிருந்தும் பெண்ணைத் தடுப்பது இக்கருவுறும் சமாச்சாரமே. இதன் காரணமாகத்தான் முன்னேறவும் விடுதலை பெறவும் சுதந்திரமாகும் பொருட்டும் பெண்கள் குழந்தைகளைப் பெற்றெடுப்பதை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்கிறேன்.''

பிரச்சாரம் ஒருபுறம் இருக்க, குடும்பம் மற்றும் சமூகப் பிரச்சினைகளின் அன்றாடப் போராட்டங்களில் கலந்து கொள்வதான பிரமையைத் தருவதற்காக, பொதுமக்களின் கவனத்தில் தான் இருக்க வேண்டிய தேவை தி. மு. க. வுக்கு இருந்தது. திராவிடப் பண்பாட்டின் மேன்மையையும் தமிழகத்தின் அரசியல் நிலவரம் குறித்த அதன் கருத்துகளையும் விவரித்திட வரலாறு - சமூகக் கருத்துகளைத் தேர்ந்தெடுத்தது. பகுத்தறிவு மற்றும் சுரண்டல் எதிர்ப்பு பிரச்சாரத்துடன் உருவாகும் அரசியல் சூழலில் பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்த குறிப்பான அர்த்தங்களையும் இப் படங்கள் தந்தன.

கருணாநிதியின் திரைக்கதை - வசனத்தில் உருவான ''மனோகரா''வில் தாய் - பரத்தை முரண்நிலை முதலாவதாக சித்தரிக்கப்பட்டது. வாரிசுக்குரிய மகனிடமிருந்தும் மனைவியிடமிருந்தும் அரசனை விலக்கி வைத்து நாட்டைக் கவர்வதற்காகச் சூழ்ச்சி செய்யும் பெண்ணைப் பற்றின கதை அது. அரசியும் இளவரசனும் வெற்றி பெறுகின்றனர். வஞ்சகி தண்டிக்கப்படுகிறாள். அரசியை உண்மையான தமிழ்ப் பெண்ணாகச் சித்தரித்திடத் தேவையான சம்பவங்களைக் கதையில் கருணாநிதி நுழைத்தார். **''பராசக்தி'' தி. மு. க.வின் கொள்கை அறிக்கை எனக் கொள்ளத்தக்கது.** அது ஏற்படுத்திய தமிழ்ப் பண்பாடு குறித்த நினைவுகள் மற்றும் பெண்களைக் குறித்த படிமங்கள் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தவை திராவிட நாட்டைப் புகழும் பாடலுடன் படம் தொடங்கும்.

மேல் மட்டத்தில் பெண்கள் சுரண்டப்படுவது குறித்து விவரிப்பதான பிரமையையும், சாராம்சத்தில் உண்மையான

தமிழ்த்தாய் - பெண்ணின் வெல்ல முடியாமையை நிறுவுவதையும் வகை மாதிரியாகக் கொண்ட தனது படங்களுக்கிடையே தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு தீர்மானங்கள் எடுப்பதில் பெண்களுக்கு முக்கியப் பங்கு வந்துவிடாதபடி பார்த்துக் கொண்டது.

1977-ல் எம். ஜி. ராமச்சந்திரன் முதல்வரான போது பெண்களின் நலன் அவரது மனத்தில் சதா இடம் பெற்றுள்ளதாகவும் அவர்களை வழிபடுவதாகவும் காட்டிக் கொள்ள முற்றிலும் வேறான வழியைக் கையாண்டார். அவரது படங்களிலும் தாய்மார்கள் ஆணையிட்டனர், தியாகம் புரிந்தனர், புதல்வர்களுக்காக மாண்டனர். அடிக்கடி தமிழின் மீதும் தாயின் மீதும் சபதம் புரிந்து இரண்டுக்கும் பெருமை சேர்ப்பார் எம். ஜி. ஆர். தனது வீட்டுக்கு ''அன்னை இல்லம்'' என்றும் படப்பிடிப்பு நிலையத்திற்கு தாயின் பெயரான ''சத்யா'' என்றும் பெயர் சூட்டினார்.

அண்ணாதுரையின் ''வேலைக்காரி''யைப் போலவே அவரது படங்களும் படித்த பெண்களை அறிவற்றவர்களாக ஈவிரக்கமற்றவர்களாகக் காட்டின. அவர் வந்து சீர்திருத்தி அல்லது கட்டுப்படுத்தி திருத்திய பிறகே அப்பெண்கள் நல்வழிக்கு வருவர்.

சிறிது காலத்திற்கு முன் தமிழக சட்டமன்றத்தில் நடந்த சம்பவங்கள், தாய்குலம் பகடைக்காயாக மாறின; இவ்வரசியல் பெண்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கு சாதகமாக எதுவும் சேர்க்கவில்லை என்பதையே தெளிவுபடுத்தின. தாய் - வேசி முரண் நிலையே ஜெயலலிதாவுக்கு இன்னும் அளவுகோலாக உள்ளது. எம். ஜி. ஆரின் காலத்தில் 'அண்ணி' என்றழைக்கப்பட்டவர். எம். ஜி. ஆர். இறந்தபோது தனது தூய்மையை நிரூபிப்பதற்காக உடன்கட்டை ஏற விரும்புவதாகத் தெரிவித்தார். முதல்வர் கருணாநிதியால் சட்டமன்றத்தில் வேசியெனக் கூறப்பட்டதாகக் கூறியுள்ளார். உடன்கட்டை ஏறும் நினைவுகளைக் கிளப்பி, தமிழ்த்தாயாக பத்தினி என்ற முறையில் ஜெயலலிதா தனது அந்தஸ்தை நியாயப்படுத்த வேண்டியிருந்தது. அவரது ..ரிக்கைகளை இழிவுபடுத்துவதற்காக, அரசியல் தலைமைக்கு ..ரும்பின அவரது நிலைபாட்டைக் கேள்விக்குள்ளாக்க ..பவர்கள் பரத்தைப் படிமத்தை நினைவூட்டினர். அவரது ..ரிமைகள் தூய்மையின் அடிப்படையில் முன் வைக்கப்

பட்டன. மறுக்கப்பட்டன. ஒரு பண்பாட்டின் புகழிற்காகவும் குறிப்பிட்ட ஒருவகை அரசியல்வாதிகளின் அரசியல் ஆதாயத் திற்காகவும் திட்டமிடப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட இவ் அளவு கோல், இப்போது ஒரு பண்பாட்டின் 'உண்மை' யாக மாறி யுள்ளது - உள்ளார்ந்ததும் இயற்கையானதும் மாற்றமுடி யாததுமான ஒன்றாக. டாக்ஸியில் வந்து கொண்டிருந்த போது டிரைவரிடம் வறட்சி பற்றி பேசியபோது அசந்து விட்டேன். ''மழை பெய்யாது. பத்தினிகளே இல்லை இப் போது'' என்றார் திட நம்பிக்கையுடன். ●

குறிப்பு :

அக்டோபர் 20-29, 1990 எக்கனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லியில் வந்த கட்டுரையின் சுருக்கமான தமிழாக்கம்.

அழுத்தம் : மொழிபெயர்ப்பாளர். (தமிழில் : சா. தேவதாஸ்)

('ங்' 1992)

89996
16-7-98